Vol.7, Issue 7 | Annual Subscription ₹ 480
Rotary News, December 2024, Chennai

டிசம்பர் 2024

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org




Rotary


Rtn. Stephanie Urchick
RI President


Rtn. Meeran Khan Saleem
District Governor


Rtn. AKS V.R. Muthu
District Governor (2022-23)

Rotary
District 3212

THE MAGIC OF ROTARY


Rtn. Rajendra Man Sherchan
District Governor, RID 3292
Nepal and Bhutan

Rotary
Club of Bagmati Kathmandu

GLOBAL GRANT
GG- 2352110

# Prevention of Blindness in Premature Babies

## Operation with Fundus Camera and Indirect Laser

- Retinopathy in Premature Babies lead to 'BLINDNESS'.
- 25 % of premature babies have some form of Retinopathy and among them nearly 7% needs urgent treatment.
- Lack of technology for diagnosis and prevention in Nepal.
- Technology Support for diagnosis and prevention to Tilganga Institute of Ophthalmology, Gaushala, Kathmandu.
- Technology (Equipment)
  - Green laser console, only 532nm
  - Laser Indirect Ophthalmoscope (LIO)
  - Handheld Portable Fundus Camera

LETS PREVENT & MAKE LIFE BETTER

Current Support From Clubs

| | | |
|---|---|---|
| RC of Himalayan Golfers | : | 3,100 USD |
| RC of Durbarmarg | : | 1,050 USD |
| RC of Kasthamandap | : | 1,000 USD |
| RC of Thamel | : | 700 USD |







Rtn. Chehab El Alwar
RC of Las Vegas WON
RID 5300


Rtn. Manju Dhamala Thapa
RC of Bagmati Kathmandu
RID 3292

Join Us With Your Support


Rtn. ASP. Arumugaa Selvan

LEKHA ads/Dec 24/ Rotary/FIW

Rtn. Manju Dhamala Thapa, President, Rotary Club of Bagmati Kathmandu
977-9841222254 | manjurotary1234@gmail.com

ADVT.

# உள்ளே




12

செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைந்த முதல் அங்கன்வாடி!



20

ஒலி, கலை மற்றும் நடனம் மூலம் மனநலத்தை மேம்படுத்துதல்



28

ம.பி.யில் முதியோர் கல்வியில் கவனம் செலுத்தும் ரோட்டரி!



42

ஒரு ரோட்டேரியன் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து வீடு கட்டுகிறார்



52

கனவுகள் சிறகடிக்கும் நேரம்



54

சிறப்புக் குழந்தைகளின் நலனில் கவனம் செலுத்தும் RC நாக்பூர் நார்த்



60

இளைஞர்களை ஊக்கப்படுத்தும் மதுரை ரோட்டேரியன்ஸ்



Rotary

A publication of Rotary Global Media Network


**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து ₹324-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## தகுதியான அஞ்சலி



ரோட்டரி நியூஸ் அட்டையில் ரத்தன் டாடாவின் படத்தைப் பார்த்து மனதுக்கு இதமாக இருந்தது. காந்திஜி மற்றும் நேருவுக்குப் பிறகு, டாடா குழுமத்தின் மறைந்த தலைவர் மிகவும் விரும்பப்படும் மற்றும் மதிக்கப்படும் இந்தியராக இருப்பார். உங்கள் தலையங்கத்தின் முடிவில் நீங்கள் சரியாகச் சொன்னது போல் - “ரத்தன் டாடா போன்றவர்களால் தான் புராணங்கள் உருவாகுகின்றன.”

அதுல் பிடே
RC தானே ஹில்ஸ் — D 3142

இந்தியாவின் கோஹினூர், மறைந்த ரத்தன் டாடாவுக்கு சிறப்பு அஞ்சலி செலுத்தியதற்காக ரஷீதா பகத்துக்கு நன்றி. மனிதகுலத்திற்கான அவரது பங்களிப்பு ரோட்டரியின் முக்கிய நோக்கங்களுடன் ஒத்துப்போகிறது. கோடிக்கணக்கான இந்தியர்களுக்கு, நெருக்கடிகளின் போது டாடாவின் தேசபக்தி பிரகாசமாக கொழுந்து விட்டு எரிந்தது. அவர் சிறந்த நன்கொடையாளர் மற்றும் கல்வி, சுகாதாரம் மற்றும் பிற சமூக காரணங்களுக்காக நிறைய பங்களித்தார்.

T D பாட்டியா, RC டெல்லி
மயூர் விஹார் — D 3012

இந்தியாவின் கோஹினூரான ரத்தன் டாடாவுக்கு அளித்த அழகான அஞ்சலிக்கு நன்றி. நேர்மையான சேவையை வழங்க விருப்பம் எந்த ஒரு தொழிலதிபரின் கண்ணியத்தையும் உயர்த்தும் என்பதை அவர் உலகிற்கு நிரூபித்தார். எளிமைக்கும் கருணைக்கும் பெயர் பெற்ற அந்த நபரின் தலைமையில் டாடா குழுமம் செழித்தது. குழும ஊழியர்களுக்கான அவரின் அன்பும் பராமரிப்பும் முன்மாதிரியானவை. மேலும், அவர்களின் நேர்மை, விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்புக்கு பாராட்டாக தனது சொத்தின் ஒரு பகுதியை சாதாரண மக்களுக்கு வழங்கியது பாராட்டத்தக்கது. அவரது இழப்பு இந்திய தொழில்துறைக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே ஈடுசெய்ய முடியாத ஒரு இழப்பு.

R சீனிவாசன், RC பெங்களூர்
J P நகர் — D 3191

இந்த நூற்றாண்டின் ஜாம்பவான் ரத்தன் டாடாவின் புகைப்படத்தை அட்டையில் வெளியிட்டதற்கு நன்றி. வெறுப்பவர்களே இல்லாத மனிதர் என்பது அவரை விவரிக்க சரியான சொற்றொடர், மேலும் அவரது புகழ்பெற்ற மேற்கோள்களில் சிலவற்றை ஆசிரியர் வழங்கியது சிறப்பான செயல். கட்டுரை மற்றும் ஆசிரியரின் குறிப்பு இரண்டும் அந்த மாமனிதருக்குப் பொருத்தமான அஞ்சலியாக இருந்தன.

அனைத்து மூத்த RI தலைவர்களும் TRFக்கு நன்கொடை அளிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கியுள்ள நிலையில், RIPE மரியோ உறுப்பினர் குறைவதற்கான காரணத்தை நன்கு விளக்கியுள்ளார்.

பிலிப் முலப்போன் M T, R C
திருவனந்தபுரம் சப்அர்பன் —D 3211

## RIPE உடனான ஒரு நேர்மையான நேர்காணல்

ஆசிரியருடன் ஒரு நேர்மையான நேர்காணலில், RIPE மரியோ சில நாடுகளில் உறுப்பினர்களின் வீழ்ச்சியைப் பற்றி பேசினார், இது சுவாரஸ்யமாக இருந்தது. இந்தியாவில் ரோட்டரி உறுப்பினர் வளர்ச்சி, TRF வழங்குதல் மற்றும் உலகளாவிய மானியங்கள் ஆகியவற்றில் சிறந்து விளங்குகிறது. கார்ப்பரேட் லாபத்தில் ஒரு சதவீதத்தை சமூகப் பணிகளுக்குப் பயன் படுத்துவதற்கான இந்தியாவின் சட்டத்தின் காரணமாக, நாம் பெரிய வெற்றியை அடைய முடிகிறது. ஆனால், இந்தியாவில் உள்கட்டமைப்பு மற்றும் பிற வசதிகள் இருந்தாலும், போலி சங்கங்கள், உயர்த்தப்பட்ட எண்கள் மற்றும் தேர்தல் தகராறுகளால் ரோட்டரி இங்கு அமைதியாக இல்லை அதனால் ஒரு மாநாட்டை இங்கே நடத்த முடியாது என்றும் அவர் கூறினார். ரோட்டரி “பழைய சித்தாந்தம் கொண்டது” என்ற பிம்பத்தை அகற்றும் வகையில் நாம் தீர்வு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

VRT துரைராஜா, RC திருச்சிராப்பள்ளி — D 3000

மதுரை மாநாட்டில் RIPE மரியோ கூறியது போல், உலகளாவிய உறுப்பினர் எண்ணிக்கையில் திடுக்கிடும் சரிவு என்ற கட்டுரையை ஆர்வத்துடன் படித்தேன். 2021–23 ஆம் ஆண்டில் 658 சங்கங்களை உருவாக்கி, புதிய சங்கங்களை பட்டயப்படுத்துவதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என்பது நல்லது. ஆனால், இந்தியா சிறப்பாகச் செயல்பட்டாலும், மோசமான நடத்தையால் அதன் நல்ல எண்ணிக்கையைக் கெடுக்கக் கூடாது என்றும் அவர் கூறியுள்ளார். அவரது எச்சரிக்கைக்கு நாம் செவிசாய்க்க வேண்டும் மற்றும் செயற்கை எண்களை உருவாக்கக் கூடாது, மேலும் ரோட்டரியில் முழுமையாக ஈடுபாடுடன் இருக்கும் புதிய உறுப்பினர்களைப் பெற வேண்டும்.

M பழனியப்பன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

RID 3262 சார்பாக, ரோட்டரி நியூஸ் புதிய தோற்றத்திற்காக ஆசிரியர் மற்றும் அவரது குழுவை வாழ்த்து கிறேன். RILM சுமார் 800 சிறைக் கைதிகளுக்கு எழுத்தறிவு பரி ாக வழங்கியது இதயத்தைத் தொடும் திட்டம். அடுத்த கட்டத்தில், பெண் கைதிகள் திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று நம்புகிறேன்.

சின்மயா மஹாபத்ரா
RC ராஜ்தானி புவனேஸ்வர் — D 3262

*ரத்தன் டாடா தான் இந்தியாவின் உண்மையான கோஹினூர். ரோட்டரி இன்டர்நேஷனலுடனான அவரது தொடர்பு மற்றும் அவரது புகழ்பெற்ற மேற்கோள்களைப் பற்றி அறிந்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். இந்த அற்புதமான மனிதரின் மறைவால் ஒட்டுமொத்த தேசமும் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளது.*

*திரேந்திரநாத் பத்ரா*
RC *பன்பூர் பலுகான்* — D 3262

*நவம்பர் இதழ் மனதுக்கு கொஞ்சம் கனமாக இருந்தது. ரத்தன் டாடா அவர்களை இழந்த வலி நம் மனதில் இருந்ததால், அவரது மேற்கோள்கள் இந்த இதழில் உள்ள கட்டுரைகளுக்கு மிகவும் பொருத்தமானவை, குறிப்பாக ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கை குறைவதற்கு இவை பொருந்தும். நான் படித்த சிறந்த இதழ்களில் இதுவும் ஒன்று!*

*பள்ளிகொண்டா மோகன்குமார்*
RC *பள்ளிகொண்டா* — D 3231

அக்டோபர் இதழில் ரோட்டரி இதயங்களின் ராஜா என்ற சிறப்புக் கட்டுரை, சிறந்த படங்களுடன், பல வாசகர்களின் இதயத்தைக் கவர்ந்தது.

சௌமித்ரா சக்ரவர்த்தி, RC கல்கத்தா யுனிவர்ஸ் — D 3291

## பழங்குடியினருக்கான குறிப்பிடத்தக்க திட்டம்

அக்டோபர் இதழில் இடம்பெற்ற RC பாம்பே பே வியூ மேற்கொண்ட குறிப்பிடத்தக்க திட்டங்கள் என்னைக் கவர்ந்தன. குடிநீர் வச திக்காக கிணறுகள் அமைத்தல், விவசாயிகளுக்கு மாமரக்கன்றுகள் வழங்குதல், நவீன விவசாய தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல் ஆகியவை பாராட்டுக்குரியவை.

கர்னல் (ஓய்வு) விஜய்குமார் C
RC ஆலப்பி கிரேட்டர் — D 3211

ரஷீதாவின் பால்கர் பழங்குடியினர் கட்டுரை அற்புதமாக இருந்தது. இந்த பழங்குடியினருக்காக RC பாம்பே பே வியூவின் பணி பாராட்டுக்கு உரியது. இந்த சங்கத்தின் கடின உழைப்புக்கு மிக்க நன்றி.

வினோத் நேமா, RC இந்தூர் சென்ட்ரல் — D 3040

## DEI பற்றிய நுண்ணறிவுத் தலையங்கம்

கொல்கத்தா மருத்துவமனையில் இளம் மருத்துவரின் கொடூரமான கற்பழிப்பு மற்றும் கொலை பற்றிய அக்டோபர் தலையங்கம் ரோட்டரியின் DEI மந்திரத்தின் மீது கவனம் செலுத்துகிறது. முன்னாள் சங்கத் தலைவர் ரிஸ்வானா ஜமீன்தார் மற்றும் RC பரூச் உறுப்பினர்கள் பாலியல் தொழிலாளர்களின் சகிகளாக மாறியதற்காகவும், அவர்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை வழங்கியதற்காகவும் வாழ்த்துகள்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப் நகர் — D 3080

பாலியல் தொழிலாளர்கள் பற்றிய கட்டுரை மற்றும் DEI பற்றிய தலையங்கம் ஆகியவை சரியான நேரத்தில் வந்துள்ளன. வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கேரளா ரோட்டேரியர் களின் நல்ல பணி பாராட்டுக்குரியது. RC அவுரங்காபாத் கிராமத்தை தத்தெடுத்தது பாராட்டுக்குரிய முயற்சியாகும்.

S N சண்முகம்
RC பண்ருட்டி — D 2981

DEI பற்றிய தலையங்கம், பாலின வேறுபாடு மற்றும் பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்துப் பேசியது மனதைத் தொடுகிறது. வசதி குறைந்தவர்களுக்கு உதவுவதைத் தவிர, இதுபோன்ற பிரச்சினைகளிலும் பாலினக் குற்றங்களைத் தடுப்பதிலும் ரோட்டேரியர்கள் பணியாற்ற வேண்டும்.

R தாயுமானவன்
RC கடலூர் மிட் டவுன் — D 2981

## பள்ளி நண்பர்களை இணைத்த ரோட்டரி செய்திகள்

எனது சங்கம் செய்த ஒரு திட்டம் தொடர்பாக ரோட்டரி நியூஸ் அக்டோபர் இதழில் எனது பெயரைப் படித்த பிறகு எனது பள்ளித் தோழி மேரி குரியன் என்னை அழைத்தார். அவர் கேரளாவில் உள்ள RC மாவேலிகரா உறுப்பினராக இருப்பதால், ரோட்டரி டைரக்டரியில் இருந்து எனது எண்ணைப் பெற்று எனக்கு போன் செய்தார். நினைவுகள் அலைமோத, ஒரு மணி நேரம் நாங்கள் பேசினோம். ரோட்டரி மற்றும் ரோட்டரி நியூஸ் கட்டுரைக்கு நன்றி, ஐந்து தசாப் தங்களுக்குப் பிறகு நாங்கள் மீண்டும் இணைக்கப்பட்டோம். இதுதான் ரோட்டரியின் சக்தி.

உதய் தர்மாதிகாரி
RC புனே சென்ட்ரல் – D 3131

**அட்டையில்:** RID 3012-ன் *திட்டமான செயற்கை நுண்ணறிவு ஒருங்கிணைந்த அங்கன்வாடியின் விளக்கப்படம்.*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

RI தலைவரிடமிருந்து...

# இதயத்தாலும் மனத்தாலும்

ரோட்டரியின் செயல் திட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளதுபோல், நாம் நம்மைத் தகவமைத்துக்கொள்ள வேண்டுமென்றால், நமக்கு வசதியான பகுதியிலிருந்து அவ்வப்போது வெளியில் வரவேண்டும், புதிதாக எதையாவது முயன்று பார்க்கவேண்டும். அவ்வாறு தங்களைத் தகவமைத்துக்கொண்ட இரு சங்கங்களின் எடுத்துக்காட்டுகள், இதோ: ஒன்று, இதயத்தால், இன்னொன்று, தீவிரச் சிந்தனை, வியூகத்தால்.

இந்த ஆண்டின் முற்பகுதியில், RC சண்டிகர் மிட் டவுன், இந்தியா, இதயத்தால் வழிநடத்தியது. சங்கத் தலைவர் நிதின் கபூர் உறுப்பினர்களுடன் ஊடாடவும் உறுப்பினர் எண்ணிக்கையை வளர்க்கவும் விரும்பினார், சங்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தானே அழைத்து, முன்னாள் உறுப்பினர் சந்திப்பு ஒன்றுக்கு அழைத்தார். இதில் எட்டு முன்னாள் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள், இதன் பலன்கள் மிகச் சிறப்பாக அமைந்தன. வந்தவர்கள் தங்கள் இணைப்புகளைப் புதுப்பித்துக்கொண்டார்கள், இப்போதைய உறுப்பினர்களோடுமட்டுமில்லை, உறுப்பினராக இருத்தலின்மூலம் தங்களுக்குக் கிடைத்த தோழமை, உரிமை உணர்வோடும்தான். அந்த மாலையின் முடிவில், ஆறு முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் ரோட்டரி குடும்பத்தில் இணைந்தார்கள்.

கபூர் புதிதாக ஒன்றை முயன்றார், ரோட்டரி குடும்பத்துக்கு அவர்கள் இன்னும் முதன்மையானவர்கள்தான் என்பதைச் சங்கத்தின் முன்னாள் உறுப்பினர்களுக்குக் காண்பித்தார். மக்கள் தாங்கள் தேவைப்படுகிறோம், பாராட்டப்படுகிறோம் என்று உணர விரும்புகிறார்கள். நாம் இந்த இடத்துக்கு உரிமையானவர்கள் என்று அவர்கள் உணர விரும்புகிறார்கள். இதை அவர்களுக்குச் சொல்லும் துணிச்சல் நமக்கு இல்லாவிட்டால், அவர்கள் எப்போதும் அப்படி உணராமலே போய்விடலாம்.

இதனிடையில், கொரியா-விலுள்ள RC சியோல்-ஹன்சூ வெவ்வேறு சங்க மாதிரிகளைப் பரிசோதித்துப் பார்த்து நல்ல பலன் கண்டது. முந்தைய நான்கு ஆண்டுகளில் சியோல்-ஹன்சூ நான்கு செயற்கைக்கோள் சங்கங்களை உருவாக்கிப் பராமரித்துள்ளது: ஒரு சேவைச் சங்கம், இசைக் கலைஞர்களுக்கான ஆர்வ அடிப்படையிலான ஒரு சங்கம், தொழில்முறை வல்லுநர்களுக்கு வழிகாட்டும் நோக்க அடிப்படையிலான ஒரு சங்கம், கல்லூரி மாணவர்களுக்கான ஒரு சங்கம்.

இந்தச் செயற்கைக்கோள் சங்கங்கள் புதுமைச் சிந்தனையின் வழியாக உறுப்பினர் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கென இந்தச் சங்கம் செயல்படுத்திய ஐந்தாண்டுத் திட்டத்தின் பகுதியாகும். இத்தனைச் செயற்கைக்கோள் சங்கங்களை நிறுவிப் பராமரிப்பதன் ரகசியம் என்ன? சியோல்-ஹன்சூ மற்றும் அதன் செயற்கைக்கோள் சங்கங்களுக்கு இடையிலான உறுப்பினர் நிலை நெகிழ்வானது, ஒத்திசைவு கொண்டது. செயற்கைக்கோள் சங்க உறுப்பினர்கள் பலர் ஆதரிக்கும் சங்கக் கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள். அதேபோல், ஆதரிக்கும் சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் செயற்கைக்கோள் சங்கங்களில் பங்கேற்கிறார்கள்.



ஒவ்வொரு செயற்கைக்கோள் சங்கமும் ஆதரிக்கும் சங்கத்திலும் சமூகத்திலும் உள்ள மக்களின் வெவ்வேறு ஆர்வங்களைத் தூண்டுகின்றன, இப்போதைய, வருங்கால உறுப்பினர்களை ஈர்க்கின்றன. இது நெகிழ்வுத்தன்மையை வழங்குவதால், உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்ளவும், புதியவர்களை ஈர்க்கவும் இந்த வியூகம் நன்கு பயன்படும்.

நாம் நம் இதயங்களாலும் மனங்களாலும் தகவமைத்துக்கொள்வது எப்படி என்பதற்கான இரண்டு எடுத்துக்காட்டுகளைத்தான் இங்கு பார்க்கிறோம். ஒவ்வொரு சங்கமும் வேறுவிதமானது. அதனால், நீங்கள் இதைப்பற்றி உங்கள் சங்கத்தின், உங்களைச் சுற்றியுள்ள சமூகத்தின் உறுப்பினர்களோடு பேசவேண்டும். அவர்களிடம் சங்க அனுபவத்தைப்பற்றிக் கேளுங்கள், அதை மேம்படுத்த நீங்கள் என்ன செய்யலாம் என்று கேளுங்கள்.

**ஸ்டெஃப்னி A அர்ச்சிக்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



# தில்லி மாசுபடுதலை தடுக்க

நான் இந்த மாததிற்கான தலையங்கத்தை எழுதும் போது (நவ. 18) தில்லியில் காற்றின் சராசரி தரக்குறியீடு நம்பமுடியாத அளவாக 492 ஆகப் பதிவாகியிருந்தது. சில பகுதிகளில் இது அபாய அளவான 500-ஐத் தாண்டியிருந்தது. வாகனப் புகை, கட்டுமானப் பணிகளால் ஏற்படும் தூசுகள், பயிர்க்கழிவுகள் காரணமாக தில்லியில் காற்று மாசின் அளவு அபாய நிலையில் உள்ளது.

இந்த இதழில் வெளிவந்துள்ள பசுமை காப்போம் மற்றும் LBW ஆகிய இரண்டு கட்டுரைகள் மற்றும் சந்திரபூர் ரோட்டரி சங்கத்தின் டாக்டர் பாலிவால் எழுதியுள்ள பிளாஸ்டிக் கழிவுகளால் உருவாக்கப்பட்ட வீடுகள் என் நினைவுக்கு வந்தது. ஆனால், முதலில் தேசியத் தலைநகர் பிராந்தியத்தில் (NCR) மாசுபடுதல் அதிகரித்துவரும் மோசமான நிலைமையைப் பார்ப்போம். தில்லி, ஹரியானா, உத்தரப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களை உள்ளடக்கிய தேசிய தலைநகர் பிராந்தியத்தில் (NCR) ஆட்சி செய்யும் அரசுகள் மாசு அதிகரித்து வருவதை கண்காணித்து அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையில் உடனடியாக இறங்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதாவது பள்ளிகளை சில நாட்கள் மூடுவது உள்ளிட்ட சீரமைப்பு நடவடிக்கைகள் இதில் அடங்கும். இந்திய வானிலை ஆய்வு மையம் மஞ்சள் எச்சரிக்கை வெளியிட்டது. தில்லி விமானநிலையத்தில் மாசு காரணமாக 600 மீட்டர் தொலைவுக்கு என்ன நடக்கிறது என்று பார்க்க முடியாத பரிதாப சூழ்நிலை இருந்தது. தில்லி மக்கள் மூச்சுவிடுவதற்கே சிரமப்படு கின்றனர். மாசுபடுதலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அரசுப் பணியில் உள்ளவர்களில் 50 சதவீதம் பேர் வீட்டிலிருந்தே பணியாற்றும்படி தில்லி அரசு கேட்டுக் கொண்டுள்ளது. தனியார் நிறுவனங்களும் இதேமுறையை பயன்படுத்துமாறு வலியுறுத்தியுள்ளது.

தில்லிவாசிகள் தங்கள் வீட்டில் உள்ள காற்று சுத்திகரிப்பான்கள் சரிவர வேலைசெய்யவில்லை என்று புகார் செய்யுமளவுக்கு நிலைமை மோசமாக இருந்தது. (பணக்காரர்கள் சிலர் தங்கள் வீட்டில் பாதுகாப்பாக காற்று சுத்திகரிப்பான் கருவிகளை வாங்கி வைத்திருப்பார்கள். அப்படியானால், தில்லியில் வீடற்றவர்கள், நடைபாதையில் வசிப்பவர்களின் நிலைமையை கற்பனை செய்து பாருங்கள்.) வீட்டைவிட்டு வெளியே வருவதை மக்கள் குறைத்துக் கொள்ள வேண்டும், எங்கு சென்றாலும் பாது காப்பான (N-95) முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும், வாகனப் புகையை குறைக்க வேண்டும் என்பது நிபுணர்களின் யோசனையாக இருந்தது. இது மிகவும் முக்கியமானது, ஆனால், இந்த பகுதிகளில் அதிக மாசுபடுதலுக்கு முக்கிய காரணமாக இருப்பது பயிர்க்கழிவுகளை எரிப்பதுதான். பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் அறுவடைக்குப்பின் பயிர்க்கழிவுகளை எரிக்கும் வழக்கம் உள்ளது. அறுவடைக்குப் பின்னும் அடுத்த பயிரை விதைப்பதற்கு முன்னும் உள்ள இடைப்பட்ட காலத்தில் இது நடக்கிறது. பயிர்க் கழிவுகளை எரித்து அப்புறப்படுத்துவதுதான் குறைந்த செலவிலான வழி என விவசாயிகள் கருதுகின்றனர். ஆனால், பயிர்க்கழிவுகள் எரிக்கப்படுவதால் கார்பன் அதிக அளவில் வெளியாகி சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கிறது, சுற்றுசூழலை பாதிக்கிறது. புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறை வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின்படி இந்தியாவில் ஆண்டுக்கு 500 மில்லியன் டன் அளவுக்கு பயிர்க்கழிவுகள் உருவாகிறது என்றும் இவற்றில் மூன்றில் இரண்டு பங்கு தீவனமாகவும், தொழிற்சாலை எரிபொருளாகவும், வீட்டு உபயோகத்துக்கும் பயன் படுத்தப்படுகிறது. ஆனாலும் 140 மில்லியன் டன் மீதம் இருக்கிறது. ஆண்டுக்கு 92 மில்லியன் டன் பயிர்க்கழிவுகள் எரிக்கப்படுகின்றன.

அப்படியானால், பயிர்க்கழிவுகளை எரிப்பதற்கு பதிலான மாற்று வழி என்ன? மண்வள பாதுகாப்பு, கால்நடைத் தீவனம், உரங்கள் தயாரிப்புக்கு பயன்படுத்தலாம். மேலும் உயிரி மின்சாரம் உற்பத்தி செய்யலாம். கட்டுமானப் பொருள்களாகவும் பயன்படுத்தலாம். மின்னுற்பத்தி நிலையங்களில் எரிபொருளாகவும் பயன்படுகிறது. சில இடங்களில் ஒருவித நொதியை தெளித்து பயிர்க்கழிவுகளை பயிர்களுக்கு உரம் தயாரிக்கிறார்கள். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், இந்தியாவைவிட சீனாவில்தான் அதிக அளவில் பயிர்க்கழிவுகள் உற்பத்தியாகின்றன. சீனாவில் மின்சாரம் உற்பத்தி செய்வதில் நிலக்கரி மற்றும் பெட்ரோலிய பயன்பாட்டை குறைத்துக் கொண்டு அதற்கு பதிலாக பயிர்க்கழிவுகளை உயிரி எரிபொருள்களாக, அதாவது எத்தனால் தயாரித்து மாற்று எரிபொருளாக பயன்படுத்துகின்றனர்.

பயிர்க்கழிவுகள் எரிக்கப்படுவதற்கு நம் விவசாயிகளைக் குற்றஞ்சாட்டுவதற்கு பதிலாக, பயிர்க்கழிவுகளை வீடுகட்டுவதற்கான கட்டுமானப் பொருளாக மாற்றி பயன்படுத்த மத்திய அரசும், தொழில்துறையும் முன்வருமா?



ரஷீதா பகத்

# Membership Summary

As on November 1, 2024

Source: RI South Asia Office

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 6,027 | 5.67 | 56 | 106 | 34 | 254 |
| 2982 | 94 | 4,076 | 5.72 | 29 | 388 | 95 | 188 |
| 3000 | 148 | 6,289 | 11.77 | 76 | 940 | 241 | 218 |
| 3011 | 139 | 5,400 | 31.00 | 69 | 1,516 | 222 | 41 |
| 3012 | 163 | 4,030 | 24.37 | 53 | 671 | 105 | 61 |
| 3020 | 84 | 4,911 | 8.17 | 33 | 507 | 115 | 351 |
| 3030 | 102 | 5,657 | 16.32 | 59 | 845 | 496 | 388 |
| 3040 | 99 | 2,386 | 14.54 | 34 | 740 | 56 | 216 |
| 3053 | 76 | 3,187 | 17.32 | 23 | 339 | 39 | 131 |
| 3055 | 85 | 3,439 | 12.24 | 47 | 697 | 57 | 389 |
| 3056 | 87 | 3,776 | 25.16 | 21 | 182 | 102 | 201 |
| 3060 | 101 | 5,088 | 15.94 | 51 | 1,799 | 76 | 152 |
| 3070 | 117 | 3,096 | 15.31 | 32 | 174 | 65 | 64 |
| 3080 | 111 | 4,473 | 13.62 | 58 | 1,406 | 191 | 127 |
| 3090 | 135 | 2,652 | 7.13 | 20 | 351 | 355 | 174 |
| 3100 | 117 | 2,256 | 10.77 | 15 | 81 | 39 | 151 |
| 3110 | 138 | 3,774 | 11.90 | 19 | 164 | 94 | 114 |
| 3120 | 90 | 3,832 | 15.79 | 39 | 533 | 37 | 58 |
| 3131 | 141 | 5,661 | 35.06 | 119 | 2,096 | 294 | 209 |
| 3132 | 97 | 3,809 | 14.57 | 28 | 334 | 136 | 226 |
| 3141 | 121 | 6,466 | 28.13 | 111 | 1,921 | 196 | 246 |
| 3142 | 115 | 4,101 | 23.09 | 54 | 1,475 | 130 | 99 |
| 3150 | 108 | 4,073 | 12.67 | 82 | 1,202 | 124 | 130 |
| 3160 | 79 | 2,534 | 9.63 | 24 | 74 | 95 | 82 |
| 3170 | 145 | 6,679 | 15.23 | 87 | 1,000 | 180 | 183 |
| 3181 | 88 | 3,752 | 10.87 | 39 | 409 | 100 | 122 |
| 3182 | 85 | 3,709 | 10.76 | 45 | 215 | 110 | 104 |
| 3191 | 96 | 3,460 | 19.25 | 67 | 1,493 | 155 | 36 |
| 3192 | 93 | 3,758 | 22.01 | 55 | 1,183 | 157 | 40 |
| 3201 | 171 | 6,672 | 10.00 | 101 | 1,664 | 107 | 97 |
| 3203 | 97 | 5,138 | 7.38 | 41 | 659 | 145 | 39 |
| 3204 | 81 | 2,662 | 8.19 | 19 | 122 | 17 | 15 |
| 3211 | 161 | 5,216 | 8.84 | 7 | 52 | 26 | 135 |
| 3212 | 122 | 4,687 | 10.69 | 81 | 439 | 208 | 153 |
| 3231 | 95 | 3,772 | 7.26 | 29 | 331 | 68 | 417 |
| 3233 | 87 | 3,153 | 18.36 | 46 | 1,296 | 54 | 63 |
| 3234 | 81 | 3,229 | 24.00 | 57 | 1,455 | 88 | 41 |
| 3240 | 100 | 3,592 | 16.73 | 41 | 741 | 50 | 246 |
| 3250 | 112 | 4,434 | 23.23 | 33 | 457 | 63 | 192 |
| 3261 | 109 | 3,504 | 24.83 | 18 | 108 | 33 | 46 |
| 3262 | 116 | 3,878 | 15.96 | 82 | 763 | 647 | 289 |
| 3291 | 145 | 3,899 | 27.24 | | | 86 | 768 |
| **India Total** | **4,671** | **176,187** | | **2,000** | **30,928** | **5,688** | **7,256** |
| 3220 | 70 | 2,057 | 16.53 | 79 | 3,036 | 137 | 78 |
| 3271 | 114 | 1,586 | 20.74 | 104 | 452 | 275 | 28 |
| 0063 (3272) | 83 | 1,186 | 20.07 | 48 | 306 | 23 | 49 |
| 0064 (3281) | 283 | 5,911 | 18.19 | 190 | 987 | 120 | 211 |
| 0065 (3282) | 152 | 3,075 | 9.20 | 167 | 1,147 | 25 | 48 |
| 3292 | 161 | 5,597 | 19.24 | 173 | 5,334 | 121 | 140 |
| **S Asia Total** | **5,534** | **195,599** | **16.21** | **2,761** | **42,190** | **6,389** | **7,810** |



# RI இயக்குனர் செய்தி

# நம்பிக்கை மற்றும் சேவையின் சக்கரத்தை சுழற்றுங்கள்

டிசம்பர் தனது நினைவூட்டும் ஒளியுடன் வந்து சேர, ஒரு பிரதிபலிப்பு மற்றும் புதுப்பித்தலுக்கான நேரத்தைக் கொண்டுவருகிறது – குடும்பம், நட்பு மற்றும் நம் ரோட்டரி குடும்பத்தின் தோழமை ஆகியவற்றின் பிணைப்பைப் போற்றும் பருவம்.

இந்த மாதம் ரோட்டரி நோய் தடுப்பு மற்றும் சிகிச்சையில் கவனம் செலுத்துவது, ஆரோக்கியத்தில் உலகின் ஏற்றத் தாழ்வுகளை நமக்கு நினைவூட்டுகிறது. இது ஒரு அப்பட்டமான உண்மை: 400 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு அடிப்படை பராமரிப்புக்கான அணுகல் இல்லை. ஆயினும்கூட, நம் திட்டங்களின் மூலம் – போலியோவை ஒழித்தல், நீடித்த நிலைமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் முக்கிய தலையீடுகளை வழங்குதல் – ரோட்டரியின் சக்கரம் சுழல்வதை நிறுத்தாது என்பதை உலகிற்கு நினைவூட்டுகிறோம், மிகவும் தேவைப்படும் இடத்தில் நம்பிக்கையைக் கொண்டுவருகிறோம்.

நம் நீடித்த சின்னம் வெறும் ஒரு அடையாளமல்ல; அது செயலுக்கான அழைப்பாகும். ஒவ்வொரு பாகமும் மலைகளை நகர்த்தும் தனிநபர்களின் கூட்டு முயற்சியின் சக்தியைக் குறிக்கிறது. இந்த ஆண்டு நிறைவடையும் வேளையில், நாம் இணைந்து மேற்கொண்ட பணிகளால் தொட்ட வாழ்க்கை மற்றும் ஒளிமயமான எதிர்காலங்களை பற்றி சிந்திப்போம்.

நமது மிகப்பெரிய பலம் நமது உறுப்பினர்களிடம் உள்ளது. தக்கவைத்தல் ஒரு சாதாரண செயல்முறை அல்ல; இது இணைப்பு, உள்ளடக்கம் மற்றும் ஈடுபாடு ஆகியவற்றால் வளர்கிறது. ஒரு அன்பான வார்த்தை, சிந்தனைமிக்க சைகை, அல்லது ஒரு எளிய அங்கீகாரம் ஆகியவை உற்சாகத்தை மீண்டும் தூண்டும் மற்றும் எந்த உறுப்பினரும் புறக்கணிக்கப்பட்டதாகவோ அல்லது பாராட்டப்படாததாகவோ உணர்வதை தவிர்க்க செய்யும். ஒரு சக்கரம் அதன் அனைத்து பகுதிகளும் ஒன்றிணைந்து செயல்படும் போது சிறப்பாகச் சுழலும்.

டிசம்பர் தலைமைக்கான ஒரு அழைப்பையும் கொண்டுவருகிறது. சங்கங்கள் இப்போது தங்கள் வாரியங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும், இது வரவிருக்கும் ரோட்டரி ஆண்டிற்கான அடித்தளத்தை அமைக்கிறது. தலைமை என்பது வெறும் ஒரு கடமை அல்ல; அது ஒரு பாக்கியம், ஊக்கமளிப்பதற்கும் சேவையின் போக்கை வழிநடத்துவதற்கும் ஒரு வாய்ப்பு. அதற்காக முன்வருபவர்கள் நினைவில் கொள்ளுங்கள்: உங்கள் வெற்றி என்பது தலைமையின் தனிமையில் அல்ல, மாறாக நீங்கள் மற்றவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தின் ஒற்றுமையில் உள்ளது.

ரோட்டரி நிலைத்து நிற்க காரணம், சகோதரத்துவம், நெறிமுறை, சகிப்புத்தன்மை மற்றும் சுயத்தின் மேல் சேவை போன்ற துல்லியமான கொள்கைகளை வழிதவறாமல் கடைபிடிப்பதாகும். புத்தாண்டை நோக்கும்போது, இந்த இலட்சியங்களை மீண்டும் உறுதிப்படுத்தி, நம் சக்கரத்தை தொடர்ந்து சுழற்றிக்கொண்டே இருப்போம். கூட்டாக, நம்மால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. புதிய ஆண்டிலும் அதற்குப் பின்னரும் மாயாஜாலத்தை உருவாக்குவதைத் தொடர்வோம். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் 2025-ம் ஆண்டு மிகவும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், நிறைவாகவும் அமைய நானும் வித்யாவும் வாழ்த்துகிறோம்.

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

2025
மாநாடு

# பயணிகளுக்கான மாநாடு



நீங்கள் RI மாநாட்டுக்கெனப் பயணம் செய்யப்போகிறீர்கள், அதோடு ஒரு கூடுதல் பயணத்தைச் சேர்த்தால் என்ன? மாநாட்டுக்கெனப் பயணம் செய்யும் பல உறுப்பினர்கள் தாங்கள் மாநாடு நடக்கும் நகரத்துக்கு அருகிலுள்ள பகுதிகளையும் பார்த்துவிட்டுத் திரும்புவதாகச் சொல்கிறார்கள். அத்துடன், 15 டிசம்பருக்குள் பதிவு செய்துகொள்ளுங்கள், அதன்பிறகு மாநாட்டுக்கான பதிவுக் கட்டணம் ஏறிவிடும்.

கால்கரி மாநாடு நடைபெறும் ஜூன் 21 முதல் 25 என்கிற காலகட்டம் புகழ் பெற்ற கனடிய நிகழ்வு ஒன்றுடன் நன்கு பொருந்துகிறது: கால்கரி ஸ்டாம்பேட். மாநாட்டின் போது தனிப்பட்ட அல்லது தொழில் சுற்றுலா ஒன்றைத் திட்டமிடுங்கள், ஜூலை 4 முதல் 13 வரை இந்த நகரத்துக்குத் திரும்பி வாருங்கள், இந்த நாட்டின் மேற்கு, உள்நாட்டுப் பண்பாடுகளைக் கொண்டாடும் ரோடியோ-வைப் பாருங்கள். இதற்கென, அருகிலுள்ள ராக்கீஸில் உள்ள பன்ஃப் மற்றும் லூயிசெ ஏரியின் ஒரு நாள் பயணத்தில் தொடங்கி, மலைகளின் வழியாக வான்கூவர் சென்றுவிட்டு, ஸ்டாம்பேடுக்குக் கால்கரிக்கு ரயிலில் திரும்பும் 12 நாள் பயணம்வரை எளிதில் பதிவு செய்யக்கூடிய பயணங்களை உள்ளூர் ஏற்பாட்டுக் குழுவினர் தொகுத்துள்ளார்கள்.

வான்கூவருக்கு அருகிலுள்ள டொஃபினோ-வில் அலைச்சறுக்கு விளையாடலாம், கால்கரியிலிருந்து எளிதில் அணுகக்கூடிய புகழ் பெற்ற சுற்றுலாத் தலங்களான டொரன்டோ, நியூயார்க், கிராண்ட் கேன்யான், கரீபியன், மெக்சிகோ-விலுள்ள கான்கன் தங்குமிடங்கள், லாஸ் ஏஞ்சலஸ், டிஸ்னிலாண்ட் போன்றவற்றைக் காணுங்கள். இந்தப் பெரிய சுற்றுலாத் தலங்களைத் தாண்டி, சூழியல் சுற்றுலாவுக்கு ஒரேகானின் ரெட்வுட்ஸ், மெக்சிகோவின் பஜா கலிஃபோர்னியா சர், பிரின்ஸ் எட்வர்ட் தீவில் கிரீன் காப்லெஸின் அன்னெ-வுக்கு ஊக்கமளித்த இடங்கள், கானுயிருக்கு மற்றும் மறையாத நள்ளிரவுச் சூரியனுக்குக் கனடிய ஆர்க்டிக் ஆகியவற்றைப் பாருங்கள். நீங்கள் விரும்பும் பயணம் எதுவானாலும், கால்கரி வட அமெரிக்காவுக்கு உங்கள் வாசலாகும்.

மேலும் தெரிந்துகொள்ள,
பதிவு செய்ய:
convention.rotary.org

| உலக ரோட்டரி எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் : | 36,691 | ரோட்டரியினர் : | 1,171,376 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் : | 9,139 | ரோட்டராக்டர்கள் : | 123,590 |
| இன்டராக்ட் சங்கங்கள் : | 15,647 | இன்டராக்டர்கள் : | 359,881 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) : | 13,694 | | |

*As on November 20, 2024*

**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| T N ராஜு சுப்ரமணியன் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி RI இயக்குனர் | RID 3291 |
| Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**RI Directors-elect**

| | |
|---|---|
| முருகானந்தம் M | RID 3000 |
| நாகேஷ் K P | RID 3191 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2024–25)

| | |
|---|---|
| மகாதேவ பிரசாத் N S தலைவர், ஆளுநர் குழு | RID 3192 |
| அகில் மிஸ்ரா செயலாளர், ஆளுநர் குழு | RID 3261 |
| ராஜா கோவிந்தசாமி R பொருளாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| ராக்கி குப்தா ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3056 |


**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஶ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

TRF
**தலைவரிடமிருந்து...**



# நீடித்த தானத்திற்கான பருவம்

டிசம்பர் என்பது தாராள மனப்பான்மை மற்றும் பிரதிபலிப்புக்கான நேரம், நம் அன்புக்குரியவர்களைப் பற்றி மட்டுமல்லாமல், உலகில் நாம் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதைப் பற்றியும் சிந்திப்பதற்கான நேரம். இந்த ஆண்டு, இந்த விடுமுறை நாட்களைத் தாண்டி, தலைமுறைகளுக்கு நீடிக்கும் தாக்கத்துடன் ஒரு பரிசை வழங்குவதைக் கருத்தில் கொள்ளுங்கள். ரோட்டரி அறக்கட்டளை எண்டோவ்மென்டுக்கான பரிசுகள் அசாதாரண மாற்றத்தை உருவாக்கும் பரிசுகள்.

ரோட்டரி எண்டோவ்மென்ட்டை ஆதரிப்பதன் மூலம், இன்றும் வரவிருக்கும் வருடங்களிலும் நிலையான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த தேவையான ஆதாரங்களை RI வைத்திருப்பதை உறுதிப்படுத்த உதவுகிறீர்கள். எஸ்டேட் திட்டங்களில் எண்டோமென்ட்டைச் சேர்க்கும் உறுப்பினர்கள் அல்லது ஒரு முழுமையான பரிசை வழங்கும் உறுப்பினர்கள் அந்த பணியை ஆதரிக்கின்றனர்.

உங்கள் பரிசு, போலியோ நோயின் கடைசி வழக்கை தடுக்க உதவும் தடுப்பூசிக்கு நிதியளிக்க உதவுகிறது என்றும், அதன் மூலம் இந்த கொடூரமான நோய் முற்றிலும் அழிக்கப்பட்டது என்றும் கற்பனை செய்யுங்கள். 2034, 2044 மற்றும் அதற்கு பின்னரும் பிற சுகாதார முயற்சிகளுக்கும் இது ஆதரவாக இருக்கும் என்று கற்பனை செய்யுங்கள்.

இன்று நீங்கள் ஒரு முழுமையான பரிசை வழங்கினால், சுத்தமான நீர் திட்டங்கள், எழுத்தறிவு முயற்சிகள் மற்றும் பொருளாதார மேம்பாட்டு முயற்சிகள் மூலம் உங்களின் ஆதரவை செயலில் காண்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். இந்த அறக்கட்டளை நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உலகம் முழுவதும் வாழ்க்கைகளை தொடுகின்றன, நீங்கள் ஒருபோதும் சந்திக்கமுடியாதவர்களுக்குப் புதிய நம்பிக்கையைத் தருகின்றன; ஆனால் உங்கள் பெருந்தன்மையின் மூலம் அவர்கள் உங்களை அறிந்து கொள்வார்கள்.

100 ஆண்டுகளுக்கு முன்னர் முதன்முதலில் ஒரு என்டோவ்மென்ட்டை முன்மொழிந்த முன்னாள் தலைவர் ஆர்ச் க்ளம்ப், இன்று ரோட்டரிக்கு உதவுவதற்கான வாய்ப்புகள் மட்டுமல்லாமல், ரோட்டரியின் என்டோவ்மென்ட் வழங்கும் எதிர்கால சாத்தியக்கூறுகளையும் கண்டு வியப்படைந்திருப்பார்.

எவ்வாறாயினும், நாம் அனைவரும் அதை ஆதரிக்கும் போது மட்டுமே நமது அறக்கட்டளை வலுவாக இருக்கும். நம்மின் வெற்றிக்கு இது இன்றியமையாததாக இருப்பதால், நாம் ஒரு லட்சிய இலக்கை நிர்ணயித்துள்ளோம்: 30 ஜூன் 2025க்குள் நம் அறக்கட்டளையை $2.025 பில்லியன் நிகர சொத்துகள் மற்றும் பங்களிப்புகளுடன் கட்டியெழுப்புவதாகும். இந்த இலக்கு வெறும் எண் அல்ல; உலகில் நல்லதைச் செய்ய ரோட்டரியின்
நீடித்த திறன் மீதான நமது நம்பிக்கையின் உறுதிப்பாடாகும். முழுவதுமாக நிதியுதவி செய்யப்பட்ட 2 பில்லியன் உதவித்தொகை, ரோட்டரி அறக்கட்டளை நடவடிக்கைகளுக்கு ஆண்டுதோறும் 100 மில்லியனுக்கும் அதிகமாக வழங்கும்

இது சாதாரண பரிசு அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் தாராள மனப்பான்மை வருங்கால சந்ததியினருக்கு நாம் அக்கறை கொண்ட பகுதிகளில் தீர்வுகளைக் கண்டறிவதற்கான ஒரு பாரம்பரியத்தை வழங்கும், அதே நேரத்தில் நம் வாழ்நாளுக்கு பின்னரும் நேர்மறையான மாற்றத்தை உருவாக்கும். இதைவிட சிறந்த பரிசு என்ன இருக்க முடியும்?

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்

# செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைந்த முதல் அங்கன்வாடி!

ரஷீதா பகத்

ரோட்டரி மாவட்டம் 3012, உத்தரப்பிரதேசத்தில் அங்கன்வாடி குழந்தைகளுக்காக ஒரு சுவாரஸ்யமான, எதிர்கால திட்டத்தை லட்சிய நோக்குடன் அறிமுகப் படுத்தியுள்ளது. பணக்காரர்கள் மற்றும் நகர்ப்புறத்தில் வசிப்பவர் களுக்கு மட்டுமே கிடைக்கும் கல்வி, ஏழ்மையான பின்னணியில் அங்கன்வாடியில் சேரும் குழந்தை களுக்கும் கிடைக்க வேண்டும் என்கிற நோக்கில் கற்றலில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் சமீபத்திய தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவை ஒருங்கிணைத்து அறிமுகப்படுத் தியுள்ளது.

"ரோட்டரி விராஜ் அங்கன்வாடி" என்று அழைக்கப்படும் இத்திட்டம் அங்கன்வாடியின் அடிப்படை செயல்பாடுகளை மாற்றியமைத்து, குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியை கொடுப்பதுடன், கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கம் கொண்டது. இந்த திட்டத்தில் ஆர்வமும் முழுஈடுபாடும் கொண்ட RID 3012 DG பிரசாந்த் ராஜ் சர்மா, "இந்தியாவில் உள்ள அங்கன் வாடிகளில் பெரும்பாலானவை பலவழிகளில் அடிப்படை வசதிகள் இல்லாமல் செயல்பட்டு வருவது அனைவருக்கும் தெரியும். அலட்சியமான கட்டமைப்பு வசதி, பயிற்சியில்லாத மற்றும் ஆர்வமற்ற ஆசிரியர்கள், கற்றலுக்கான சூழல் இல்லாமை போன்றவற்றால் ஒரு கட்டத்துக்கு மேல் மாணவர்களை தக்கவைக்க முடியாத நிலை உள்ளது" என்கிறார்.

"அடிப்படை விஷயங்களைப் புரிந்துகொள்ளும், மாணவர்களை முழு ஈடுபாட்டுடன் கற்றல் அனுபவங்களைப் பெறவைக்கும் திறன்கள் ஆசிரியர்களிடம் இல்லை. மேலும் அங்கன்வாடி பள்ளிகளில் மாணவர்கள் அல்லது கர்ப்பிணி பெண்களின் முன்னேற்றத்தை எடுத்துச் சொல்லக்கூடிய கண்காணிப்பு அமைப்பு இல்லை. இன்னும் சொல்லப்போனால், அங்கன்வாடிகள் திறக்கப்படும் அல்லது மூடப்படும் நேரம்கூட சரிவரத் தெரிவதில்லை" என்கிறார் சர்மா.

இந்த மோசமான சூழ்நிலையை வியக்கத்தக்க முறையில் மாற்றும் வகையில், CSR கூட்டாளியான AMU-வுடன் இணைந்து தொடங்கப் பட்டதுதான் இத்திட்டம். மொத்த திட்டச் செலவு 2,25,000 டாலரில், AMU மட்டும் 55,000 டாலர் நிதிப்பங்களிப்புச் செய்துள்ளது. உத்தரப்பிரதேசத்தில் உள்ள 100 அங்கன்வாடிகளில் மாற்றத்தை கொண்டு வருவதே இதன் நோக்கமாகும். தாய்-சேய் நலம், எழுத்தறிவு மற்றும் அடிப்படைக் கல்வி ஆகியவற்றில் ரோட்டரி கவனம் செலுத்திவரும் நிலையில், அதற்கு ஏற்றாற்போல், உ.பி. மாநிலம், காஸியாபாத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள மோர்டி கிராமத்தில் புதிய வர்ணம் பூசப்பட்டு, புதிய பெஞ்ச், நாற்காலி வசதிகளுடன், குழந்தைகளுடன் கலந்துரையாடும் வகையிலான நவீன ஸ்மார்ட் போர்டுடன் (டிஜிட்டல் திரை) அங்கன்வாடி மையத்தை, மாநில ஆளுநர் ஆனந்திபென் படேல் தொடங்கிவைத்தார்.

ரோட்டரி நியூஸ்-க்கு அளித்த பேட்டியில், ரோட்டரி மாவட்ட ஆளுநர் சர்மா, அங்கன்வாடி பள்ளியில் படிக்கும் ஏழைக்குழந்தைகள் கற்றல் அனுபவத்தையும், கர்ப்பிணிகளின் ஊட்டச்சத்து மற்றும் உடல் ஆரோக்கியத்தை பேணி வருவதையும், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் உள்ளிட்ட நவீன கற்றல் வசதிகளையும் அவர் விளக்கினார். "பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் குழந்தைகளை ஆர்வத்துடன் அங்கன்வாடிகளுக்கு அனுப்பிவைக்கின்றனர். ஏனெனில் அவர்களுக்கு அங்கே மதிய உணவு கிடைக்கிறது. குழந்தைகளுக்கு என்ன கற்றுகொடுக்கப்படுகிறது என்பது பற்றி அவர்கள் கவலைப் படுவதில்லை. ஆனால், இவை அனைத்தும் மாறும். கடந்த ஆகஸ்ட் மாதம் மோர்டியில் முதல் விராட் அங்கன்வாடி திறக்கப்பட்ட பிறகு அங்கு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன" என்று சர்மா கூறினார்.

மூன்று முதல் ஆறு வயதுக்குட் பட்ட இடைப்பட்ட காலத்தில்தான் மூளையில் அதிகபட்ச வளர்ச்சி ஏற்படுகிறது என்று மருத்துவ ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன என்று தெரிவித்த அவர், இந்த வயதில்தான் குழந்தைகள் அங்கன்வாடி பள்ளிகளில் சேருகின்றனர். இளம் குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கவே, இத்திட்டத்தின் கீழ் ஒரு "ஸ்மார்ட் போர்டு" டிஜிட்டல் கரும்பலகை வடிவமைக்கப்பட்டுள்ளது. அதில் கலந்துரையாடுவதற்கான கற்றல் பொருள்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.




*உத்தரப்பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், DG பிரசாந்த் ராஜ் சர்மா மற்றும் மாவட்ட சமூக ஊடகத் தலைவர் மனு சேத் காசியாபாத்தில் உள்ள மோர்தி கிராமத்தில் உள்ள ரோட்டரி விராஜ் அங்கன்வாடியில்.*

"வினாடி-வினா, கதைகள், விளையாட்டுப் பொருள்கள், கவிதைகள் மற்றும் ஒலிக்கருவிகள் உள்ளிட்ட அனைத்து பாடங்களும் அடங்கிய கட்டுப்பாட்டு விசைப் பலகையை (டேஷ் போர்டு) நாங்கள் உருவாக்கியுள்ளோம். குழந்தைகள் கலந்துரையாடுவதற்கான வசதியும் செய்யப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் குழந்தைகளின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும். ஒரு பள்ளியில் 50 குழந்தைகள் இருப்பதாக வைத்துக் கொண்டால் அவர்களின் தனிப்பட்ட செயல் பாடுகள், அவர்கள் அதிகம் ரசிப்பது எது, அவர்கள் கற்றுக்கொள்ளும்விதம் ஆகியவை கண்காணிக்கப்படும்."

டிஜிட்டல் திரையானது ஸ்மார்ட் கற்றல் சாதனத்தைவிட சிறந்தது. கற்பித்தலால் ஏற்படும் விளைவுகளை கண்காணிக்கவும், பாடங்களைத் தரப்படுத்தவும், தனியார் நடத்தும் பிளே ஸ்கூலுக்கு இணையான வகையில் ஏழைக் குழந்தைகள் அணுகும் வகையில் கல்வி உள்ளதா என்பதை அரசு பின்தொடரவும் வசதி உள்ளது. இந்த கட்டுப்பாட்டு விசைப் பலகை மாநில அரசுடன் இணைக்கப்பட்டுள்ளது. அங்கு கல்வி அதிகாரிகள் அனைத்து தரவுகளையும் செயற்கை நுண்ணறிவு மூலம் பகுப்பாய்வு செய்ய முடியும்.

எங்களின் முயற்சியானது நகர்ப்புறத்தில் உள்ள பிளே ஸ்கூலுக்கு இணையான கற்றலை பிரதிபலிக்கும் வகையில் மிகுந்த சுவாரஸ்யமாகவும் வேடிக்கையானதாகவும் இருக்கும். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் குழந்தையின் ஒட்டு மொத்த வளர்ச்சி, அவள் கற்றுக்கொண்டது, புரிந்து கொண்டது, உள்வாங்கியது, எதில் ஆர்வம் உள்ளது, கேட்கப்பட்ட கேள்விகள் மற்றும் ஒவ்வொன்றிலும் செலவிடப்பட்ட நேரம் ஆகியவை அனைத்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஒரு மாதிரி உருவாக்கப்பட்டு, அவை மாநிலம் அல்லது நாடு முழுவதும் உள்ள அங்கன்வாடிகளில் பயன்படுத்தப்படும்.

இளம் மாணவர்களுக்கு சிறிய வயதிலேயே தரமான கல்வியை

வழங்குவதுதான் எங்களின் முதன்மையான குறிக்கோள். அதுமட்டுமல்ல, கல்விக்கான முழுமையான அணுகுமுறையை கடைப்பிடிப்பதும் 3 முதல் 6 வயது வரையிலான வளரும் ஆண்டுகளில் தரமான கல்விக்கான தொழில்நுட்பத்தை பயன்படுத்தி குழந்தைகளின் வளர்ச்சியை உறுதி செய்வதாகும். “இந்த காலகட்டத்தில் உயர்தரமான கல்வியை வழங்கி அவர்களின் அறிவாற்றல் திறன்களை வலுப்படுத்துவது மிகவும் முக்கியமானது. குழந்தைகள் திறம்பட படிக்கவும், புரிந்துகொள்ளவும், கிரகித்துக்கொள்ளவும், சொல்லிக் கொடுப்பதை மனதில் பதியவைப்பதை உறுதிசெய்வதும் முக்கியம்” என்கிறார் சர்மா.

இந்த ரோட்டரி ஆண்டு இறுதிக்குள் முதல் கட்டப் பணிகள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இலக்கை முன்னெடுத்துச் செல்ல மாவட்டத்தில் உள்ள 70 சங்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை அங்கன்வாடிகளுக்குத் தேவையான டிஜிட்டல் கற்றல் முறை, அதற்கு தேவையான உபகரணங்கள், ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான ஏற்பாடு களைச் செய்யவும், மேலும் அங்கன்வாடிகளை குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பொறுப்பை ஏற்கவும் முன்வந்துள்ளனர். அங்கன்வாடி குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்குமாறும் சங்கத்தினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இதனால், குழந்தைகளிடம் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்கிற உணர்வும், பாடங்களில் கவனம் செலுத்தி படிக்க வேண்டும் என்கிற உணர்வும் ஏற்படும்.

“CSR கூட்டாளிகள் தேவைப்படும் நிதியில் நான்கில் ஒரு பங்கை அளிக்கும் அதேநேரத்தில் சங்கங்கள் மீதமுள்ள பணத்தை திரட்டும். அவர்கள் திரட்டும் நிதி ரோட்டரி அறக்கட்டளைக்கு அவர்களின் பங்களிப்பிற்கு செல்லும்” என்கிறார் சர்மா. உள்கட்டமைப்பை மேம் படுத்துதல் மற்றும் குழந்தை களுக்குத் தேவையான மேஜை, நாற்காலிகள் வழங்குவதை ரோட்டேரியன்கள் உறுதி செய்வார்கள். மேலும் ஊரகப் பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் “இன்வெர்ட்டர்கள்” வழங்கப் படுவதையும் உறுதி செய்வார்கள். அங்கன்வாடிக்கு கட்டடம் கட்டுவதற்கோ அல்லது புதுப்பிக்கும் பணிகளுக்கோ ரோட்டேரியன்கள் பணம் செலவழிக்கமாட்டார்கள் என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.



# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் இயங்கும் அங்கன்வாடிகளின் சிறப்பு அம்சம்

RID 3012-ன் DG *பிரசாந்த்குமார் சர்மா, இந்த நவீன அங்கன்வாடிகளின் சிறப்பு அம்சங்களை விளக்குகிறார்:*

**மேம்படுத்தப்பட்ட கற்றல் அனுபவம்:** *இது மாணவர்களுக்கு கலந்துரையாடல் மற்றும் மல்டிமீடியா விளக்க காட்சிகளுடன் கல்வி உள்ளடகத்தை வழங்குகிறது. கற்றலை ஈடுபாடு நிறைந்ததாகவும், பயனுள்ளதாகவும் மாற்றுகிறது.*

**ஆசிரியர் ஆதரவு:** *செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆசிரியர்களுக்கு மதிப்புமிக்க கருவியாகச் செயல்படுகிறது. மேலும் மாணவர்களுக்கு எளிதாகவும், திறம்படவும் கருத்துகளை விளக்கவும் உதவுகிறது.*

**மையங்களின் கண்காணிப்பு:** *ஸ்மார்ட் டிஜிட்டல் திரைகளின் ஒருங்கிணைப்பு அங்கன்வாடி மையங்களின் செயல்பாட்டை நேரங்களின் அடிப்படையில் நேரடியாக கண்காணிக்கிறது.*



*மேற்பார்வையாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் வருகையை கண்காணிக்கவும், ஆசிரியர்களின் செயல்திறனை மதிப்பிடவும், முன்னேற்றத்திற்கான பகுதிகளை கண்டறியவும் உதவுகிறது.*

**டிஜிட்டல் கல்விக்கான அறிமுகம்:** *ஸ்மார்ட் டிஜிட்டல் திரைகள் இணைக்கப்பட்ட அங்கன்வாடிகள் இளம் குழந்தைகளுக்கு டிஜிட்டல் கற்றல் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்து, எதிர்காலத்துக்கு தேவையான அத்யாவசிய திறன்களை வழங்குவதன் மூலம் டிஜிட்டல் யுகத்திற்கு குழந்தைகளை தயார்படுத்துகிறது.*

நவீன கற்றல் மையங்களாக மாற்றக் கூடிய ஒழுங்கமைந்த கட்டடத்தையே அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

ஏழைக் குழந்தைகள் அர்த்தமுள்ள வகையில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கல்வி கற்று ஆரம்பக் கல்விக்குச் செல்லும்போதும், கல்வியைத் தொடரும்போதும் மற்றவர்களுக்கு இணையாக போட்டி போடும் அளவுக்கு அவர்களைத் தயார் படுத்துவதே திட்டத்தின் லட்சிய நோக்கமாகும். கற்றலின் வெளிப்பாடு மட்டுமின்றி, கர்ப்பிணித்தாய்மார் களின் ஆரோக்கியம் மற்றும் ஊட்ட சத்து நிலை குறித்தும் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படும்.



## AI இணைப்பு

AI தொழில்நுட்ப உதவியுடன் தரவு பகுப்பாய்வு செய்யப்பட்டவுடன், மாநிலத்தின் கல்வி ஒருங்கிணைப்பு அதிகாரிகள் (Nodal Officers) குழந்தைகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, ஒவ்வொரு செயலிலும் குழந்தைகள் எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள் என்பதை ஆய்வு செய்து குழந்தைகளுக்கு உண்மையில் எதில் ஆர்வம் உள்ளது என்பதைத் தீர்மானிப்பார்கள்.

AI உடனான தொடர்பு மற்றும் AI அங்கன்வாடிகள் என்று அழைப்பதற்கான நியாயத்தை RID 3012-ன் சமூக ஊடகத் தலைவரும், இந்தியாவில் ICT தொழில்நுட்பங்களை அறிமுகப்

படுத்தியதில் முன்னோடியுமான மனுசேத் விளக்கினார். அவர் கூறுகையில், செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில் நுட்ப வளர்ச்சி, மற்றும் நவீன தொழில் நுட்பங்கள் பதிவேற்றப்பட்ட கட்டுப்பாட்டு விசைப்பலகை (டேஷ்போர்டு) மூலம் அனைத்து அங்கன்வாடிகளில் கற்றல் முயற்சியை மேம்படுத்த முடியும். மேலும் இது மாவட்டம் அல்லது மாநில கல்வி ஒருங்கிணைப்பு அதிகாரிகள் விரைவாக பதிலளிக்கவும் திருத்தங்களை மேற்கொள்ளவும் வசதியாக இருக்கும். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மூலம் குழந்தைகளின் முன்னேற்றத்தை மதிப்பிடலாம் மற்றும் கற்றல் செயல்முறையில் மாற்றங்களை பரிந்துரைக்கலாம். அங்கன்வாடிகளில் உள்ள குழந்தைகள் நவீன கல்வி வசதிகள் மூலம் பலனடைய வேண்டும் என்பதே இதன் நோக்க மாகும். மேலும் அங்கன்வாடி களில் என்ன நடக்கிறது என்பதை சம்பந்தப்பட்ட அரசு துறைகள் நேரலையில் கண்காணிக்கவும் உதவுகிறது.

"டிஜிட்டல் திரையில் "A" ஃபார் ஆப்பிள் என்றாலும் மற்ற எழுத்துகள் என்றாலும் எழுத்துகள், பொருள்கள் மற்றும் எண்களுடன் காட்சியளிக்கும். பலவித வண்ணங்களில் காட்சி யளிக்கும் இவற்றை குழந்தைகள் தொட்டுப்பார்க்கலாம். இது கற்றலை ஒரு வேடிக்கையான செயலாக மாற்றுகிறது" என்கிறார் DG சர்மா.

"குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். குறுகிய காலத்தில் அங்கன்வாடியின் பலம் 30-லிருந்து 45-ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஒருவாரத்தில், ஒரு குழந்தைகூட அங்கன்வாடி மையத்துக்கு தாமதமாக வரவில்லை" என்கிறார் காஸியாபாதில் உள்ள குழந்தைகள் மேம்பாட்டு அதிகாரி சாரதா. மாவட்ட ஆளுநர் சர்மா மேலும் கூறுகையில், "முன்பு பெற்றோர்கள் குழந்தைகளை மதிய உணவுக்காக மட்டும் இந்த மையங்களுக்கு அனுப்பிவைத்தனர். அதுவும்கூட உதவியாளர்கள் குழந்தைகளை மையத்துக்கு அனுப்பிவைக்கும்படி



வீடு வீடாகச் சென்று வலியுறுத்திய பின்னர். ஆனால், இப்போதெல்லாம் பெற்றோரே குழந்தைகளை சரியான நேரத்துக்கு அழைத்து வருகிறார்கள். குழந்தைகள் இனி தரமான கல்வியை, கற்றல் அனுபவத்தை பெறுவார்கள் என்ற நம்பிக்கையை பெற்றோர்களிடம் ரோட்டரி ஏற்படுத்தியுள்ளது" என்றார்.

உத்தரப்பிரதேச மாநில அரசு இந்த திட்டத்தில் மிகுந்த ஆர்வம் காட்டுவதுடன், உதவியும் செய்து வருகிறது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட முதல் அங்கன்வாடியை மோர்டியில் மாநில ஆளுநர் ஆனந்திபென் படேல் தொடங்கிவைத்துள்ளார். அதுமட்டுமல்ல, "எங்களிடம் பல கேள்விகள் கேட்டும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார் என்கிறார் சர்மா. தொடக்க நிகழ்ச்சியில், உ.பி. அமைச்சர் சுனில் சர்மா, எம்.எல்.ஏ.க்கள் அஜித்பால் தியாகி மற்றும் மஞ்சு சிவாச், காஸியாபாத் மேயர் சுனிதா தயாள், மாவட்ட ஆட்சியர் இந்திரா விக்ரம் சிங் மற்றும் தலைமை வளர்ச்சி அதிகாரி அபினவ் கோபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அதைவிட முக்கியமானது, பிரதமர் நரேந்திர மோடியின், தொகுதியான வாராணசியில் ஒரு சில அங்கன்வாடிகளில் இந்த திட்டத்தை செயல்படுத்த மாநில ஆளுநர் விருப்பம் தெரிவித்ததாக சர்மா உற்சாகத்துடன் கூறினார். ஒருவேளை இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் வாராணசி அங்கன்வாடியை திறந்து வைக்க பிரதமரை அழைக்க ஏற்பாடு செய்வதாகவும் மாநில ஆளுநர் ஆனந்திபென் படேல் உறுதியளித்ததாக சர்மா குறிப்பிட்டார். இந்த திட்டம் இதர ரோட்டரி மாவட்டங்களை ஈர்த்து, அவர்களும் இதே போன்ற புதுமையான, புரட்சிகரமான திட்டங்களை சமூக சேவையில் முன்னெடுத்து, குழந்தைகள் கல்வி மற்றும் தாய்மார்கள் பராமரிப்பில் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புவதாக சர்மா கூறினார்.

ஓராண்டு திட்ட முறையில் டிஜிட்டல் பலகையில் பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. கல்வியுடன் தொடர்புடைய கலந்துரையாடல்கள், மல்டிமீடியா விளக்க காட்சிகள் என முறையான அணுகுமுறையுடன் இத்திட்டம் செயல்படுத்தபடுகிறது. அனைத்து 100 அங்கன்வாடிகளிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இதனால் ஏற்படும் தாக்கம் என்ன என்பது மதிப்பீடு செய்யப்படும் என்று அவர் மேலும் கூறினார்.■

# XAVIER UNIVERSITY SCHOOL OF MEDICINE AND KLE ANNOUNCE

# 6 YEARS

PRE-MED TO

## DOCTOR OF MEDICINE / DOCTOR OF VETERINARY MEDICINE

## PROGRAMME





**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherlands

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

# TO ATTEND WEBINAR

## REGISTER NOW

**XUSOM.COM/INDIA/**

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 3 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island- Netherlands

**Final year**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**Limited Seats**

**Session starts in January 2025**

To apply, Visit:
**application.xusom.com**
email: infoindia@xusom.com

**XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME**

ADVT.

# ரோட்டரியின் வளர்ச்சிக்கான உத்திகள்

V முத்துகுமரன்

ரோட்டரி தலைவர் என்ற முறையில் RIPE மரியோ டி கமார்கோவின் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்று உங்கள் அனைவரையும் தக்கவைப்பது மற்றும் உங்களை அதிகமாக ஈடுபடுத்துவது. "ஒவ்வொரு வருடமும் 1,55,000 ரோட்டேரியன்கள், ரோட்டரியை விட்டு வெளியேறுகிறார்கள், என்று ஹைதராபாதில் நடைபெற்ற உறுப்பினர்கள் மாநாட்டில் உரையாற்றுகையில் அவர் தெரிவித்தார்.

ரோட்டரியில் சராசரி வயது 62 ஆக உள்ளது. மேலும், "உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்து வருவதால், எண்ணிக்கையை அதிகரிக்க என்னிடம் 9 அம்ச தொலைநோக்குத் திட்டம் உள்ளது. முதலில் புதிய வடிவத்தில் சங்கத்தை மேம்படுத்த வேண்டும். அதாவது ரோட்டரியில் பல்வேறு பிரிவுகளை, சாட்டிலைட், துணை, காரணம் சார்ந்த, தொழில்நிறுவனம் அல்லது கார்ப்பொரேட் நிறுவனம் சார்ந்த சங்கங்களை ஏற்படுத்த வேண்டும்". 20 உறுப்பினர்களுக்கும் குறைவாக உள்ள சங்கங்களை உயிர்ப்பிக்க வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார்.

ரோட்டரி தலைவர்கள், முன்னாள் உறுப்பினர்களை ஈடுபடுத்த வேண்டும். ரோட்ராக்ட், RYLA, GSE மற்றும் NGSE தொழில்வல்லுனர்கள் மற்றும் ரோட்டரி நடவடிக்கை குழுக்கள் மூலம் இளைஞர்களைச் சென்றடைய வேண்டும். வழக்குரைஞர்கள், பொறியாளர்கள், கட்டடக் கலைஞர்கள், தொழில் வர்த்தகர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகியோருடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலும் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க ரோட்டரியின் செயல்பாடுகளை சமூக ஊடகங்கள் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றார் டி கமார்கோ.

"உலகிலேயே ரோட்டரி இன்டர்நேஷனல்தான் தலைமைப் பயிற்சிக்கு சிறந்த பள்ளியாகும். 500 மாவட்ட ஆளுநர்களை உருவாக்க, சர்வதேச மாநாட்டில் நாங்கள் 6.5 மில்லியன் டாலர்களைச் செலவழிக்கிறோம். இது ரோட்டரியின் வளர்ச்சிக்கான முதலீடாகும்."



*RIPE மரியோ டி காமார்கோ கொல்கத்தாவில் உள்ள ரோட்டரி சதனில் வரவேற்கப்படுகிறார்.*

### 1.4 பில்லியன் சந்தை

140 கோடி மக்கள் தொகையுடன் இந்தியா, ரோட்டரியின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய சந்தையை வழங்குகிறது. இந்தியாவில் கடந்த ஆண்டு 450 மில்லியன் பேர் நடுத்தர வர்க்கத்தில் சேர்ந்திருப்பதாக சமீபத்திய அறிக்கையை மேற்கோள்காட்டி அவர் பேசினார். ரோட்டரியின் வளர்ச்சிக்கு புதிய இடங்களை நாம் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும். புதிய DG-க்கள், புதிய பகுதிகளில், புதிய சங்கங்களை உருவாக்கும் வகையில் AG-க்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு மாவட்டமும் DG-க்கள், DGE-க்கள் மற்றும் DGN-களுடன் இணைந்து மூன்றாண்டுக்கான இலக்குகளை அமைக்க வேண்டும். நீண்டகால திட்டங்கள் மற்றும் திட்ட அட்டவணைகளைப் பட்டியலிட வேண்டும் என்றார் RID ராஜு சுப்பிரமணியன். புதிய உறுப்பினர்களுக்கான முன் சேர்க்கை அமர்வுகளை நடத்துமாறு மாவட்டத் தலைவர்களை அவர் வலியுறுத்தினார். உறுப்பினர்களிடையே சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து கணக்கெடுப்பு நடத்த வேண்டும். RID அனிருதா ராய்சௌத்ரி பேசுகையில், ரோட்டரி டிஜிட்டல் தொழில்நுட்பத்தை தழுவியதன் மூலம் ஒரு முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

RIDE K P நாகேஷ் பேசுகையில்,




*கொல்கத்தாவில் RIPE டி காமார்கோ உடன் (இடமிருந்து) PRID மகஷே் கோட்பாகி, PRIP சேகர் மேத்தா, PDGs பிரபீர் சாட்டர்ஜி மற்றும் ராஜீவ் சர்மா, RID அனிருதா ராய்சௌத்ரி மற்றும் PRID கமல் சங்வி.*

2027-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள், நான்கு மண்டலங் களிலும் 3 லட்சம் உறுப்பினர்களை அடைய இலக்கு நிர்ணயித்துள்ளோம்'' என்றார்.

கொல்கத்தாவில், RIPE டி கமார்கோ, 10 RI மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 600 பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டத்தில் உரை யாற்றினார். "கடந்த 20 ஆண்டு களில் இந்தியா உறுப்பினர் எண்ணிக்கையில் 103 சதவீத வளர்ச்சியைப் பெற்றது. (தைவானில் 127 சதவீத வளர்ச்சி- அடுத்து இந்தியா) அதேசமயத்தில் அமெரிக்கா, கனடா, கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியாவில் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டது. உறுப்பினர் சேர்க்கைக்கு நீண்டகால திட்டம் நமக்குத் தேவை'' என்றார் கமார்கோ.

முன்னதாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ஆப்கானிஸ்தானில் போலியோ பிளஸ் நடவடிக்கைகளுக்கு தலிபான் ஆட்சியாளர்கள் தடை விதித்தது பற்றி ரோட்டரி செய்திக் குழுவின் கேள்விக்கு பதிலளித்த டி கமார்கோ, "கடந்த நான்கு ஆண்டுகளில் போலியோவுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரவாதம், அறியாமை, தவறான எண்ணங்கள், பாகிஸ்தான்- ஆப்கன் எல்லையில் மலைப்பகுதியில் உபகரணங்களை கொண்டு செல்வதில் இருந்த சிக்கல்கள் காரணமாக பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டியிருந்தது. ஆனாலும் ஆப்கானிஸ்தானில் உள்ள குழந்தைகளுக்கு போலியோ தடுப்பூசி போடும் முயற்சியிலிருந்து ரோட்டரி பின்வாங்காது நம்மிடம் வலிமை இருக்கிறது என்றார்.




*RIPE டி காமார்கோ ஒரு பெண்ணுக்கு வயது வந்தோர் கல்வியறிவு சான்றிதழை வழங்குகிறார். மேலும் RC கல்கத்தா மகாநகர் தலைவர் பிரமிளா துகர், PRID சங்வி, PRIP மேத்தா, PRID கோட்பாகி மற்றும் RID ராய் சௌத்ரி ஆகியோரும் உள்ளனர்.*

"இங்கே நாம் ஒரு நோயை எதிர்த்துப் போராடுவது மட்டு மல்லாமல், மக்களின் அறியாமை, பொது ஆரோக்கியம் மற்றும் சமூகப் பிரச்னைகளையும் எதிர்த்துப் போராடி வருகிறோம்.'' போலியோவிலிருந்து விடுபட, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளில் 95 சதவீத குழந்தைகளுக்காவது தடுப்பூசி போடப்பட்டிருக்க வேண்டும். அப்போது தான் போலியோ நோய் மீண்டும் எழுச்சிபெறாமல் தடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

கொல்கத்தா நகரில் இருந்த போது RIPE டி கமார்கோ, ரோட்டரி அலுவலகத்தில் கொல்கத்தா ரோட்டரி சங்க உறுப்பினர்களைச் சந்தித்தார்.■

Rotary PEOPLE OF ACTION

# ஒலி, கலை மற்றும் நடனம் மூலம் மனநலத்தை மேம்படுத்துதல்

ரஷீதா பகத்



*BNS பள்ளியின் இன்டராக்ட் கிளப்பைச் சேர்ந்த குழந்தைகள் பல்வேறு பழங்களிலிருந்து விதைகளால் நிரப்பப்பட்ட தேங்காய் ஓடுகளுடன்.*

சென்னை பாரதி ரோட்டரி சங்கம் (RID 3234), மனநல ஆரோக்கியத்தை மேம்படுத்த ஒரு புதிய, சுவாரஸ்யமான நடைமுறையைப் பின்பற்றத் தொடங்கியுள்ளது. ஒலி, கலை, நடனம் ஆகிய மூன்றையும் ஒரு கலவையாக சிகிச்சையில் ஈடுபடுத்துவதன் மூலம் அதிக எண்ணிக்கையில் மக்களை இதில் ஈடுபடுத்துவதன் மூலமும் மனநலம் தொடர்பான பிரச்னைகளைக் கையாண்டு தீர்வுகாண்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

கடந்த ஜூலை மாதம் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றதிலிருந்து நிஸ்ரின் மதராஸ்வாலா மனநிலை பாதிக்கப்பட்ட தனிநபர்களிடம் பேசுவது, அவர்கள் சொல்வதை காதுகொடுத்து கேட்பது மற்றும் அவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாண்பது, ஆறுதல் கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். இவற்றை தொடக்கத்திலேயே கவனிக்காமல் அல்லது சிகிச்சை அளிக்காமல் விட்டுவிட்டால் மன நலம் மிகப்பெரிய பிரச்னையாக உருவெடுக்கும் என்பது இவரது கருத்தாகும்.

இந்த ஆண்டின் அவரது முதல் திட்டம் என்னவென்றால், சங்கத்தின் இன்டராக்ட் பள்ளி-BNS பள்ளி, சென்னையில் படிக்கும் குழந்தைகளை இயற்கையான விதைகளை விதைக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க வைத்தது. “இந்த நிகழ்வுக்கு முன்னதாக, குழந்தைகளிடம் நாங்கள், கோடை விடுமுறையில் பலா, மாம்பழம், முலாம்பழம் ஆகிய பழங்களி லிருந்து உள்ளூர் விதைகளை சேகரிக்கும்படி கேட்டுக்



கொண்டோம். அவர்களும் அவற்றை சேகரித்து பள்ளி வளாகத்தில் தேங்காய் ஓடுகளில் (சிரட்டை) வைத்து நடவு செய்தனர்''.

ஆனால், இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், ''சவுண்டு தெரபி'' பின்னணியில் குழந்தைகள் சிறு குழுவாக நடவுப்பணிகளை மேற்கொண்டனர். ஆஸ்மா ஸ்டூடியோவைச் சேர்ந்த ஒலி சிகிச்சை நிபுணரான சந்தியா இந்த நிகழ்வின்போது உடன் இருந்தார். மனநலத்தை மேம்படுத்த இவர் சவுண்ட் தெரபியைப் பயன்படுத்துகிறார். ''கோங்க் இசைக்கருவியும், பலவகையான இசைக் கிண்ணங்களும் எழுப்பும் ஒலியானது கிளர்ச்சியுற்ற நரம்புகளை அமைதிப்படுத்தி, உணர்வுகளை கட்டுப்படுத்தும் திறன்படைத்தது. இவற்றால் நேர்மறை ஆற்றலை உருவாக்கவும், மனதை அமைதிப்படுத்தவும், நலிவுற்ற நரம்புகளை ஆற்றுப்படுத்தவும் முடியும். இந்த ஒலிகள் நம் மனதை சென்றடைந்து புத்துணர்ச்சியூட்டுகின்றன மற்றும் குணப்படுத்துகின்றன'' என்கிறார் நிஸ்ரின்.

இந்த ஒலிகளின் பின்னணியில் குழந்தைகள் கவனமாக விதைகளை நட்டனர். மற்றும் தியானம் செய்தனர்.

இந்த திட்டத்தில் 40 சிறுவர்கள், சிறுமிகள் பங்கேற்றனர். இந்த திட்டத்தின் பொதுவான நோக்கம் அவர்களின் செய்கைகளினால் ஏற்படும் விளைவுகளிலிருந்து விலக்கி வைப்பது. மேலும் அவர்கள் செய்த காரியத்துக்கான பலனை அவர்கள் அனுபவிக்க மாட்டார்கள் என்பதை உணர்த்துவதுதான். அவர்கள் நட்ட மரங்களிலிருந்து கிடைக்கும் பழங்களை யாரோ அனுபவிப்பார்கள். சமூக ஊடகங்களைக் கையாளும் குழந்தைகள் உடனடி மனநிறைவைப் பெறும் நிலையில் இது முக்கியமானது. அவர்கள் உடனடியாக கைத் தட்டலை பெறவில்லை என்றால், ஏதோ தங்களை நிராகரித்துவிட்டதாக கருதுகிறார்கள். வேறு சிலர் மனச்சோர்வு அடைந்து போதைப் பொருள்களுக்கு அடிமையாகலாம். உடலியலை நன்றாக வைத்துக்கொள்ளும் வழிமுறைகள் பற்றி கற்பிக்கப் படுவதுபோல் மனநலத்தை சமாளிக்கும் வழிமுறைகள் தெளிவாக இல்லை அல்லது கற்பிக்கப்படவில்லை என்கிறார் அவர்.

சமீபத்தில், ரோட்டரி சங்கம் ''ஆழ்ந்த அனுபவங்கள்'' என்னும் ஒரு திட்டத்தை செயல்படுத்தியது. இது ஒரு கட்டண நிகழ்வு (ஒருவருக்கு ரூ.1,299 கட்டணம்). மனநலப்







பல்வேறு கிண்ணங்கள் மற்றும் ஒரு மணியைப் பயன்படுத்தி இசை உருவாக்கப்படுகிறது.



மேலே: *சங்கத் தலைவர் நிஸ்ரீன் மதராஸ்வாலா (இடமிருந்து மூன்றாவதாக அமர்ந்திருப்பவர்) மற்ற பங்கேற்பாளர்களுடன்.*

இடது மற்றும் கீழே: *தேங்காய் ஓடுகளில் நடவு செய்யத் தயாராகும் மாணவர்கள்.*



பிரச்சனைகளில் ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்குவதற்கான கண்ணோட்டத்துடன் நடைபெற்றது. இதில் 40 பேர் பங்கேற்றனர். ஒலி, கலை மற்றும் நடனம் என மூன்றுவகை தெரபி சிகிச்சைகள் அளிக்கப் பட்டன. ஆஸ்மாவைச் சேர்ந்த சந்தியா சவுண்ட் தெரபி மூலமும், மௌஸுமா வாஹ், நடன அசைவுகள் மூலமான தெரபி மூலமும், (இவர் மைசூருவில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பள்ளியை நடத்தி வருகிறார்.), சென்னையில் உள்ள ராஃபிகியைச் சேர்ந்த ஐஸ்வர்யா, ஆர்ட் தெரபி மூலமும் சிகிச்சை அளிப்பது குறித்து விளக்கிப் பேசினர். ஆர்ட் தெரபி (கலை சிகிச்சை) என்பது நோயாளிகளுக்கு மனஉளைச்சல் ஏற்படு வதற்கான காரணங்களைப் புரிந்துகொண்டு அதற்கு தீர்வுகாண சிகிச்சை அளிப்பதாகும்.

அவர்கள் மனதைக் கவரும் வகையில் அமர்வு களை கொண்டு சென்றனர். பங்கேற்பாளர்கள் தேக்கி வைத்திருந்த உணர்ச்சிகளை பேச்சு, ஓவியம், அசைவுகள் மூலம் வெளிப்படுத்த வழிவகுத்தனர் என்கிறார் நஸ்ரின். இவர் சமூகவியலில் பட்டப்படிப்பை முடித்தவர். மன அழுத்தத்தை ஒரு பாடமாக பயின்றவர்.

மனச்சோர்வு தொடர்பான பிரச்னைகளுக்காக போராடியவள் நான். இல்லையென்றால் எங்கள் சங்கம் சார்பில் நான் ஏன் இந்த திட்டங்களில் முதலீடு செய்யவேண்டும்? கடந்த 30 ஆண்டுகளில் நான் பல்வேறு முயற்சி களை மேற்கொண்டேன். ஆனால், குழு தெரபிதான் சரியான வகையில் வேலை செய்கிறது என்பதைத் தெரிந்துகொண்டேன். நேருக்கு நேர் ஆலோசனையுடன் ஒப்பிட்டால் மக்களைச் சந்திப்பது அவர்களின் நீண்ட கால பிரச்னைகளைப் புரிந்து கொள்ள உதவுகிறது. ‘‘பல்வேறு தளங்களில் நான் வெளிப்படும் வரை நான் ஏதோ தவறு செய்து விட்டேன். அதனால்தான் இந்த பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டி யிருக்கிறது என்று நினைத்தேன். ஆனால், இதுபோன்ற தெரபி சிகிச்சை அமர்வுகளுக்குப்பின், நான் பாதிக்கப்பட்டேன் என்பதை உணர்ந்தேன். மேலும் நான் ஏன் குற்ற உணர்ச்சியுடன் இருக்கிறேன் என்று யோசித்தேன். பாதிப் பிலிருந்து வெளிவர எனக்கு இந்த அமர்வுகள் உதவிகரமாக இருந்தன. இதுபோன்ற சிக்கல் களை எதிர்கொள்ளும் மற்றவர்களும் இதேபோன்ற அனுபவத்தைப் பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனக்கு ஜலதோஷம் என்று

சொல்வது போல் எளிமையானது. நான் ஓய்வு எடுக்க வேண்டும். என்னைச் சுற்றியிருப்பவர்கள் இதை ஒரு பெரிய விஷயமாக பார்க்கக்கூடாது''.

ஜலதோஷம் பிடிக்கிறது என்பதற்காக ஒருவரும் தன்னைத்தானே குற்றஞ்சாட்டிக் கொள்வதில்லை. அதுபோல மனநலம் தொடர்பான பிரச்னைகளை எதிர்கொள்ளும்போது ஒருவர் ஏன் குற்ற உணர்ச்சியாகவோ அல்லது தாங்களே பொறுப்பு ஏன் எண்ண வேண்டும் என்பதுதான் கேள்வி. ''நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நேரத்தில் மனச் சோர்வை எதிர்கொண்டேன். வெவ்வேறு மக்களிடம் வெவ்வேறு சூழ்நிலைகளில் மூளை வெவ்வேறு வழிகளில் செயல்படுவதால் இது நிகழ்கிறது''.

கலை சிகிச்சை (ஆர்ட் தெரபி) அமர்வில் பங்கேற்பாளர்கள் தங்கள் மனதில் தோன்றியதை ஓவியமாக வரைய ஊக்குவிக்கப்பட்டனர். ''மேலும் அதை மற்றவர்கள் பார்வைக்கு வைத்து திரும்பியபின் பலரது மனதில் அதற்கான பதில்கள் அல்லது தீர்வுகள் இருப்பதை கண்டறிந்தோம்''.

நடன சிகிச்சை அமர்வில் வழிகாட்டப்பட்ட அசைவுகள் உடலில் சேமித்துவைக்கப்பட்ட பதற்றம் மற்றும் அடக்க உணர்ச்சி களை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தன. மைசூருவைச் சேர்ந்த சிகிச்சையாளர் மௌஸுமா, மன இறுக்கம் கொண்ட பெற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக கடந்த பல ஆண்டுகளில் பல்வேறு அமர்வு களை நடத்தியுள்ளார். மேலும் அது பயனுள்ளதாக இருந்ததாக அவர் கூறுகிறார்.





''எனது அனுபவத்தில், குழு சிகிச்சையானது மக்கள் தடை களிலிருந்து படிப் படியாக விடுபட உதவுகிறது. சிகிச்சையாளர்கள் அவர்களுக்கு நல்வழிகாட்டி ஊக்குவிக் கிறார்கள். நடன அசைவுகளைச் செய்ய எந்த வற்புறுத்தலும் இல்லை. அது தானாகவே வந்துவிடுகிறது'' என்கிறார்.

எங்கள் சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் பெண்கள். ஆனால், நாங்கள் எந்த பாலினத்தையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். நாங்கள் இந்த திட்டத்தை விரும்பி செயல்படுத்தி வருகிறோம். வரும் காலங்களில் இதை மேலும் முன்னெடுத்துச் செல்வோம். தொழில் முனைவோர், சிறப்புக் குழந்தைகள் (இலவசம்) மற்றும் பிறருக்கான திட்டங்களைச் செயல்படுத்தவும் எண்ணி யுள்ளோம். எங்கள் சங்கம் நேரடி மற்றும் ஆன்லைன் சந்திப்புகளை நடத்திவருகிறது. ஆன்லைன் சந்திப்பின்போது அனைத்து உறுப்பினர்களும் பேசலாம். ஒவ்வொருவருக்கும் இரண்டு நிமிட நேரம் தரப்படுகிறது. அந்த வாரத்தின் குறை, நிறைகளைப் பற்றி அவர்கள் பேசலாம். ''இதை உறுப்பினர்கள் விரும்புகிறார்கள். பொதுவாக கூச்ச சுபாவம் உள்ளவர்கள் மற்றும் அதிகம் பேசாதவர்கள்கூட இதில் பங்கேற்கின்றனர்'' என்றார். அவரது நிறுவல் சந்திப்பில், வழிபாட்டுக்கு பதிலாக ஒலி மூலம் குணப்படுத்தும் அமர்வு நடத்தப்பட்டது. ■



Rotary
District 3212

THE MAGIC OF ROTARY



## Rotary club of Virudhunagar

# VIGNANA RATHAM

## SUCCESSFUL JOURNEY OF SCIENCE ON WHEELS

## SCIENCE MADE EASY






**Jyoti Kiran Das**
District chairman
Dist.: 317

**Sunita Jain**
Association
President

## Now in Innerwheel Club of Hubli Midtown Dist.317



**Shilpa Shetty**
Club
President

**Shailaja Bagade**
Club
Secretary

As on 07.11.2024

Total No. of Schools Visited
**629**

Total No. of Colleges Visited
**19**

Total No.of Students Explored
**1,84,528**

Total No. of Days Traveled
**443**

Total No. of Teachers Participated
**7,911**

Total No. of Kilometers Traveled
**34,216**

## Empowering Students Towards Great citizens for future

Vignana Ratham is a dynamic, enthusiastic program by driving technology to create interest & passion in science among the students.

We are glad to announce that Vignana Ratham has reached around 1,84,528 students in Tamilnadu.

**We are overwhelmed to travel 880 Kms from Virudhunagar to reach out the Students in Hubli.**

LEKHA ads/Dec 24/ Rotary/Inner

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

**Do you want**
to have Vignana Ratham traveling
to a school in your Town / City / District?
We would love to partner with you in this mission.

**PARIKSHAN**
CHARITABLE TRUST
Empowering society through Science...

**GET IN TOUCH WITH US**
**94422 48586**



Project Chairman
Rtn. R.Vadivel

Project Concept
Dr. Pasupathy

ADVT.

# உறுப்பினர்த்துவம், தொடர்ச்சி மற்றும் மாற்றத்திற்காக வாதாடும் RIPE டி காமார்கோ




*RIPE மரியோ டி காமர்கோ, RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி வித்யா (அமர்ந்திருப்பவர், வலது) மும்பையில் ஒரு சந்திப்பில் ரோட்டரியன்களுடன்.*

மும்பை, RIPE மாரியோ டி காமார்கோ அவர்களின் சமீபத்திய இந்திய பயணத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அங்கு அவர் ரோட்டேரி யர்கள் முன்னிலையில் உறுப்பினர் வளர்ச்சி, நீடிப்பு, கூட்டாண்மைகள் மற்றும் தலைமையின் மாற்றம் போன்ற முக்கிய கருதிகள் குறித்து உரையாற்றினார். “நமக்கு அதிக உறுப்பினர்கள் தேவை, ஏனென்றால் நமக்கு வயதாகிவிட்டது. ஆனால், வெறும் எண்ணிக்கையை அதிகரிக்க ரோட்டேரியர்களை சேர்க்க முயற்சிக் காதீர்கள். நம் மதிப்புகள் மற்றும் கூட்டு மனநிலையைப் பகிர்ந்து கொள்ளும் நபர்களை அடையாளம் காணவும்” என்று வலியுறுத்தினார். சாத்தியமான உறுப்பினர்களுக்கு தொழில்முறை மற்றும் வர்த்தக சங்கங்களை ஆராய ரோட்டேரியர் களை வலியுறுத்தினார். “இளைய தலைமுறையினரை ஈர்க்க புதிய வடிவ சங்கங்களை நாம் ஊக்குவிக்க வேண்டும், மேலும் சமூக ஊட கங்களில் ரோட்டரியின் நல்ல பணியை தெரிவிக்க வேண்டும்” என்று அவர் கூறினார், மேலும் முன்னாள் ரோட்டேரியர்களுடன் தொடர்புகளை புதுப்பிக்க பிரதிநிதிகளை வலியுறுத்தினார்.

ஆனால் இவை அனைத்தும் நடக்க, “நாம் மாற்றத்தைத் தழுவ வேண்டும். நாம் மாற்றத்தின் வேகத்தில் செல்லவில்லை என்றால், நாம் பொருத்தமற்றவர்களாகி விடுவோம் என்றார்.

தலைமைத்துவ தொடர்ச்சியில், டி காமார்கோ ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். “உண்மையான தொடர்ச்சி என்பது உங்கள் பின்வருபவரை மதித்து ஈடுபடுவதிலிருந்து வருகிறது. இது ஒரு திட்டத்தை ஒப்படைப்பது மட்டுமல்லாமல் ஒன்றாக வேலை செய்வதாகும். முடிவுகளை எடுப்பதற்கு முன், உங்கள் முன்னோடி மற்றும் பின்வருபவரை கலந்தாலோசிக்கவும்” என்றார்.

பில் அண்ட் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, WHO, UNICEF, US சென்டர் ஃபார் டிசீஸ் அண்ட் ப்ரிவென்ஷன் மற்றும் GAVI, தடுப்பூசி கூட்டணி ஆகியவற்றுடன் ரோட்டரியின் கூட்டாண்மையைப் பாராட்டி, ரோட்டரி போலியோ ஒழிப்புக்காக 2.7 பில்லியன் டாலர்களை திரட்டியபோது, அதன் பங்காளிகள் 18 பில்லியன் டாலர்கள் பங்களித்ததாக அவர் சுட்டிக்காட்டினார். “நமது வலிமை நிதி திரட்டலில் இல்லை, மாற்றமாக ஆதரவாளராக செயல்படுவதில் உள்ளது. போலியோ ஒழிப்புக்காக இதுவரை 22 பில்லியன் டாலர் செலவிடப்பட்டுள்ளது, ஆனால் இன்னும் ஆண்டுக்கு 100 மில்லியன் டாலர் தேவைப்படுகிறது.”

RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன், முன்னாள் உறுப்பினர்களுடன் மீண்டும் இணைவதன் அவசியத்தை வலுப்படுத்தினார். DG சேத்தன் தேசாய் RID 3141-ன் குறிப்பிடத்தக்க சேவை திட்டங்கள் மற்றும் சாதனைகளை தொகுத்து வழங்கினார். நிகழ்வை அதன் தலைவர் சுபாஷிஷ் மஜும்தார் தலைமையில் RC மும்பை ஜூஹு தொகுத்து வழங்கியது.■



*RIPE டி காமர்கோ (வலமிருந்து) DGE மனீஷ் மோட்வானி, DG சேத்தன் தேசாய் மற்றும் RID சுப்பிரமணியன் முன்னிலையில் சந்திப்பைத் தொடங்கி வைக்கிறார்.*

# மற்றவர்களுக்கு உதவும் தத்துவம்

V முத்துகுமரன்

உங்கள் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை கொடுங்கள், வேலை மற்றும் முக்கிய முடிவுகளை ஒரு போதும் தள்ளிப்போடாதீர்கள்'' என்று DGN ரவிசங்கர் டகோஜு, RID 3192, சென்னையில் RC மெட்ராஸ், RID 3234-ன் கூட்டத்தில் உரையாற்றினார். "வாழ்க்கை கணிக்க முடியாதது. நாளை அல்லது அடுத்த நொடி என்ன நடக்கும் என்று நமக்குத் தெரியாது. எனவே, வாழ்க்கையில் முக்கியமான முடிவுகளைத் தள்ளிப்போட்டு, உங்கள் பிள்ளைகளுக்குச் சுமையை ஏற்படுத்தாதீர்கள் என்றார்.

வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் போன்ற பெரிய பிரச்சினைகளை பற்றி பேசுகையில், "80 சதவீத மக்கள் நன்றாகப் படிப்பது, பணம் சம்பாதிப்பது, திருமணம் செய்துகொள்வது, செல்வத்தை உருவாக்குவது மற்றும் தங்கள் குழந்தைகள் மற்றும் குடும்பத்திற்கு அதிக செல்வத்தை சேர்ப்பது போன்ற ஒரே ஆசைகளை கொண்டுள்ளனர்'' என்று அவர் கூறினார். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையிலான கதை பெரும்பாலான மக்களுக்கு ஒரே மாதிரியாக இருக்கிறது, "ஆனால் ரோட்டேரியர்களாகிய நாம், நம் சேவையால் தனித்துவம் பெற்றிருக் கிறோம், ஏனெனில் நாம் பலரின் வாழ்வுகளை முன்னேற்றுவதற்காக கைகோர்த்துள்ளோம் என்று'' அவர் கூறினார். தனது வாழ்க்கைப் பயணத்தை நினைவு கூர்ந்த டகோஜு, "நான் பள்ளியில் சராசரிக்கும் குறைவான IQ மட்டத்தில் இருந்தேன். எனது நான்கு தசாப்தங்களுக்கும் மேலான வணிகத்தில், நான் பல சிரமங்களையும் சவால்களையும் கண்டிருக்கிறேன் ஆனால் அனைத்தையும் சமாளித்துவிட்டேன். இப்போது நான் சம்பாதிக்க உதவிய சமூகத்திற்குத் திரும்பக் கொடுக்க விரும்புகிறேன்'' என்றார்.

TRFக்கு ரூ.100 கோடி கொடுப்பதாக அவர் அறிவித்த போது, என்னுடைய மூத்த மகள் என்னிடம், விளம்பரம் இல்லாமல் ஏன் நீங்கள் அதைச் செய்ய கூடாது என்று சொல்லி எரிச்சலடைந்தார். நாங்கள் எங்களுடைய செல்வத்தில் ஒரு நல்ல பகுதியை கொடுப்பதால் எங்கள் இரு மகள்களின் எதிர்காலம் குறித்து என் மனைவி பாவ்லா கவலைப்பட்டார் என ரவிசங்கர் கூறினார்.

பாலார் ஆற்றின் புனரமைப்பில் தனது சொந்தச் சங்கமான RC பெங்களூருடன் கூட்டணி அமைக்க RC மெட்ராஸ்க்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். DG N S சரவணன் கூறுகையில், "TRF-க்கான அவர்களின் தன்னல மற்ற பங்களிப்பிற்காக டகோஜு குடும்பம் பாராட்டப்பட வேண்டும்,'' என்றார்.

சங்க தலைவர் செல்லா கிருஷ்ணா வரவேற்றார். DGE வினோத் சரோகி மற்றும் PDG பெஞ்சமின் செரியன் ஆகியரும் கலந்து கொண்டனர்.■



V முத்துகுமரன்

RID 3234 DG N S *சரவணன்* DGN *ரவிசங்கர் டகோஜுவை கௌரவிக்கிறார். மேலும் (இடமிருந்து)* PDG *பெஞ்சமின் செரியன், சங்க செயலாளர் ராஜேஷ் மணி, தலைவர் செல்லா கிருஷ்ணா, ரஞ்சித் பிரதாப் மற்றும்* N K *கோபிநாத் ஆகியோரும் உள்ளனர்.*



வயது வந்தோர் எழுத்தறிவு மையத்தில் தேர்வு நடக்கிறது.

Rotary PEOPLE OF ACTION

# ம.பி.யில் முதியோர் கல்வியில் கவனம் செலுத்தும் ரோட்டரி!

**ரஷீதா பகத்**



மத்தியப்பிரதேச மாநிலத்தில் 2011-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 1.07 கோடி முதியோர் எழுத்தறிவின்றி இருக்கும் நிலையில், அவர்களை கல்வியறிவு உள்ளவர்களாக மாற்றும் முயற்சியில் அரசுடன் இணைந்து RID 3040 மாவட்டம், முழு வேகத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்த ரோட்டரி மாவட்டத்தில் PDG ரவி லாங்கர் மற்றும் அவரது மனைவியும் ஓய்வுபெற்ற வேதியியல் பேராசிரியருமான நளினி லாங்கர் மற்றும் தற்போதைய மாவட்ட ஆளுநரான அனிஷ் மாலிக் ஆகியோர் ஆர்வத்துடனும் விடாமுயற்சியுடனும் ராஷ்ட்ரீய சிக்க்ஷா கேந்திரா (RSK), உல்லாஸ் நவ்பாரத் எழுத்தறிவு இயக்கம் உள்ளிட்ட அரசு அமைப்புகளுடன் இணைந்து முதியோர் கல்வியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ரோட்டரியின் முக்கியப் பகுதிகளான சமூகசேவை மற்றும் எழுத்தறிவித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில், உஜ்ஜைனியில் தமது மாவட்டம் சமீபத்தில் நகர மக்களிடையே ஒரு சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தியதாக மாவட்ட ஆளுநர் மாலிக் தெரிவித்தார். “மத்தியப் பிரதேச மாநிலத்தில் முதியோர் எழுத்தறிவின்மையை அகற்றும் வகையில் மாநில அரசுடன் இணைந்து செயலாற்றி வருகிறோம். நாங்கள் நடத்திய நிகழ்ச்சியில் மாநில முதல்வர் மோகன் யாதவ், மெய்நிகர் முறையில் கலந்து கொண்டார்” என்றும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய முதல்வர், மாநில கல்வித்துறையுடன் ரோட்டரி கூட்டாக செயல்பட்டு வருவதை வரவேற்றார். ரோட்டரி உறுப்பினர்கள் மாநில அரசு செயல்பாட்டாளர்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் முதியோரை எழுத்தறிவின்மை நிலையிலிருந்து மீட்டெடுக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். அதிக மக்கள் கல்வியறிவு பெற்றால், அவர்கள் தங்களுக்குரிய உரிமைகள் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். மேலும் மாநிலம் உயர்நிலையில் வளர்ச்சி பெற ஒன்றிணைந்து செயலாற்றுவார்கள் என்றும் அவர் கூறினார்.

ஒரு கோடிக்கும் அதிகமான முதியோர்களை எழுத்தறிவு பெற்றவர்களாக மாற்றுவதற்கான மொத்த செலவு ரூ.1,000 கோடி என்றும் இதில் ரூ.700 கோடியை மத்திய அரசும், மீதமுள்ள ரூ.300 கோடியை மாநில அரசும் வழங்கும் என்று PDG லாங்கர் தெரிவித்தார். முதியோர் கல்விக்கான திட்டத்துடன் தொடர்புடைய ரோட்டேரியன்கள் தங்கள் பங்காக 10,000 எழுத்தறிவு கையேடுகளை (அட்சர போதி) அச்சிட்டு வழங்கியுள்ளது. இதற்கான பாடத்திட்டத்தை மத்தியப்பிரதேச அரசு தயாரித்து வழங்கியுள்ளது.

இந்த “அட்சர போதி” (எழுத்தறிவு கையேடு), எழுத்தறிவு இல்லாதவர்களுக்காக அடிப்படைக் கல்வி பாடத்திட்டத்தை கொண்டு தயாரிக்கப்பட்டது. “இந்த கையேடுக்கு நிறைய தேவை

*''அரசை திறம்பட செயல்பட வைப்பதே ரோட்டரியின் பணியாகும்''*

**PDG ரவி லாங்கர்**

இருப்பதாலும், குறுகிய காலத்தில் அரசால் அதை அச்சிட்டு வழங்க முடியாததாலும் அந்தப் பணியை, அதாவது 1 லட்சம் கையெடுகளை அச்சிட்டு வழங்கும் பணியை ரோட்டரி மேற்கொண்டுள்ளது. இவற்றில் முதல் கட்டமாக 10,000 கையேடுகள் RID 3040-க்கு உட்பட்ட, மாநிலத்தில் உள்ள 23 மாவட்டங்களில் விநியோகிக்கப் பட்டுள்ளன''.



*DG அனிஷ் மாலிக் (இடமிருந்து இரண்டாவது) வயது வந்தோர் எழுத்தறிவு மையத்தில்.*

படிப்பறிவில்லாத முதியோர்களை கல்வியறிவு பெற்றவர்களாக மாற்றுவதற்கு பல வழிகள் உள்ளன. ஆனால், அடிப்படையில் பொது வான புத்தகம் “அட்சர சாத்தி” அல்லது ஒருவருக்கு எழுத்தறிவு என்னும் பரிசை வழங்கும் இளம் துணை என்றுகூட சொல்லலாம். இது ஒருவகையில் ஒவ்வொருவரும் ஒருவருக்கு சொல்லிக் கொடுக்கும் திட்டமாகும்.



உஜ்ஜைனியில் நடைபெற்ற கூட்டத்தில் முதல்வர் மோகன் யாதவ், UNLP-யுடனான ரோட்டரியின் ஒத்து ழைப்பை அங்கீகரித்தார். மேலும் ரோட்டரியின் உதவியால் இந்தியாவில் போலியோ ஒழிக்கப் பட்டதுபோல், ம.பி.யில் முதியோர் கல்வித் திட்டம் முழுவெற்றிபெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார். “எங்களுடன் பணியாற்றும் ரோட்டரி மற்றும் இதர தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மாநிலத்தில் உள்ள 1.07 கோடி எழுத்தறிவில்லாத முதியோர்களை எழுத்தறிவு பெற்றவர்களாக, அட்சர சாத்திகளாக மாற்றுவார்கள் என நம்புகிறோம்”. அந்த வகையில் அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவர்களும் இப்பணிக்கு உதவி வருகிறார்கள் என்றார் அவர்.

மத்திய அரசின் எழுத்தறிவுத் திட்டத்தை விவரித்த அவர், மத்தியப் பிரதேச மாநிலம் விரைவில் 100 சதவீத எழுத்தறிவு பெற்ற மாநிலமாக மாறும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இந்த பிரசாரத்தின் கீழ் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள, 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் முறையான கல்விபெற தவறி விட்டால், அவர்கள் இளம் தொண்டர்கள் மூலம் கல்வியறிவு பெறுவார்கள் என்று மேலும் கூறினார்.

இத்திட்டத்தின்கீழ் கடந்த செப்டம்பர் மாதம், ம.பி.யில் உள்ள 52 மாவட்டங்களில் 25 லட்சம் பேரை இலக்காகக் கொண்டு எழுத்தறிவுத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இதில் 9.3 லட்சம் பேர் கலந்துகொண்டனர். அவர்களில் 8.55 லட்சம்பேர் தேர்வில் வெற்றிபெற்றனர். அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன என்று மாவட்ட ஆளுநர் மாலிக் தெரிவித்தார். “நானே சில தேர்வு மையங்களுக்குச் சென்று பார்வை யிட்டேன். நவபாரத் சேத்னா கேந்திரங்களில் நடைபெற்ற தேர்வில் முதியோர்கள் பலர் ஆர்வமுடன் பங்கேற்றது அற்புதமான காட்சியாக இருந்தது”.

எழுத்தறிவுக் கல்விச் சான்றிதழ் பெறுவதற்காக தேர்வில் கலந்து கொள்ள வந்த பெண் முதியோருடன் அவர்களது மகள்கள், மருமகள்கள் மற்றும் இதர உறவினர்கள் வந்திருந்தது ரோட்டேரியன்களின் மனதைத் தொடும் வகையில் அமைந்திருந்தது என்றார் PDG லாங்கர். தேர்வு எழுதியவர்களில் பெண்கள் எவ்வளவுபேர் என்று கேட்டதற்கு, “சரியான எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால், பல்வேறு மையங்களில் இந்த தேர்வு எழுத வந்தவர்களில் ஆண்களைவிட பெண்களே அதிகம் என்பதை என்னால் சொல்ல முடியும். தேர்வு எழுத வந்த முதியோர்களுக்கு ஏராளமான மாணவர்கள் உதவி செய்ததையும் அவர்கள் எழுத்தறிவு தூதுவர்களாகச் செயல்பட்டதையும் கண்டு நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்”.





9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்கள், தங்கள் சுற்றுப்புறங்களில் உள்ள முதியோர் எழுத்தறிவுபெறாத இருண்ட சூழ்நிலையிலிருந்து எழுத்தறிவு பெற்ற முதியோர்களாக வெளிச் சத்துக்கு வரவேண்டும் என்று ஆர்வமுடன் இத்திட்டத்தில் பங்கேற்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

உஜ்ஜைன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான லாங்கர், இந்த எழுத்தறிவுத் திட்டத்தில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டி வருகிறார். மேலும் சங்கத்தின் தலைவர் ஈஸ்வர் சந்த் துபே மற்றும் செயலாளர் பன்குரி ஜோஷி மற்றும் சங்கத்தின் எதிர்காலத் தலைவர்கள் உதவியுடன் 2030-ம் ஆண்டுக்குள் மாநிலத்தில் உள்ள 1 கோடி முதியோரை எழுத்தறிவுபெற்றவர்களாக வெற்றிகரமாக மாற்றிவிட முடியும் என்று நம்புகிறார். “இலக்கை தாண்டி ஓரிரு ஆண்டுகள் கூடுதலானாலும் பரவாயில்லை, ஆனால், இலக்கை நாங்கள் அடைந்துவிடுவோம் என்று உறுதியாக நம்புகிறேன்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

UNLP என்பது 2030-க்குள் இந்தியாவை முழு எழுத்தறிவு பெற்ற நாடாக உருவாக்கும் நோக்கம் கொண்ட தேசிய கல்விக் கொள்கையின் திட்டமாகும் என்று லாங்கர் விளக்கினார். இந்த திட்டம் ராஷ்ட்ரீய சிக்க்ஷா கேந்திரங்கள் (RSK) மூலமாக செயல்படுத்தப்படுகிறது. இது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கொண்ட திட்டமாகும். நாடு முழுவதும் கல்வி முறையில் இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்வதுதான் இதன் நோக்கம். அரசுப்பள்ளிகளில் 70 சதவீத மாணவர்களும் தனியார் பள்ளிகளில் 30 சதவீத மாணவர்களும் உள்ளனர். இவர்களில் அரசுப் பள்ளி மாணவர்கள்தான் முக்கியமானவர்கள். ஏனெனில் எழுத்தறிவில்லாத முதியோர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களைச் சுற்றித்தான் இருக்கிறார்கள். எனவே அவர்களை ஊக்குவிப்பதிலும், அடிப்படை எழுத்தறிவு கல்வியை வழங்குவதிலும் அவர்கள்தான் முக்கிய பங்குவகிக்க முடியும். “உண்மையில் இந்திய இளைஞர்கள்தான் நாட்டில் நிலவும் எழுத்தறிவின்மை குறித்து அதிகம் கவலைப்படுகிறார்கள். மேலும் எதிர்காலம் கேள்விக்குறியாக இருப்பதால் அதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். எனவே NSS, NCC உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களில் உள்ள மாணவர்கள், முதியோர்களுக்கு கல்வி கற்பிப்பதில் ஈடுபட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்” என்று அவர் மேலும் கூறினார்.

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு RSK இயக்குநராக இருந்த ராஜு என்ற IAS அதிகாரி தனக்கு நெருக்கமாக இருந்ததை அவர் நினைவுகூர்ந்தார். “அவர் ஒரு எளிமையான மனிதர், எனது அலுவலகத்துக்கு அடிக்கடி வருவார். முதியோர் கல்விக்கான அடிப்படை கொள்கையை வகுக்க நாங்கள் உதவினோம்”.

இந்த சூழ்நிலையில் ரோட்டரி பல்வேறு அம்சங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக முதியோர் கல்வியை ஒரு இயக்கமாக முன்னெடுத்துச் செல்வதில் உண்மையிலேயே ஆர்வம் உள்ள அரசு அதிகாரிகளை அடையாளம் காண உதவுகிறது, மாவட்ட ஆளுநர் மாலிக் சுட்டிக்காட்டுவது போல, இத்திட்டத்திற்காக கடினமாக உழைக்கும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அரசு அதிகாரிகளை ரோட்டேரியன்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். மேலும் அவர்கள் தங்கள் செல்வாக்கு மற்றும் சக்தியைப் பயன்படுத்தி அத்தகைய வர்களுக்கு குடியரசு தினம் அல்லது சுதந்திர தினம் போன்ற முக்கியமான நிகழ்வுகளில் சான்றிதழ் வழங்கி அங்கீகரிக்குமாறு மாவட்ட அதிகாரிகளிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

“அரசை திறம்பட செயல்பட வைப்பதே ரோட்டரியின் பணியாகும்” என்று சுருக்கமாக சொல்கிறார் ரவி லாங்கர். உண்மைதானே!■



Rotary District 3192
THE MAGIC OF ROTARY
Rtn. Stephanie A Urchick
Rotary International President 2024-25
PDG Rtn. T N Subramanian
Rotary International Director 2023-25
Rtn. Anirudha Roy Chowdhury
RI Director of Zone 5 & 6
(2023 - 2025)
PDG Rtn.Flt.Lt. K P Nagesh
Rotary International Director Elect 2025-27
Rtn. N S Mahadev Prasad
Rotary District Governor, RID 3192 2024-25
Rtn. Shankar Srinivas
Chairman, South Asia International Peace Conference 2025
SOUTH ASIA INTERNATIONAL PEACE CONFERENCE 2025
SOUTH ASIA INTERNATIONAL PEACE CONFERENCE - 2025
"Healthier World Greener Tomorrow"
Let's create a world where Peace is nurtured by nature and well-being !
Goals & Outcomes - Health
•Promote Access to Healthcare
•Enhance Health Education
•Support Disease Prevention and Treatment
•Improve Maternal and Child Health
•Address Mental Health Issues
•Strengthen Healthcare Infrastructure
•Support Clean Water and Sanitation
•Empower Healthcare Workers
•Foster Collaboration and Innovation
Date & Venue:
22nd & 23rd March 2025 @ KTPO
Whitefield, Bengaluru, India
FOR QUERIES, PLEASE CONTACT:
INFO.DGOFFICE2425@GMAIL.COM,
MOBILE NO. +91 8123303888 / +91 81233 84222,
OFFICE POSTAL ADDRESS: # 192, 3RD FLOOR,18TH CROSS,
20TH MAIN, MRCR, VIJAYANAGAR, BANGALURU-560 040
WWW.SAIPC.IN
REGISTER NOW!
SAVE THE DATE


ADVT.

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## ஒடிசா கிராமத்தினருக்கு வெள்ள நிவாரண உதவி

ஒடிசா மாநிலத்தின் கென்ட்ரபடா, பட்ரக் மாவட்டங்களிலுள்ள இரண்டு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 60,000 மக்கள் DG யக்யன்சிஸ் மொஹாபாத்ரா தொடங்கிய RID 3262ன் பேரிடர் உதவித் திட்டத்தால் பலன் பெற்றார்கள். இந்த மாவட்டத்தின் ரோட்டரி சங்கங்கள் இம்மாநிலத்தில் பெரும் சேதத்தைக் கொண்டுவந்துள்ள, பெரும் பயிர், சொத்து இழப்பை உண்டாக்கியுள்ள டனா புயலால் பாதிக்கப்பட்ட கிராமத்தினருக்கு மளிகைப் பொருட்கள், ஆடைகள், படுக்கை விரிப்புகள், கொசு வலைகள், தண்ணீர், சானிட்டரி நாப்கின்கள், குடைகள், தார்பாலின் கொண்ட உதவிப் பொதிகளை வழங்கினார்கள் (மொத்தச் செலவு: ரூ.10 லட்சம்).■



DG *யக்யான்ஸிஸ் மொஹாபத்ரா ஒரு குடும்பத்திற்க்கு வெள்ள நிவாரணம் பொருட்கள் அளிக்கிறார்.*

## அடிமையாதலைத் தடுத்தல்

RI மாவட்டம் 3191 மற்றும் பெங்களூரு மாநகராட்சி, NIMHANS இணைந்து வடிவமைத்துள்ள அடிமையாதலுக்கு எதிரான அலையின்கீழ், பள்ளிகள், கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பெற்றோர், மருத்துவ மாணவர்களுக்குப் பயிலகங்கள் நடைபெறவுள்ளன. தங்கள் பிள்ளைகள் எதற்கோ அடிமையாகி விட்டார்களோ என்று ஐயப்படும் பெற்றோருக்கு, அவர்களை எப்படி ஆதரிப்பது என்று வழிகாட்டப்படுகிறது, மருத்துவ மாணவர்கள் மருந்தகச் சூழலில் அடிமையாதல் சூழ்நிலைகளைக் கையாளக் கற்கிறார்கள் என்றார் இந்த மாவட்டத்தின் அடிமையாதலைத் தடுத்தல் குழுத் தலைவர் இக்ரம் அகமது கான். போதைப் பொருட்களைத் தவறாகப் பயன்படுத்துவது, டிஜிட்டல் அடிமையாதல் ஆபத்துகளைப்பற்றி மாணவர்களுக்குக் கற்றுத்தரப்படுகிறது. ஆகஸ்டில் தொடங்கிய இந்த முன்னெடுப்பு இதுவரை 16 பள்ளிகளில் 1,600 மாணவர்கள், 150 ஆசிரியர்கள், 200 பெற்றோருக்கு உதவியுள்ளது.■



RID 3191-*ன் போதை தடுப்பு குழு தலைவர் இக்ரம் அகமதுகான் கல்லூரி மாணவர்களிடையே உரையாற்றுகிறார்.*

## புற்றுநோயாளிகளுக்கு இரவு உணவு

அக்டோபரில், RID 3142-ச் சேர்ந்த நவி மும்பையின் 17 ரோட்டரி சங்கங்கள் இணைந்து, எல்லா நாட்களும் இரவு உணவு என்ற திட்டத்தைத் தொடங்கினார்கள். இதன்கீழ், ஆஷா நிவாஸ், டாடா நினைவு மையம், ACTREC, கார்கரில் உள்ள 400 புற்றுநோயாளிகள், அவர்களைக் கவனித்துக்கொள்வோருக்கு இரவு உணவு வழங்கப்படுகிறது. இந்த மாதத்துக்கான உணவுச் செலவு களுக்கென ACTREC இயக்குநர் Dr நவீன் கட்ரியிடம் ரூ.4.03 லட்சத்தை வழங்கினார் DG தினேஷ் மேத்தா. இந்தச் சங்கங்கள் இந்த ரோட்டரி ஆண்டைத் தாண்டியும் இந்தத் திட்டத்தைத் தொடர உறுதி கொண்டுள்ளன. புற்றுநோயாளிகளும் அவர்களுடைய குடும்பத்தினரும் கற்பனை செய்ய இயலாத உடல், உணர்வுச் சவால்களை எதிர்கொள்கிறார்கள். எங்கள் இலக்கு, அவர்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவை வழங்கி அவர்களுடைய சுமையைச் சிறிதளவேனும் குறைப்பது என்றார் இவர்.■




*DG தினேஷ் மேத்தா (இடது) மற்றும் அவரது மனைவி ஜோதி, ரோட்டேரியன்களுடன், நோயாளிகளுக்கு இரவு உணவு பரிமாறுகிறார்கள்.*

## மாணவர்களுக்கு அறிவியல் கண்காட்சி

RID 3212ஐச் சேர்ந்த, 50 வயதான RC SPIC நகர் தூத்துக்குடி, கடந்த முப்பதாண்டுகளாக ஆண்டுதோறும் SPIC நகர் உயர்நிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சியொன்றை நடத்திவருகிறது. இதில் சுமார் 300 மாணவர்கள் கணக்கு, இயற்பியல், வேதியியல், கணினி அறிவியல், சமூகக் கல்வியில் புதுமைச் சிந்தனையுள்ள திட்டங்கள், பரிசோதனைகளைக் காட்சிப்படுத்துகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, இயந்திரக் கைகள், சூரிய ஆற்றலில் இயங்கும் வண்டிகள், வளங்குன்றாப் பண்ணை மாதிரிகள், வரலாற்றுப் பிரதிகள் போன்றவை. மாணவர்கள் செயலிகள், விளையாட்டு களின் வழியாகத் தங்கள் நிரலெழுதுதல் திறன்களைக் காட்சிப்படுத்துகிறார்கள்.

இந்த நிகழ்வு மாணவர்களிடையில் படைப்பூக்கச் சிந்தனை, சிக்கல்களைத் தீர்க்கும் திறன்கள், அறிவியல் இயல்பை வளர்க்கும் இலக்கைக் கொண்டுள்ளது என்றார் இந்தச் சங்கத்தின் உறுப்பினர் ராதாகிருஷ்ணன்.■



*ஸ்பிக் நகர் பள்ளி அறிவியல் கண்காட்சியில் RC SPIC நகர் தூத்துக்குடி உறுப்பினர்கள்.*



ESA/NASA-S. Cristoforetti

விண்வெளியில் குவிமாடத்தில்
சமந்தா கிறிஸ்டோஃபோர்ட்டி

# இதற்கு முன் எந்த “டிக்-டாக்”கரும் சென்று வராத இடம்

**டயனா ஷோபெர்க்**

சமந்தா கிறிஸ்டோஃபோர்டியின் விண்வெளிப் பயணம் அவளது குழந்தைப் பருவத்தில், இத்தாலியின் ஆல்பஸ் மலைப்பகுதியில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் தொடங்கியது. உறவினர்களுடன் மரங்களைச் சுற்றிவந்தது மற்றும் குளிர்கால பனிச்சறுக்கு விளையாட்டின்போது சாதனைப் பயணம் அவளின் மனதில் துளிர்விட்டது. ஆனால், புத்தகங்களில் அவர் மேற்கொண்ட பயணங்கள் படுக்கும் நேரத்தில் ரகசியமாக வாசிக்கப்பட்டது. அதுதான் அவள் கற்பனையை முதன்மைப்படுத்தி எழுச்சிக்கு வித்திட்டது. “பல ஆண்டுகளுக்கு முன் நிலவுக்குச் செல்ல ஏணியில் ஏறாமல் இருந்திருந்தால், நான் மார்கோபோலோவுடன் சீனா வரை பயணம் செய்யாமல் இருந்திருந்தால் அல்லது சந்தோகனுக்கு அருகில் காவியப் போரில் ஈடுபடவில்லை என்றால் நான் இன்று ஒரு விண்வெளி வீராங்கனையாக இருப்பேனா என்பது சந்தேகம்” என்று அவர் 2018 இல் எழுதிய Diary of an Apprentice Astronaut” புத்தகத்தில் நினைவுகூர்ந்துள்ளார்.

17 வயதில் உயர்நிலைப் பள்ளியில் சீனியராக இருந்த போது அவள் செயின்ட் பால், மின்னஸோட்டாவுக்கு ஒரு பரிமாற்ற மாணவியாகச் சென்றார். “நான் ஏற்கெனவே விண்வெளிப் பயணத்தால் ஈர்க்கப்பட்டவள். நான் ஒரு Star Trek ரசிகை என்கிறார் அவர். அனைத்தும் அமெரிக்காவை மையமாகக் கொண்டவை. ஒருநாள் தன் தாயுடன் உணவு சாப்பிடும் போது இருவரும் அலபாமாவில், ஹன்ட்ஸ்வில்லியில் உள்ள விண்வெளி முகாம் விளம்பரத்தைப் பார்த்தனர். கிறிஸ்டோஃபோர்டி அதில் சேர்ந்தார். விண்வெளி முகாமில் விண்கலம் பற்றி படித்து, அங்கிருந்த மாதிரி விண்கலத்தை இயக்கிப் பார்த்தார். “நான் அந்த வாரம் முழுவதும் ஒரு விண்வெளி வீராங்கனையாகச் செயல் பட்டேன். விண்வெளியுடன் நான் நெருங்கி இருப்பது போல இருந்தது” என்கிறார் அவர்.

அவள் வீடு திரும்பியதும், அரிய வாய்ப்பான ஒரு விண்வெளி வீரர் ஆவதற்கான திறன்களைப் பெறுவதற்கான இரண்டாவது பயணத்தை மேற்கொண்டாள். பின் என்ஜினீயரிங் படிப்பில் சேர்ந்து படித்து இத்தாலிய விமானப்படையில் முதல் பெண் போர் விமானிகளில் ஒருவரானார்.

ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி இதற்கு முன் இரண்டு முறை மட்டுமே விண்வெளி வீரர்களைத் தேர்வு செய்தது. அதுவும் 1990-களின் தொடக்கத்தில், அப்போது கிறிஸ்டோஃபோர்டி இளம் பருவத்தில் இருந்தார். இந்த நிலையில் 2008 ஆம் ஆண்டில் அந்த ஏஜென்சி புதிதாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தபோது, இது வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் அரிய வாய்ப்பு என்பதைப் புரிந்துகொண்டாள்.

மொத்தம் 8,412 விண்ணப்பங்கள் வந்திருந்தன. பொது அறிவு சோதனை, திறன் அறிவு, உளவியல் மதிப்பீடு, மருத்துவப்பரிசோதனை மற்றும் நேர்காணல் என பல நடைமுறைகளை அவர் கடந்து வந்தார். ஹாரி பாட்டரின் ஆடியோ புத்தகத்தைப் பயன்படுத்தி ரஷிய மொழித்திறனை வளர்த்துக் கொண்டார். இறுதியில், அவள் எதிர்பார்த்த செய்தி வந்தது. அவளது கனவு நிறைவேறியது. “நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள்” என்ற தொலைபேசி தகவலைக் கேட்டதும் வாவ் இது உண்மைதானா? என்று எனக்குள்ளே கேட்டுக் கொண்டேன் என்கிறார் அவர்.

2009-ம் ஆண்டு செப்டம்பர் மாதம், அவர் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு செல்வதற்கான பயிற்சியைத் தொடங்கினார். விண்வெளியில் நடப்பதற்கான பயிற்சியின்போது அவர் எடையின்மையை உருவகப்படுத்த தண்ணீருக்கு அடியில் பயிற்சி பெற்றார். ரஷிய மற்றும் அமெரிக்க விண்வெளி வீரர்கள் உடைகளுக்கு அவர் பொருத்தமானவராக இருந்தார். விண்வெளி நிலையத்தில் இணைக்கப்படாதது, விண்வெளியில் மிதப்பது போன்ற பணியின் போது ஏற்படும் சிறிய விபத்துகளை எதிர்கொள்ளவும் தயாரானாள்.

இந்த பயிற்சிகள் ஒன்றின்போது தான் கோலன் ஆம் ரெய்ன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான பெர்ன்ட் போட்டிகர் என்பவரை முதல் முதலாக சந்தித்தார் கிறிஸ்டோஃபோர்டி. அவசர மருத்துவத்தில் சர்வதேச அளவில் புகழ்பெற்ற நிபுணர் போட்டிகர். விண்வெளி நிலையத்தில் அவசர நிலை ஏற்பட்டால் அதிலிருந்து எப்படி மீண்டு வருவது என்று


ESA/NASA

*விண்வெளியில் மனித உடல் எவ்வாறு மாறுகிறது என்பதை அறிய ஒரு சாதனம் கிறிஸ்டோஃபோர்ட்டியின் கொழுப்பு மற்றும் உடல் அளவுருக்களை அளவிடுகிறது.*

பயிற்சி அளித்தார் போட்டிகர். “அவள் கடினமானவள், மிகவும் நேர்மையானவள், எதிலும் அதிகம் கவனம் செலுத்துபவள். ஆயிரக்கணக்கானவர்கள் விண்ணப்பித்த நிலையில் அவரை எப்படித் தேர்வு செய்தார்கள் என்பதை என்னால் எளிதில் கற்பனை செய்து பார்க்க முடிகிறது’’ என்கிறார் அவர்.

2014 நவம்பர் மாதம், பயிற்சிக்குப் பின் கிறிஸ்டோஃபோர்டி விண்வெளிக்கு ராக்கெட்டில் புறப்பட தயாரானார். பைகானூரில் உள்ள ஏவுதளத்தில் சோயுஸ் TMA 15 M விண்கலம் எரிபொருளை கக்கியவாறு விண்ணில் பாய்ந்தது.

விண்வெளிக்கு பறக்கும் குழுவினர் ரோட்டரி உறுப்பினர் களுக்கு தெரிந்த நீண்டகால மரபுகளை மிஞ்சும் சடங்குகளைச் செய்கின்றனர். விண்வெளிக்கு புறப்படுவதற்கு முன் நடந்த வைகளை கிறிஸ்டோஃபோர்டி தனது புத்தகத்தில் விவரித்துள்ளார். பாரம்பரிய சோவியத் கால திரைப்படம் திரையிடல், மரம் நடுதல், பழச்சாறுடன்கூடிய சிற்றுண்டி ஆகியவை இதில் அடங்கும். குழு உறுப்பினர்கள் தாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கதவில் கையெழுத்திட்டனர். கத்தோலிக்க திருச்சபையின் பாதிரியாரிடமிருந்து புனித நீரை தெளித்துக் கொண்டனர். அதன் பின்னர் ஏவுதளத்திற்கு அழைத்துச் செல்ல தயாராக இருந்த பேருந்தில் ஏறினர். அப்போது அவர்கள் “Trava u Doma’’ அல்லது “Grass by the Home’’ போன்ற பிரபலமான ரஷிய ராக் இசைப் பாடல்களைப் பாடினர். இது ரோட்டரி உறுப்பினர்களுக்கு நன்கு தெரிந்திருக்கும்.

விண்வெளி நிலையத்துக்கு சென்றவுடன் புதிய விண்வெளி வீரர்களுக்கு ஒரு உயர்ந்த சங்கத்தின் உறுப்பினர் என்பதை குறிக்கும் வகையில் அவர்களுக்கு பேட்ஜ் வழங்கப்படும்.

சோயுஸ் விண்கலம் புறப்பட இன்னும் சில விநாடிகளே இருக்கும் நிலையில் கிறிஸ்டோஃபோர்டி மற்றும் அவரது குழுவினர் தங்கள் இருக்கையில் அமரவைக்கப்பட்டனர். 9 நிமிடங்களுக்குப் பிறகு என்ஜினிலிருந்து துண்டிக்கப்பட்டு ராக்கெட் சுற்றுப்பாதையை அடைந்தது. “தடிமனான கையுறை அணிந்த கைகள் என்னுடன் சேராமல் கண்ணுக்கு உயரே தொங்கிக் கொண்டிருந்தன’’ என்று அவர் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் 6 மணி நேரத்தில் விண்வெளி நிலையத்தை அடைந்தனர். இரண்டு மணிநேர நடைமுறைகளுக்குப் பிறகு சோயுஸ் விண்கலத்துக்கும் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கும் இடையிலான கதவு திறந்தவுடன் ஷகாப்லெரோவ், கிறிஸ்டோ ஃபோர்டி இருவரும் ஒரு உந்து சக்தி மூலம் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்குள் தள்ளப்படுகின்றனர். இது கிட்டதட்ட மறுபிறப்பு போன்றது என்று விவரிக்கிறார் கிறிஸ்டோ

ஃபோர்டி. கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையிலான தொடர்புகளின் அரிய புள்ளிகளில் ஒன்று. இதன் மூலம் விண்வெளி நிலையத்தில் வசித்த 216-வது நபர் என்ற பெருமையைப் பெற்றார்.

2000-ம் ஆண்டில் ஒரு அமெரிக்கர், 2 ரஷியர்கள் என முதல் குழு வந்ததிலிருந்து சர்வேதச விண்வெளி நிலையத்தில் 23 நாடுகளைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் தொடர் ஓட்டம் போல் 24 ஆண்டுகளில் சென்று வந்துள்ளனர். கிறிஸ்டோஃபோர்டி இரண்டு முறை சென்று வந்துள்ளார். அதாவது முதல் முறை 2014 நவம்பர் முதல் 2015 ஜூன் மாதம் வரை சுமார் 200 நாட்கள் விண்வெளியில் வசித்த பெருமையைப் பெற்றுள்ளார். அதன் பின்னர் இரண்டாவது முறையாக 2022 ஏப்ரல் முதல் அக்டோபர் வரை விண்வெளி நிலையத்தில் கமாண்டராக இருந்துள்ளார். கமாண்டராக இருந்த முதல் ஐரோப்பிய பெண் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

கிறிஸ்டோஃபோர்டி விண்வெளியில் அனுசரித்து செயல்பட்டு அனைத்திலும் முதலிடத்தை பிடித்தார். தூங்கும் நேரத்தில் சுவரில் கயிறுகட்டி உடலில் இணைத்துக் கொண்டு தூங்காமல், தனது சிறிய அறையில் மிதந்தபடியே தூங்கினார். அவளது முதல் உணவு துருவிய முட்டைகள் மற்றும் ஓட்ஸ். மிதந்தபடியே அவற்றை உட்கொண்டார்.

வேலைநேரம் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை. தினமும் காலை கூட்டத்துடன் பணி தொடங்கும். விண்வெளி நிலையம் அறிவியல் ஆராய்ச்சி கப்பல்போல் இருந்தது. விண்வெளியில் தங்கியிருந்த போது அவர், செவித்திறனில் சத்தத்தின் விளைவு, தசைநார் பராமரிப்பு, எலும்பு முறிவுக்கான சிகிச்சை, திரவக் கலவைகளின் இயற்பியல்தன்மை, உலோகத்தின் பண்புகள் என பல அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு பங்களிப்பு செய்துள்ளார்.

விண்வெளி நிலையத்தை வெற்றிடமாக வைத்திருக்க வேண்டும் என்பதால் விண்வெளி வீரர்கள் அதை தூய்மையாக பராமரிக்க வேண்டும். சரக்கு வாகனங் களிலிருந்து பொருள்களை இறக்குதல் மற்றும் ஏற்றுதல் பணிகளும் இருக்கும். எனவே அவர்கள் தசைகளை ஒருங்கிணைக்க மற்றும் எலும்பு தேய்மானத்தை தடுக்க தினமும் இரண்டரை மணி நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். அவ்வப்போது மேலாளர்கள், விமான கட்டுப்பாளர், மருத்துவர் அல்லது உளவியல் நிபுணர்களுடன் உரையாட வேண்டும். பணி முடிந்ததும் வீட்டுடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது குவிமாடம் (Cupola) வழியாக வெளிக்காட்சிகளை ரசிக்கலாம். கிறிஸ்டோ ஃபோர்டி இப்படித்தான் பொழுதைபோக்கினார்.

## சில வழிகளில் இது ரோட்டரி கூட்டங்களைப் போன்றது

கொலோன் ஆம் ரெய்ன் ரோட்டரி சங்கத்தின் டஜனுக்கு மேலான உறுப்பினர்கள் ஒரு திங்கள் மாலை புகழ்பெற்ற கிரான்ஹூஸ் அலுவலக கட்டடத்தில் கூடினர். அங்கிருந்து பார்த்தால் கலைநுணுக்கத்துடன் கற்கள் பதிக்கப்பட்ட கொலோன் கதீட்ரல் கட்டடத்தின் கோபுர நிழல் ரைன் நதியில் தலைகீழாகத் தெரியும். சங்கத்தின் வெளியூர் உறுப்பினர் இரவின் பேச்சாளராக, அவளது பணி குறித்து மெய்நிகர் முறையில் பேசவிருந்தார். அவளுடைய பகுதியில் Wi-Fi தொடர்பு துல்லியமாக இருந்தது. அனைவரும் ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தனர். கடைசியாக அவள் தோன்றினாள். அப்போது இந்த சந்திப்பு முற்றிலும் மாறுபட்ட திருப்பத்தை கொடுத்தது. ஏனெனில் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்த சமந்தா கிறிஸ்டோ ஃபோர்டி மிதந்து வந்தார்.

கிறிஸ்டோ ஃபோர்டி இரண்டாவது பயணத்தின் போது நான்கு மாதங்கள் விண்வெளி நிலையத்தில் இருந்தார். அந்த ஆராய்ச்சி கப்பல் 6 படுக்கை அறைகள் கொண்ட வீட்டின் அளவுக்கு பெரிதாக இருந்தது. ஒவ்வொரு நாளும் 90 நிமிடங்கள் பூமியை சுற்றி வந்தது. அவளது தலைமுடி புவியீர்ப்புவிசை காரணமாக தளர்ந்து இருந்தது. அவள் கேள்விகளை எடுத்துக் கொண்டு பிரபஞ்ச காட்சிகள் மூலம் கருத்துக்களை விளக்கினாள். “பெரும்பாலான நேரங்களில் நான் குவிமாடத்திலிருந்து மற்றவர்களை சந்தித்தேன். ஏனெனில் அப்போதுதான் ஜன்னல்கள் மூலமாக மக்களுக்கு பூமியைக் காட்டமுடியம்’’ என்று ரோட்டரி இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

விண்வெளி வீரர்களின் தனிப்பட்ட பொருள்கள் கடுமையாக கண்காணிக்கப்படுகின்றன. அவர்கள் கண்டிப்பாக 3.3 பவுண்டு எடை வரம்புக்குள் இருக்க வேண்டும். கிறிஸ்டோ ஃபோர்டி தேர்ந்தெடுத்த பொருட்களில் கொலோன் ஆம் ரெய்ன் ரோட்டரி சங்கத்தின் சிவப்பு-வெள்ளை பேனர் அடங்கும். அந்த சந்திப்பு முடிவடையும் நேரத்தில் சக ரோட்டரி சங்க உறுப்பினர்கள் கரவொலி எழுப்பி அவருக்கு வாழ்த்தும் நன்றியும் தெரிவித்தனர். இதையடுத்து அவர் கேமரா காட்சி களிலிருந்து மறைந்தார். அவருக்குப் பின்னால் ரோட்டரி சங்கத்தின் பேனர் திரையில் மிதந்ததை பார்க்க முடிந்தது.




*சர்வதேச விண்வெளி நிலையத்தில் கிறிஸ்டோஃபோர்ட்டி.*




கிறிஸ்டோஃபோர்ட்டியின்
முதல் விண்வெளி நடை.

ESA/NASA/Roscosmos

சில சமயங்களில் ஒருவாரம் முழுக்க நீங்கள் பணி செய்ய வேண்டியிருக்கும். ஒருவேலை முடிந்தால் அடுத்த வேலை காத்திருக்கும். எப்போதும் வேலையிலேயே மூழ்கியிருக்க வேண்டும். ‘‘விண்வெளியில் இருப்பதையே நாம் மறந்து விடுவோம்’’ என்கிறார் அவர். ‘‘மிதப்பது உங்களது இயல்பான இயக்க வழி. உட்காருவது அல்லது நடப்பது போன்ற உணர்வை நீங்கள் மறந்துவிடுவீர்கள்’’.

ஆனாலும், அவள் பிரமிப்பான உணர்வைத் தக்கவைத்துக் கொண்டாள். முதல் பணியின் இறுதி நாட்களில், இரவு நேர மேகங்களை கண்டதை அவள் நினைவுகூர்ந்தார். அதிக உயரத்தில் நீலநிற மேகங்களை பார்ப்பது பரவசத்தை ஏற்படுத்தும் என்கிறார். நான் அரை வருடத்திற்கு மேலாக விண்வெளியில் இருந்தேன். அதனால், நான் சோர்வாக இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால், நான் நன்றாகத்தான் இருக்கிறேன்.

இரண்டாவது முறையாக விண்வெளிக்குச் சென்ற கிறிஸ்டோஃபோர்டி 7 மணிநேர விண்வெளியில் நடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார். இப்படிச் செய்த முதல் ஐரோப்பிய பெண் இவர் தான். அவரும் மற்றொரு ரஷிய விண்வெளி வீரரும் பரிசோதனையின் ஒரு பகுதியாக 10 நானோ செயற்கைக்கோளை நிலைநிறுத்தினர். விண்வெளி நிலையத்துக்கு வெளியே இணைக்கப் பட்ட இயந்திர கைகளுடன் (ரோபாடிக் கைகள்) வேலை செய்தனர். அது விண்வெளி வீரர்கள் பராமரிப்பு பணிக்கு உதவியது.

உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் இதைச் செயல்படுத்துவது குறிப்பாக என்னைப் போன்ற சிறிய பெண்களுக்கு மகிழ்ச்சியானது. இதைச் செய்வதற்கு கவனமும் மன உறுதியும் தேவை. நீங்கள் அதைச் செய்துவிட்டால், உண்மையிலேயே அந்த வேலையில் நீங்கள் மூழ்கி விடலாம். இறுதியாக அதைச் செய்து முடித்த போது சாதனை உணர்வு ஏற்பட்டது. மேலும் அந்த அனுபவம் ஆச்சரியம் அளிப்பதாக இருந்தது என்று அவர் விளக்கினார்.

விண்வெளியில் விண்வெளி வீரர்கள் தினமும் செய்ய வேண்டிய வேலைகள் மற்றவர்களால் திட்டமிடப்படுகின்றன. மளிகைக் கடைக்கு ஓடுவது அல்லது போக்கு வரத்தை எதிர்த்துப் போராடி வெல்வது போன்றது இல்லை. அவர்கள் பூமிக்கு மீண்டும் திரும்பியதும், கலாசார அதிர்வை திரும்ப பெறுவது போல் உணர் கிறார்கள். புவியீர்ப்பு எனப்படும் தொல்லை தரும் விஷயம் இருக்கிறது. முதல் பயணத்துக்குப் பிறகு தரையிறங்கியதும் என்ன செய்தோம் என்பதை கிறிஸ்டோ ஃபோர்டி தனது புத்தகத்தில் விரிவாக குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணிபுரியும் தனது கூட்டாளியான லயோனல் ஃபெர்ராவுடன் தொடர்பு கொள்ள நண்பர் ஒருவரிடம்



தொலைபேசி கடன் வாங்கியதாக கூறியுள்ளார். பேசிமுடித்ததும் தொலைபேசியை மிதப்பதுபோல சக ஊழியரிடம் தள்ள முற்பட்டாள். விண்வெளி வீரரின் தவறுக்கு இது உதாரணம். எனினும் தொலைபேசி யை சரியான சமயத்தில் தாங்கிப் பிடித்துவிட்டாள்.

கிறிஸ்டோஃபோர்டி ஒரு விண்வெளி வீராங்கனை, என்ஜினீயர், போர் விமானி மற்றும் டிக் -டாக்கர். சமூக ஊடகத்தில் அவரது வாழ்க்கை வரலாறு இப்படிச் சொல்கிறது: ‘‘இதுவரை டிக் டோக்கர் யாரும் சென்றுவராத இடத்துக்கு இந்த ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் வீராங்கனை சென்று வந்துள்ளார்’’.

அவர் டிக்- டாக் செயலி மூலம் அறிவியல் பரிசோதனைகள் முதல் விண்வெளி வாழ்க்கை வரை பல விஷயங்களை விடியோவாக பதிவிட்டுள்ளார். விண்வெளியில் கழிப்பறையை எப்படிப் பயன்படுத்துவது, மிதப்பது, அரோரா ஒளியை ஊடுருவிச் செல்வது ஆகியவையும் இதில் அடங்கும். விண்வெளியில் எப்படி காபி குடிப்பது என்பது பற்றிய ஒரு விடியோவில், ஒரு ஃபாயில் பை அவருக்கு அருகில் மிதந்து வருகிறது. அதில் ‘‘காபி பிளீஸ்’’ என்று திரையில் வரைகலை மூலம் தெரிவிக்கிறது. பின்னணியில் ஜோனா நில்சனின் ‘‘காபி பிரேக்’’ பாடல் ஒலிக்கிறது. அது தொடர்பான விடியோவை இணைத்து மைக்ரோ புவிஈர்ப்புவிசையில் ஏன் சாதாரண கோப்பை வேலை செய்வதில்லை என்பதையும் அவரிடம் இருந்த கோப்பையிலிருந்து காபி திரவம் வாய்க்குள் எப்படி செல்கிறது என்பதையும் விளக்கியிருந்தார்.

விண்வெளி நிலையப் பணிகள் துல்லியமாக இருந்த நிலையில், கிறிஸ்டோஃபோர்டி சுற்றுப்பாதை வாழ்க்கையை சுவையாக அளிக்க வழிகண்டுபிடித்தார். முதல் பயணத்தின்போது லாவாஸாவுடன் இணைந்து எஸ்பிரஸோ மேக்கரை கொண்டுவர இணைந்து செயல் பட்டார். ஸ்டார் டிரெக்கிலிருந்து மாற்றி டிராகன் சரக்கு விண்கலத்தில் அதன் வருகையைக் கொண்டாடினார். எஸ்பிரஸோ இயந்திரம் திரவ இயக்கவியல் முறையில் இரண்டு பணிகளைச் செய்தது. யுனிசெப் முன் முயற்சியின் ஒரு பகுதியாக ஜான் லெனன்னின் கிளாசிக் பாடலான ‘‘இமாஜின்’’ பாடலை குவிமாடத்திலிருந்து பாடினார். இது உலகம் முழுவதும் உள்ள மக்கள் பாடும் பாடல்களில் ஒன்றாகும். அந்த பாடல் அடங்கிய விடியோ 2014 புத்தாண்டு தினத்தன்று வெளியானது.

பூமியில் இருக்கும்போது கிறிஸ்டோஃபோர்டி கொலோனில், கணவர் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வசிக்கிறார். அவளுடைய நல்ல குணங்களால் ஈர்க்கப்பட்ட போட்டிங்கர், அவரது முதல் மற்றும் இரண்டாவது பயணத்துக்கு இடையே கோலன் ஆம் ரெய்ன் ரோட்டரி சங்கத்தில் சேர அழைப்பு விடுத்தார். ‘‘ஒரு நோக்கத்துடன் வாழ விரும்பும் நபர்களுடன் பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள இது நல்ல இடம் என்று நான் நினைத்தேன்’’ என்கிறார் அவர். விண்வெளி வீரருடன் உணவு அருந்த யார் தான் விரும்பமாட்டார்கள்? ‘‘ஒரு மேஜையில் அவளுடன் சேர்ந்து அமர்ந்து மதுகுடிப்பதும், சாப்பிடுவதும் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது’’ என்கிறார் போட்டிகர்.

விண்வெளிக்கு அப்பால், கிறிஸ்டோஃபோர்டி பூமியின் மேற்பரப்பிலிருந்து 19 மீட்டர்கள் கீழை கடல் தளத்தில் 9 நாட்கள் நாஸாவின் நீமோ 23 குழுவின் கமாண்டராகப் பணி செய்தார். அவர் நார்வேயில் செங்குத்தான பாறைகளுக்கு அருகில் சென்று குறுகலான அழகிய கடல் பகுதியில் சந்திரன் பற்றிய புவியியலைப் படிக்கும் களப் பயணம் மேற் கொண்டார். அங்கு அவர் பயிற்சி பெற்ற பின் மீண்டும் விண்வெளியில் நிலவின் மேற்பரப்பை ஆராயும் பணியிலும் பங்கேற்றார்.

கடலின் ஆழம் முதல் விண்வெளி ஆய்வு வரை எல்லா இடங்களிலும் இருந்த அவரின் அடுத்த பணி என்ன? அவர் யோசிக்கிறார். ‘‘நான் நியூஸிலாந்து செல்வேனா? எனக்குத் தெரியாது. அங்கு செல்வதற்கு முயற்சி வேண்டும். செலவழிக்க நேரமும் வேண்டும். நான் விண்வெளி நிலையத்தில் இருந்தபோது தினமும் நியூஸாந்துக்கு மேலே பறந்து கொண்டிருந்தேன். அது ரொம்ப எளிதாக இருந்தது. இல்லையா? சொல்கிறாள். ‘‘நான் ஜன்னல் வழியாக பார்க்க முடியும். ஒரு விதத்தில் நான் அங்கு இருந்தேன்’’ என்கிறார் அவர்.

ஆனால், அதேநேரத்தில், அது கீழே எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்க ஆர்வமாக இருக்கிறது. எனவே படகோனியாவுக்குச் செல்ல நான் விரும்புகிறேன். சிலிக்கு சென்று மலைகளை ரசிக்க விரும்புகிறேன். நீங்கள் விண்வெளியில் இருக்கும் போது இந்த இடங்களெல்லாம் உங்களுக்கு பரிச்சயமாக இருக்கும். ஆனால், பூமியில் இருக்கும்போது அவை வெகுதூரத்தில் இருக்கும்.

©Rotary

# ஒரு ரோட்டேரியன் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து வீடு கட்டுகிறார்

ரஷீதா பகத்

ரோட்டரி மாவட்டம் 3030-க்கு உட்பட்ட சந்திரபூர் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியன் ஒருவர், டாக்டர் பாலமுகுந்த் பாலிவால் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு வீடு கட்டியுள்ளார். தூக்கி எறியப்பட்ட காலி சிப்ஸ் பாக்கெட்டுகள், பழைய ஷாம்பூ பாட்டில்கள், மருந்து மாத்திரை சுற்றப்பட்ட அட்டைகள், பால் பாக்கெட்டுகள், கிழிந்த பாலிதீன் பைகள், பிளாஸ்டிக் கேன்கள் என பல்வேறு வகையான கழிவுப் பொருள்களிலிருந்து இரண்டு மாடி கொண்ட வீட்டை அவர் கட்டியுள்ளதாக அவர் விவரித்திருந்தார். ஒருமுறை பயன்படுத்தப்பட்ட 13 டன் பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து, இந்த சுற்றுச்சூழல் ஆர்வலர், அழகான, உறுதியான முன்பே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட, துருப்பிடிக்காத, கரையான் அரிக்காத, தீப்பிடிக்காத 625 சதுர அடி கொண்ட பிளாஸ்டிக் வீட்டை, நாக்பூரிலிருந்து 180 கி.மீ. தொலைவில், சந்திரபூரில் உள்ள தாவரவியல் பூங்கா அருகே கட்டியுள்ளார்.

ஆம். தரை, சுவர்கள், ஜன்னல்கள், கதவுகள், கழிப்பறை, வெளிமுற்றம் (வெராண்டா) என அனைத்தும் சிறப்பு முறைகளில் வலுவூட்டப்பட்ட உறுதியான பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் உருவாக்கப்பட்டன. முதல் மாடியில் உள்ள பால்கனியிலிருந்து பார்த்தால் சுற்றுப்புறத்தில் உள்ள பூங்காவின் தோற்றத்தை பார்க்க முடியும்.

தொழில்முறையில் மயக்கவியல் நிபுணரான அவர், குழந்தை பருவத்தில் தனது தாயார் பிளாஸ்டிக் கழிவுகளை புதுமையான முறையில் பயன்படுத்துவதைக் கண்டு ஈர்க்கப்பட்டார். “1960-களில் எனது தாயார் பாலியஸ்டர் புடவை அணிந்துவந்தார். பின்னர் அந்த புடவை பழசாக போனாலோ அல்லது கிழிந்துவிட்டாலோ மறுசுழற்சி செய்வதை நான் பார்த்திருக் கிறேன். அதாவது புடவைகளை எரித்து, அடுப்புச் சாம்பலுடன் கலந்து கெட்டியான பேஸ்டாக உருவாக்குவார். பின்னர் அதை மூங்கில் மீது தடவி முறம் தயாரிப்பார். அந்தக் காலத்தில் வீட்டில் இருக்கும் பெண்கள் உணவு தானியங்களிலிருந்து தூசி கள், கற்களை அகற்றுவதற்கு இந்த முறத்தை பயன்படுத்தி வந்தனர். ஆனால், காலப்போக்கில் இந்த வழக்கம் மறைந்துவிட்டது. மூங்கில் முறத்தின் பின்புறம் பூசப்படும் இந்த சாம்பல் பூச்சு வலுவாக இருந்து நீண்டநாள் உழைக்கும்.

உடைந்த பானைகள் மற்றும் பாத்திரங் களை சரிசெய்ய இந்த பேஸ்டை பயன்படுத்தியதை குழந்தைகள் வியப்பாக பார்த்தார்கள். புத்திசாலித்தனமாகவும் முன்னேறிச் செல்வதற்கும் பள்ளிக்குச் செல்லத் தேவையில்லை என்பதை சிறு வயதிலேயே கற்றுக்கொண்டனர். 2014-ம் ஆண்டு “ஸ்வச் பாரத் அபியான்” என்னும் தூய்மை இயக்கத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்திய போது பிளாஸ்டிக்கை புதுமையான வழிகளில் எனது தாயார் பயன்படுத்தியது என் நினைவுக்கு வந்தது. நான் வளர்ந்த போது பெருமளவில் கழிவுகள் குப்பையாக கொட்டப்படுவதும், தூக்கி எறியப்பட்ட பிளாஸ்டிக் பைகள் கடலில் கொட்டப்படுவதும் விலங்குகள் அதை தின்று மூச்சுவிட திணறுவதையும் கண்டு நான் வருந்தினேன்.






நாக்பூர் அருகே சந்திரபூரில்
ஒரு தாவரவியல் பூங்காவில்
பிளாஸ்டிக்கால் கட்டப்பட்ட வீடு.




*சியாச்சினில் இந்திய ராணுவ கண்காட்சியின் ஒரு பகுதியாக பிளாஸ்டிக் வீடு.*



*பிளாஸ்டிக் கழிவுகளால் செய்யப்பட்ட பூந்தொட்டி.*





தரை, சுவர்கள், கூரை மற்றும் கதவு - அனைத்தும் பிளாஸ்டிக் கழிவுகளால் ஆனவை.



கடந்த காலங்களில் மக்கள் நலத்திட்டங்கள் சிந்தித்து செயல்படுத்தப்பட்டன. பிரதமரின் வீடுகட்டும் திட்டம் (ஆவாஸ் யோஜனா) அறிமுகமானபோது ஜில்லா பரிஷத் அவரைத் தேடி வந்தது.

தற்போது 68 வயதாகும் டாக்டர் பாலிவால், ரோட்டரி நியூஸ்-க்கு அளித்த ஒரு பேட்டியில், “பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துவது குறித்து 22 வருடமாக ஆர்வமாக இருந்த போதிலும், அது தொடர்பாக ஏதாவது ஒரு பரிசோதனை செய்துவந்தபோதிலும் பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி வீடுகள் கட்டலாம் என்னும் யோசனையை 8 ஆண்டுகளுக்கு முன்னர்தான் செயல்படுத்த தொடங்கினேன்” என்று தெரிவித்தார்.

நமது வீடுகளிலிருந்து உற்பத்தியாகும் பிளாஸ்டிக் கழிவுகள் மலைபோல் குவிந்து கிடக்கிறதே. இதை என்ன செய்வது என்பது குறித்து அவர் பல ஆண்டுகளாக தீவிரமாக சிந்தித்தார். அவரது மனதில் பல்வேறு யோசனைகள் தோன்றின. பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு பெஞ்சுகள், செடி வளர்க்கும் தொட்டிகள், பூந்தொட்டிகள் உள்ளிட்டவற்றை தயாரிக்கலாம் என்று நினைத்தார். பின்னர் ஒரு குழுவை அமைத்து தோட்டத்தில் போலீஸ்காரர்களின் பயன்பாட்டுக்காக நீடித்து உழைக்கும் 1,000 பெஞ்சுகளை நகராட்சிக்கு தயாரித்துக் கொடுத்தார்.

அடுத்து, டன் கணக்கில் இருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை நீடித்து உழைக்கும் வீடு கட்டும் பொருளாக ஏன் மாற்றக்கூடாது என்று யோசித்தார். எப்படி வடிவமைத்தீர்கள் என்று கேட்டதற்கு, உள்ளூர் கைவினைக் கலைஞரான சந்தோஷ் ஜாதவ் மிகச் சிறந்த சிற்பி, பிளாஸ்டர் ஆப் பாரிஸை பயன்படுத்தி அவர் பல சிலைகளை வடிவமைத்துள்ளார். ஆனால், கோவிட் தொற்றுக்காலத்தில்

அவருக்கு ஆர்டர் ஏதும் கிடைக்காததால் தொழிலில் சரிவு ஏற்பட்டது. அப்போதுதான் அவர் டாக்டர் பாலிவால் குழுவில் சேர்ந்தார். எட்டு பேர் கொண்ட குழுவினர் பிளாஸ்டிக் கழிவுகளை வீடு கட்டுவதற்கான கட்டுமானப் பொருளாக மாற்றுவது குறித்து பல்வேறு வழிகளில் சிந்தித்து செயல்பட்டனர்.

பிளாஸ்டிக் கழிவுகளை கட்டுமானப் பொருளாகப் பயன் படுத்தும் யோசனை அவருக்கு எப்படி வந்தது என்று கேட்டதற்கு, பாலிவால் கூறுகையில், ''வீடுகள், அலுவலகங்கள் கட்டுவதற்கு அடிப்படை கட்டுமானப் பொருளாக கான்கிரீட்டுக்கு பதிலாக வேறு எதைப் பயன்படுத்தலாம் என்று நான் யோசித்து வந்தேன். சந்தோஷ் இப்போது ஒரு கட்டடக் கலைஞர் மட்டுமல்ல, ஒரு நல்ல சிற்பி. கோவிட் தொற்றின்போது வேலை இல்லாமல் இருந்த அவர் எங்களுடன் சேர்ந்தார். இப்போது பல பணிகளை அவர் கையாள்கிறார்'' என்றார்.

பிளாஸ்டிக் கழிவுகளை கட்டுமானப் பொருளாக மாற்றும் நடைமுறைகளை அவர் விளக்கினார். ''முதலில் பிளாஸ்டிக் கழிவுகளைப்





*வீடு முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு, சியாச்சினுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பாலிவாலின் குழுவினரால் ஒன்று சேர்க்கப்பட்டது.*










காவல் நிலையத்தில் பிளாஸ்டிக் தடுப்புகள் மற்றும் பெஞ்சுகள் நிறுவப்பட்டுள்ளன.

பெறுவோம். பின்னர் அதை கழுவி உலர்த்துவோம். பின் இயந்திரங்கள் மூலம் சிறு சிறு துண்டுகளாக வெட்டுவோம். அதன்பின் மற்றொரு இயந்திரத்தில் போட்டு உருக்குவோம். இப்படிச் செய்த பின் அந்த பொருள் அரை திண்ம நிலையை (பாதி திடநிலை) அடையும். குயவன் களிமண்ணை எந்த வடிவத்திலும் வடிவமைப்பதைப் போல இதுவும் பிசுபிசுப்பான திடப்பொருளாக இருக்கும். குயவன் களிமண்ணை விளக்காக அல்லது சிலையாக வடிவமைப்பதுபோல் நாம் எந்த வடிவம் வேண்டுமோ அதற் கேற்றால்போல் அச்சில் வைத்து கட்டுமானப் பொருளைத் தயாரிக்க முடியும்'' என்கிறார்.

இவரிடம் பிளாஸ்டிக் கழிவுகளைச் சேகரிப்போர் உள்பட 15 பேர் குழுவாக வேலை செய்கின்றனர். "இப்போது எங்கள் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் தங்களிடம் இருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை எனக்கு அனுப்பிவைக்கின்றனர். ஏனெனில் அதை நல்லவிதமாக பயன்படுத்த முடியும் என்பது அவர்களுக்குத் தெரியும்''.

பதப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொருள் உறுதியானது மற்றும் நீடித்து இருக்கும் என்று தெரிந்தவுடன் அதை அவர் வீடு கட்டுவதற்கான கட்டுமானப் பொருளாக பயன்படுத்துகிறார். தொழில் முறையில் மயக்கவியல் மருத்துவரான உங்களுக்கு இதற்கெல்லாம் நேரம் இருக்கிறதா? என்று கேட்டதற்கு, "நான் முழுநேர மருத்துவர்தான். ஆனால், எனது குழுவினர் சந்தோஷ் ஜாதவ் தலைமையில் இப்பணியைச் சிறப்பாகச் செய்கிறார்கள்''.

சந்தோஷ் ஜாதவ் அபாரமான அறிவாற்றல் கொண்டவர். மேலும் புதுமைகளை கண்டு பிடிக்கவும், இயந்திரங்களை கையாள்வதிலும் வல்லவர் என்று பாராட்டினார் பாலிவால். "அவரது அறிவாற்றல் நடைமுறைக்கு சாத்தியமானது. அவர் இதற்காக படித்து பட்டம்பெறவில்லை.

அவர் ஒன்றும் பொறியாளர் பட்டம் பெற்றவரல்ல, ஆனால் என்ஜினீயரை விட சிறப்பாகச் செயல்படக்கூடியவர். அவரை என்னிடம் அனுப்பிவைத்த கோவிட் தொற்று காலத்துக்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும். கோவிட் வந்திராவிட்டால் எனக்கு ஜாதவ் கிடைத்திருக்கமாட்டார்'' என்றார் பாலிவால்.

பிளாஸ்டிக் கழிவுகளால் கட்டப்பட்ட வீடு எப்படி உறுதியானதாகவும் நீடித்து உழைக்கக் கூடியதாகவும் இருக்கும்? அவை முன்கூட்டியே தயாரிக்கப்பட்டவை மற்றும் எளிதில் எடுத்துச் செல்லக்கூடியவை அல்லவா என்று கேட்டதற்கு, ''அடித்தளம் சிமெண்ட், எஃகு மற்றும் கான்கிரீட்டால் உருவாக்கப்பட்டது. ஆனால், சட்டங்கள் இரும்பால் தயாரிக்கப்பட்டவை. அவை சுவற்றில் பதிக்கப்படுபவை. நான் கட்டிய வீட்டில் 2.5 டன் ஸ்டீல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மொத்தம் ரூ.8 அல்லது ரூ.9 லட்சம் செலவாகும். ஆனால், செங்கல் பயன்படுத்தப்படவில்லை. கழிப்பறையும் பிளாஸ்டிக் கழிவுகளால் கட்டப்பட்டது. மேலும் கழிப்பறைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பூகம்பம் அல்லது சூறாவளி வந்தால்கூட பாதுகாப்பாக இருக்கும். வெப்ப அல்லது மின்கடத்தல் இல்லை. வெளியில் வெப்பநிலை குளிராகவோ அல்லது வெப்பமாகவோ இருந்தாலும் வீட்டில் அதன் தாக்கம் தெரியாது. வீட்டின் உள்ளே ஒரேமாதிரியான வெப்பநிலை பராமரிக்கப்படுகிறது. எனவே மின் பயன்பாடு குறைவாகவே இருக்கும்''.



பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு வீடு கட்டுவதால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாது, மின்சார பயன்பாடும் மிகக் குறைவாகவே இருக்கும். சமையலறையும் பாது காப்பானது. ஏனெனில் பிளாஸ்டிக் கழிவுகள் 250 டிகிரி செல்சியசில் உருக்கப்படுகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

தற்போது சந்திரபூரில், தாவரவியல் பூங்காவில் வைக்கப் பட்டுள்ள இந்த மாதிரி பிளாஸ்டிக் வீடு, பார்வையாளர்களுக்கு திறந்து விடப்பட்டுள்ளது. இது மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் ஆச்சரியத்துடன் இந்த வீட்டை பார்க்கிறார்கள். பள்ளிக் குழந்தைகளும் இங்குவந்து பார்த்து விட்டு வீட்டின் நிலைத்தன்மை குறித்து பல கேள்விகளை எழுப்புகின்றனர் என்கிறார் டாக்டர் பாலிவால்.

இந்த வீட்டைக் கட்டச் சொன்ன ஜில்லா பரிஷத், இந்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுமா, இந்த மாதிரியை பின்பற்றுமா என்ற முக்கியமான கேள்விக்கு, ''அரசு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ஆனால், அரசாங்கம் எதைச் செய்தாலும் அதற்கு நீண்டநாள் எடுத்துக் கொள்கிறது. தாமதமானாலும் உறுதியான முடிவு எடுக்கும் என்று நம்புகிறேன்'' என்றார்.



இதற்கிடையில் அவர் தனது முயற்சியை தளரவிடவில்லை. ஏற்கெனவே சியாச்சினில் ஒரு பிளாஸ்டிக் வீடு அமைத்துள்ளார். இந்திய ராணுவம் ஏற்பாடு செய்த கண்காட்சியில் அது இடம்பெற்றுள்ளது. அதைப் பார்வையிட்ட குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பிளாஸ்டிக் கழிவுகளால் கட்டப்பட்ட வீட்டை ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு பல கேள்விகளை கேட்டாராம்.

“இந்த வீடு 15 அடிக்கு 12 அடி அளவில் முன்பே வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டது. முதலில் சண்டிகருக்கு அனுப்பி வைக்கப் பட்டது. பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் சியாச்சினுக்கு கொண்டு செல்லப்பட்டது. எனது குழு உறுப்பினர்களும் உடன் சென்று 15 நாட்கள் தங்கி வீட்டை ஒருங்கிணைத்தனர்'' என்றார்.

இந்த வீட்டுக்கு எவ்வளவு செலவானது, யார் இதற்கு பணம் கொடுத்தார்கள் என்று நான் அவரிடம் கேட்டேன். உடனே டாக்டர் பாலிவால் சிரித்துக் கொண்டே, “தயவு செய்து இதற்கு எவ்வளவு பணம் செலவானது, எங்கிருந்து பணம் வந்தது என்று கேட்காதீர்கள். கடவுள் எனக்கு நிறைய பணம் கொடுத்திருக்கிறார். தொடர்ந்து கொடுக்கிறார். எது எப்படியிருந்தாலும், சமீபத்தில் தொழிலதிபர் ரத்தன் டாடா மறைந்தார். அவர் இறக்கும்போது எந்த செல்வத்தை கூட எடுத்துச் சென்றார்? “நீங்கள் மற்றவர்களுக்கு அதிகம் பகிர்ந்து அளித்தால், கடவுள் உங்களுக்கு அதிகம் கொடுப்பார்'' என்று நான் நம்புகிறேன்''.

பிளாஸ்டிக் கழிவுகள் தவிர, எலெக்ட்ரானிக் கழிவுகள், பழைய துணிகள் உள்ளிட்டவற்றையும் கட்டுமானப் பொருளாக மாற்ற முடியும். “எங்கள் நகரத்தில் எந்த ஒரு கழிவு உற்பத்தி ஆனாலும், அதை நாங்களே சேகரித்து பயன்படுத்து கிறோம்'' என்றார் அவர்.

உங்கள் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் யாராவது பிளாஸ்டிக் கழிவுகளால் ஆன வீடுகட்டுவதில் ஆர்வம் காட்டு கிறார்களா என்ற கேள்விக்கு, “ஆம் பலரும் இதில் ஆர்வம் காட்டுகிறார்கள். அதுபற்றி பேசு கிறார்கள். எங்கள் ரோட்டரி மாவட்ட ஆளுநர் சமீபத்தில் சந்திரபூருக்குவந்து பிளாஸ்டிக் கழிவுகளால் உருவாக்கப்பட்ட வீட்டை பார்த்துவிட்டு பாராட்டினார்.''

போலீசார் மற்றும் பிறருக்காக பெஞ்சுகள் தயாரித்தது தவிர, அவரது குழுவினர், பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு போலீசாருக்கு தடுப்புகளையும் தயாரித்துள்ளனர். அவை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் இலகுவானவை, இரும்பு தடுப்புகளைவிட உறுதியானவை. பயன்படுத்துவதற்கு வசதியானது என்கிறார் அவர்.

நீங்கள் கேட்டிராத ஒன்றைச் சொல்லுகிறேன். “உலகில் பேரழிவை சந்திப்பதற்கு காரணமாக இருப்பதற்கு பிளாஸ்டிக்தான் மூலகாரணம் என்று பலரும் சபிக்கிறார்கள். ஆனால், நாம் பிளாஸ்டிக் கழிவுகளை கஷ்டப்பட்டு சேகரித்து, கற்பனையை செலுத்தி ஆக்கப்பூர்வமான முறையில் பயன்படுத்தினால் பிளாஸ்டிக் ஒரு வரப்பிரசாதமாக மாறும். என்னை கேட்டால், “இந்த நூற்றாண்டில் உலகிற்கு கிடைத்த பரிசு பிளாஸ்டிக். நாம் அதற்கு வாய்ப்பு கொடுத்தால், அது நமது வாழ்க்கையை மாற்றும்'' என்று கூறுவேன்.

அப்படியானால், ஒருநாள் நீங்கள் பிளாஸ்டிக் கழிவுகளால் சொந்தமாக வீடு கட்டுவீர்களா?

“நிச்சயமாக அதைச் செய்வேன்'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் டாக்டர் பாலிவால். ■



ரோட்டரியின்
சேவைத்திட்டங்கள்
ரோட்டரி செய்திக்குழு

## கருப்பை வாய்ப் புற்றுநோய்த் தடுப்பு முன்னெடுப்பு

RC பேளூர், RID 3291, தன்னுடைய சங்க உறுப்பினரான BD அகர்வாலின் ரூ.75 லட்சம் நன்கொடையைப் பயன்படுத்தி, 5,000 பெண்களுக்குக் கருப்பை வாய்ப் புற்று நோய்த் தடுப்பு மருந்து வழங்கவுள்ளது. 8 பள்ளிகளில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 2,300க்கும் மேற்பட்ட பெற்றோர், கல்வியாளர்களை எட்டியுள்ளன. ஹௌரா-விலுள்ள ஸ்வைகா பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் 156 பெண்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கப் பட்டுள்ளது.



*ஒரு மருத்துவர் ஒரு பெண்ணுக்கு தடுப்பூசி போடுகிறார்.*

## திறன் மேம்பாட்டு மையம்

நலிந்த சமூகங்களுக்கு மேம்பட்ட திறன் மேம்பாட்டை வழங்கி ஆற்றல் அளிக்கும் இலக்குடன் பஞ்சாபில் ஃபதேகர் சாகிப் மாவட்டத்தில், மெஹெர் பாபா தொண்டு அறக்கட்டளையில், பாஷ் இந்தியாவுடன் இணைந்து RC சண்டிகர், RID 3080, அமைத்துள்ள ரோட்டரி பாஷ் திறன் பயிற்சி மையத்தை RIDE K P நாகேஷ் தொடங்கி வைத்தார்.



*RIDE K P நாகேஷ், PDGக்கள் ஜிதேந்திர அனேஜா (RID 3192) மற்றும் பிங்கி படேல் (RID 3060) திறன் பயிற்சி மையத்தில் ஒரு பயனாளி வேலை செய்வதைப் பார்க்கிறார்கள்.*

## வீட்டுவசதித் திட்டம்

நலிந்த குடும்பங்களுக்கு வீடுகளை வழங்கும் ரோட்டரி கிராமத் திட்டத்துடன் தன்னுடைய பிளாட்டினம் ஆண்டு விழாவைக் கொண்டாடியது RC ஆலப்புழா, RID 3211. உறுப்பினர் பங்களிப்புகள், CSR ஆதரவின்மூலம் முழுமையாக நிதியளிக்கப்பட்டுத் திட்டமிடப் பட்டுள்ள 7 வீடுகளில் 3 வீடுகளைப் பலன் பெறுவோருக்கு வழங்கினார் PRID மகேஷ் கோட்பாகி.



*PRID மகேஷ் கோட்பாகி புதிய வீட்டின் சாவியை DG சுதி ஜப்பார் (இடது) முன்னிலையில் ஒரு குடும்பத்திற்கு வழங்குகிறார்.*

## மாதச்சுழல் தூய்மை முன்னெடுப்பு

மாதச்சுழல் நலத்தை முன்னெடுப்பதற்காக RC புனே சென்ட்ரல், RID 3131 மற்றும் ரதி ஜகத் மருந்தகத் தொண்டு அறக்கட்டளை 31 பள்ளிகளில் 6,500 பெண்களுக்கு, குறைந்த விலையில் சானிட்டரி நாப்கின்களை வழங்கின. ஆண்டுக்கு 2 லட்சம் நாப்கின்கள் வழங்கப்படும்.



*PDG பிரசாந்த் தேஷ்முக் (இடது) சங்கத்தின் முன்னாள் தலைவர் மதுசூதன் ரதியுடன் திட்டத்தின் தொடக்க விழாவில்*

# போலியோவை ஒழிக்க தொடர் ஓட்டம் ...

## இறுதிச்சுற்று...

போலியோ தொடர்
ஓட்டப்பந்தயத்தில்
**வெற்றி இலக்கை
அடையும் வீரராக
செயல்படுங்கள்.**

நாம் ஒன்றுசேர்ந்து,
**வெற்றிக்கோட்டை
கடந்து வரலாறு
படைப்போம்.**




உங்கள் **ஆதரவும்** நிதி **உதவியும்** போலியோ இல்லாத உலகத்தை அடைய உதவும்.

நன்றியுடன், Rtn PDG டாக்டர் **E.K.சகாதேவன்,** ஈரோடு சென்ட்ரல் ரோட்டரி சங்கம், RID 3203, மண்டலம் 5,
**போலியோ இல்லாத உலகத்திற்கான சர்வதேச சேவை விருது பெற்றவர்.**



ADVT.

# கனவுகள் சிறகடிக்கும் நேரம்

ஜெய்ஶ்ரீ



*RC கிரேட்டர் தேஜ்பூர் தலைவர் ஜெயந்த் திப்ரேவாலா (வலதுபுறம் மூன்றாவதாக) மற்றும் ரோட்டராக்டர்கள், வீட்டு மற்றும் அலுவலக உதவியாளர்களுடன் பறக்க தயாராக உள்ளனர்.*

முதல் முறையாக விமானத்தில் பயணிக்கும் வாய்ப்பைப் பெற்ற 40 வீட்டு மற்றும் வணிக உதவியாளர்களுக்கு அது மறக்கமுடியாத நாளாக இருந்தது. அவர்களின் கனவுகளை நனவாக்கிய அந்த பயணத்தை RC கிரேட்டர் தேஜ்பூர், RID 3040 சாத்தியமாக்கியது. தேஜ்பூர் விமான நிலையத்தின் பரபரப்பான சூழலுக்கு உள்ளே அவர்கள் காலடி எடுத்து வைத்த போது, அனைவரின் மனங்களிலும் ஆவலுடன் எதிர்பார்ப்பு நிலவியது. ‘‘அவர்கள் அனைவரும் எங்கள் சங்க உறுப்பினர்களால் அவர்களின் வீடுகள்/அலுவலகங்களில் பணியமர்த்தப்பட்ட உதவியாளர்கள். அவர்கள் அனைவரும் விமான நிலையத்திற்குள் நுழைந்தபோது வியப்படைந்தனர் மற்றும் டார்மாக்கில் விமானத்தை பார்த்த போது அவர்கள் முற்றிலும் வாயடைத்து போனார்கள்’’ என்று சங்கத் தலைவர் ஜெயந்த் திப்ரேவாலா கூறுகிறார்.

இந்த அசாதாரண அனுபவத்திற்கான யோசனை சங்க உறுப்பினர்களிடையே ஒரு சாதாரண உரையாடலில் பிறந்தது. ‘‘ஒரு நாள் மாலை நாங்கள் எங்கள் பயணங்களைப் பற்றி பேசும் போது, சிலர் தங்கள் சொந்த ஊருக்கு வெளியே சென்றதே இல்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம், விமானம் ஒருபுறம் இருக்க, அவர்கள் ரயிலில் கூட ஏறியதில்லை’’ என்று அவர் கூறுகிறார். இது ஸ்வாப்னர் உடான் (கனவு விமானம்) பற்றிய சிந்தனையை எங்களுக்குள் தூண்டியது – இந்த நேசத்துக்குரிய நபர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாத ஒரு நினைவைப் பரிசளிப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டம்.

‘‘ஒரு விமானம் மேலே செல்லும்போதெல்லாம், நானும் என் குழந்தைகளும் அதை பார்க்க வெளியே விரைவோம், ஒரு நாள் அதனில் செல்வதைப் பற்றி கனவு கண்டோம். ஜெயந்த் சாப் நம்மை உண்மையில் ஒரு விமானத்தில் கொண்டு செல்லவுள்ளதாகச் கூறியபோது, நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன், அதற்கு முந்தைய இரவு என்னால் தூங்க முடியவில்லை’’ என்று பயனாளிகளில் ஒருவரான பார்த் மொஹந்தி கூறுகிறார்.

திப்ரேவாலா, இரண்டு ரோட்டராக்டர்கள் வினீத் போத்ரா மற்றும் ராகுல் ஆகியோருடன், ஏர் இந்தியா அலையன்ஸில் தேஜ்பூரிலிருந்து லக்கிம்பூருக்கு 90 நிமிட விமானத்தில் உற்சாகமான பயணிகளுடன் சென்றார். ‘‘பராமரிப்பிற்காக விமான நிலையம் ஐந்தாண்டுகளாக மூடப்படுவதற்கு முன்பு தேஜ்பூரில் இருந்து சென்ற கடைசி விமானம் இதுவாகும்’’ என்கிறார் திப்ரேவாலா. லக்கிம்பூரில் உள்ள காந்திபூங்காவில் விளையாட்டுக்களில் ஈடுபட்டிருந்த சுற்றுலாப் பயணிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த பேருந்தில் கணபதி மந்திரை பார்வையிட்டனர். பின்னர் அவர்களுக்கு பாரம்பரிய அசாமிய மதிய உணவு வழங்கப் பட்டது, பின்னர் அவர்கள் மீண்டும்

தேஜ்பூருக்கு சாலை வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்த மனதை வெகுவாக மகிழ்ச்சியடையச் செய்த அனுபவத்தின் வெற்றிக்கு தேஜ்பூர் விமான நிலைய அதிகாரிகளின் ஆதரவும் காரணமாக இருந்தது. “நினைவூட்டிய பிறகும் சில சுற்றுலாப் பயணிகள் தங்களின் அடையாள அட்டைகளை கொண்டு வராதிருந்தாலும், விமான நிலைய மேலாளர் அவர்களுக்கு உதவி செய்து பெருந்தன்மையுடன் அனுமதித்தார்” என்று அவர் கூறி, அனைவரும் கலந்து கொள்ள உதவிய கூட்டுறவை பாராட்டினார்.

RC கிரேட்டர் தேஜ்பூர், சங்கத்தை துடிப்பாகவும் சுவாரஸ்யமாகவும் வைத்திருக்க கணிசமான அளவு வேடிக்கையான கூறுகளை உள்ளடக்கியது. சமீபத்தில், சங்க உறுப்பினர்களின் வாழ்க்கைத் துணைவர்கள் அன்னெட்ஸ் மற்றும் நகரத்தில் உள்ள மற்ற குழந்தைகளுக்காக நான்கு நாள் கேளிக்கை முகாமை ஏற்பாடு செய்தனர். முகாமில் யோகா, கதைசொல்லல், ஹூலா-ஹூப்பிங், தீயில்லா சமையல் மற்றும் ஆளுமை மேம்பாட்டு அமர்வுகள் போன்ற செழுமைப்படுத்தும் நடவடிக்கைகள் இருந்தன.

கடைசி நாளில், இளம் பங்கேற்பாளர்களுக்கு ஒரு சிறப்பு அனுபவம் காத்திருந்தது - உள்ளூர் டொமினோஸ் பீட்சா நிலையத்தில் நேரடி பயிற்சிப் பயணம். அவர்கள் தாமே பீட்சா தயாரித்து, அதை ருசித்து சாப்பிட்டு மகிழ்ந்தனர். மேலும், ஸ்நாக்ஸ் மற்றும் பசுமையான ஜூஸ்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டது. “மாணவர்கள் இவ்வளவு மகிழ்ச்சியாக இருந்ததை காண்பது முகாமின் மிகச் சிறந்த முடிவாக இருந்தது” என்று சங்கத் தலைவர் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

நகரவாசிகளுக்கு பாதுகாப்பான குடிநீரை உறுதி செய்வதற்காக சங்கம் தண்ணீர் சாவடிகளையும் நிறுவி வருகிறது. 45,000 ரூபாய் செலவில் செய்யப்பட மிக சமீபத்திய நிறுவல் தற்போது தினமும் சுமார் 200 பேர் வாழ்வை காப்பாற்ற உதவுகிறது.■




# சிறப்புப் பள்ளிகளில் திறன் மேம்பாட்டு மையங்கள்

ரோட்டரி செய்திக்குழு

கன்டிவ்லி, பயன்டெர், வாசி-யில் உமங் தொண்டு அறக்கட்டளை நடத்தும் சிறப்புக் குழந்தைகளுக்கான மூன்று பள்ளிகளில் தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டு மையங்களை நிறுவியுள்ளது பாம்பே குவீன் சிட்டி ரோட்டரி சங்கம், RID 3141. இந்தப் பள்ளிகள் 132 மாணவர்களுக்குப் பயன்படுகின்றன. இந்தச் சங்கம் கணினியை இயக்குதல், அடுதல் (பேக்கிங்), கலை, கைவினைப் பயிற்சிகளைத் தொடங்கியுள்ளது, இந்தக் குழந்தைகள் இன்னும் மேம்பட்ட பயிற்சி வாய்ப்புகளைப் பெறுவதற்கென ரோட்டரி-பாஷ்ச் திறன் மேம்பாட்டு மையங்களுடனும் இந்தப் பள்ளிகளை இணைத்துள்ளது. ரூ.12 லட்சம் மதிப்புள்ள இந்தத் திட்டத்தை DG சேத்தன் தேசாய் தொடங்கிவைத்தார்.■




*DG சேத்தன் தேசாய் (இடதுபுறம் நான்காவது) ஒரு திறன் மேம்பாட்டு மையம் தொடக்க விழாவில்.*

Rotary PEOPLE OF ACTION

# சிறப்புக் குழந்தைகளின் நலனில் கவனம் செலுத்தும் RC நாக்பூர் நார்த்

ரஷீதா பகத்



*RIPE மரியோ டி கமார்கோ, RI இயக்குனர் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் DG ராஜீந்தர் சிங் குரானா நாக்பூரில் சிறப்புக் குழந்தைகளுக்கான தொழிற்கல்வி மையத்தில். RC நாக்பூர் நாரத் தலைவர் மனிஷா மங்கானி இடதுபுறத்தில் காணப்படுகிறார்.*




உள்வரும் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் மரியோ டீ கமார்கோ, சமீபத்தில் இந்தியா வந்திருந்த போது, RID 3030-க்கு உட்பட்ட நாக்பூர் நார்த் ரோட்டரி சங்கம் சிறப்புக் குழந்தைகள் மற்றும் முதியோருக்கான தொழிற் கல்வி பயிற்சி மையத்தை தொடங்கிவைத்தார். ரூ.4 லட்சம் செலவில் இந்த மையம் அமைக்கப்பட்டிருந்தது.

சங்கத்தின் தலைவர் மனிஷா மங்கானி கூறுகையில், நாக்பூரில் சிறப்புக் குழந்தைகள் மற்றும் முதியோருக்கான விடுதியை நடத்தி வரும் சர்வாங்கின் அபாங்க்விகாஸ் பஹுதேசியா கல்யாண்காரி சிக்க்ஷான் சன்ஸ்தான் என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் சங்கம் இணைந்து செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இந்த விடுதி, அந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தை நடத்தும் நபரின் சொந்த இடத்தில் கட்டப்பட்ட புதிய இடத்துக்கு இடம்பெயர்ந்தது. ஆனால், அங்கு சிறுவர் களும், சிறுமிகளும் வசித்துவந்த இடம் நெருக்கடியாகவும் அசௌகரியமானதாகவும் இருந்தது. இதையடுத்து சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கு என தனித்தனியாக இரண்டு தளங்களை கட்டிக்கொடுக்குமாறு எங்களை அவர்கள் கேட்டுக்கொண்டனர். இதையடுத்து கடந்த ஆண்டு அவர்களுக்கு புதிய தளங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்த ஆண்டு தொழில் கல்வி பயிற்சி மையம் கட்டிக் கொடுக்கப்பட்டது என்று மனிஷா கூறினார்.

இன்ஃப்ரா ஸ்பேஸில் செயல்படும் SSFM கார்ப்பொரேட் நிறுவனத்தின் CSR நிதி ரூ.3 லட்சம் சங்கத்திற்கு கிடைத்தது. மேலும் அந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் தீபேஷ் பார்தியா சங்கத்தின் புதிய உறுப்பினராகச் சேர்ந்துள்ளார். மீதமுள்ள ரூ.1 லட்சம் மற்றும் குளிர்சாதனப் பெட்டி, சமையலறை சாமான்கள், இதர உபகரணங்களுக்குத் தேவையான நிதியை சங்க உறுப்பினர்கள் திரட்டினர். “விடுதியில் தங்குபவர்கள் 15 முதல் 40 வயதிற்குட்பட்டவர்கள் என்பதால் சாப்பிடும் அறை தேவை என்றனர். அதையும் செய்தோம்’’ என்றார் அவர்.

இந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தை 2002-ம் ஆண்டு முதல் குலாம் துல்லார்வர் என்பவர் நடத்தி வருகிறார். சிறப்பு குழந்தைகள், வயதானவர்கள் என மொத்தம் 100 பேர் உள்ளனர். ஜீவன்தாரா என்னும் திட்டத்தின்கீழ் இது செயல்படுத்தப்படுகிறது. 70 பேர் இந்த விடுதியிலேயே தங்கியிருக் கிறார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 30 பேர் வெளியிலிருந்து வருபவர்கள்.




போதைப்பொருள் எதிர்ப்பு பிரச்சாரத்திற்காக
சங்க தலைவர் மனிஷாவுடன் விநாயகர்
பூஜை திருவிழாவில் ரோட்டராக்டர்கள்.




*சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் பூஜா மற்றும் ஜகதீஷ் கத்ரி ஆகியோர் ஜெய்ப்பூர் கால் திட்டத்தில் பெருமூளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன்.*

இந்த தொண்டு நிறுவனம் நீண்ட காலமாக ரோட்டரி சங்கத்துடன் தொடர்பில் உள்ளது. அவர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டாலோ அல்லது கூடுதல் வசதிகள் செய்து தர வேண்டும் என்றாலோ அல்லது ஏதாவது உபகரணங்கள் தேவை என்றாலோ நாக்பூர் நார்த் ரோட்டரி சங்கத்தை அணுகுவார்கள். சங்க உறுப்பினர்கள் அவர்களுக்குத் தேவையானதைச் செய்வார்கள்.

### ஜெய்ப்பூர் கால்கள்

ஜெய்ப்பூர் கால்கள் வழங்கும் திட்டத்திலும் சங்கம் அதிக ஈடுபாடு கொண்டுள்ளது. கடந்த சில வருடங்களாகவே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது இது பெரிய திட்டமாக மாவட்ட அளவில் பெரிதாக விரிவடைந்துள்ளது. தொடக்கத்தில் சங்கம் ஆண்டுக்கு 100 முதல் 110 ஜெய்ப்பூர் கால்களை விநியோகித்து வந்தது. ஆனால், இந்த ஆண்டு மாவட்டம் முழுவதும் 1,000 ஜெய்ப்பூர் கால்களை வழங்க இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகிறோம். ஜெய்ப்பூர் கால்கள் திட்டத்தை செயல்படுத்தி வரும், ஜெய்ப்பூரில் உள்ள பகவான் மகாவீர் விக்லாங் சஹாயதா சமிதியுடன் இணைந்து நாங்கள் செயல்படுவதால் இது சாத்தியமே என்றார்.

### போதைப் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு

போதைப் பொருள்களால் ஏற்படும் தீமைகள், போதைப் பொருள்களுக்கு அடிமையாவதால் ஏற்படும் ஆபத்துகள், குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு பெரிய திட்டத்தைச் செயல்படுத்து வதிலும் சங்கம் ஈடுபட்டுள்ளது. “பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடம் போதைப் பழக்கம் அதிகரித்து வருவதால், அவற்றுக்கு எதிராக தீவிர பிரசாரம் மேற்கொள்ளவும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மாநகர போலீஸ் கமிஷனர் எங்கள் உதவியை நாடியிருந்தார். எனவே கணேஷ் சதுர்த்தி விழா காலத்தில் நாங்கள் மிகப்பெரிய விழிப்புணர்வு பிரசாரத்தை மேற்கொண்டோம் என்றார் மனிஷா.

விநாயகர் சதுர்த்தியின்போது நாக்பூரில் 1,000-த்துக்கும் மேற்பட்ட இடங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபட்டு வந்தனர். இந்த விழாவில் பங்கேற்க மாவட்ட ரோட்டரி சங்கத்தினர் மற்றும் ரோட்ராக் டர்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ரோட்டேரியன்கள் விநாயகர் வழிபாட்டு இடங்களில் சுவரொட்டி, விடியோக்கள் மற்றும் பிரசாரங்கள் மூலம் போதைப் பழக்கத்தால் ஏற்படும் ஆபத்துகளை மக்களுக்கு விளக்கினர். மேலும் போதைக்கு எதிரான விழிப்புணர் பிரசாரத்தையும் மேற்கொண்டனர். போலீஸ் கமிஷனருடன் நேரலை கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.■



## RID 3030

**RC சோப்டா**

மூன்று பிற அமைப்புகளுடன் இணைந்து நடத்தப்பட்ட வேலை வாய்ப்புத் திருவிழாவில் சுமார் 400 இளைஞர்களுக்குப் பெரிய நிறுவனங்களில் வேலை கிடைத்தது. பேராசிரியர் அருண்பாய் குஜராத்தி, வளர்ச்சியைத் தூண்டுவதில் வேலைவாய்ப்பின் மாற்றத்தைக் கொண்டுவரும் ஆற்றலைப்பற்றி உரையாற்றினார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்







## RID 3060

**RC நவ்சாரி**

சுமார் 60 கர்ப்பிணி, பாலூட்டும் பெண்களுக்கு, ஊட்டமளிக்கும் உணவுப் பொதிகள், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான ஆடைகள் வழங்கப்பட்டன. நல்ல உணவு மற்றும் குழந்தைகளுக்குப் பாலூட்டும் சரியான முறையைப்பற்றியும் மருத்துவர்கள் அவர்களுக்கு அறிவுரைத்தார்கள்.

## RID 3090

**RC ஹிசார்**

ஹிசாரில் உள்ள ஜிந்தால் ஒருங்கிணைந்த மருந்துக் கல்விக் கழகம் மற்றும் பூண்டு மையத்தில், சங்கத் தலைவர் மோகித் குப்தா தலைமையில் நடைபெற்ற மரக் கன்று நடுவிழாவில் 100 மரக் கன்றுகள் நடப்பட்டன. இது சுற்றுச்சூழல் பாதுகாப்புபற்றிய விழிப்புணர்வை உண்டாக்கியது.





## RID 3110

**RC கான்பூர்**

ரோட்டராக்டர்கள், குஷி அறக்கட்டளை, பிற 2 அமைப்புகளுடன் இணைந்து, உம்ராவ் மருத்துவமனையை அடுத்துள்ள உள்ளூர் எரிபொருள் நிலையத்தில் தட்டுக்கு ரூ.10 விலையில் நாள்தோறும் 150க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

## RID 3040

**RC இந்தூர் சென்ட்ரல்**

ஒரு CSR திட்டத்தின்கீழ், தௌலதாபாத் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 50 அங்குல அறிவார்ந்த தொலைக்காட்சி கொடையளிக்கப்பட்டது. இந்தத் தொலைக்காட்சியை, அதன் மென்பொருட்களை இயக்குவதுபற்றித் திட்ட ஒருங்கிணைப் பாளர் கம்லேஷ் வியாஸ் பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தார்.



## RID 3120

**RC பல்ராம்பூர் கிரேட்டர்**

கிராமப்புறப் பெண்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுத்தருவதற்காக வயதுவந்தோர் எழுத்தறிவுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தொலைநோக்கில், திறன் மேம்பாட்டின் வழியாக இது இவர்களுக்கு வளங்குன்றா வாழ்வாதாரத்தை உருவாக்கும்.



## RID 3131

**RC சின்ச்வாட் புணே**

ஜல்டின்டி பிரதிஷ்தான், அபிவ்யாப்தி அறக்கட்டளை, அறிவியல் பூங்கா, நகராட்சியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மாநில அளவிலான மூன்று நாள் கட்டுரை எழுதுதல் மற்றும் படைப்பூக்கச் சிந்தனைப் போட்டியில், 63 பள்ளிகளைச் சேர்ந்த, 8-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை பயில்கிற 16,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றார்கள். வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

Rotary PEOPLE OF ACTION

# இளைஞர்களை ஊக்கப்படுத்தும் மதுரை ரோட்டேரியன்ஸ்

ஜெய்ஸ்ரீ

2002-ம் ஆண்டு முதல் தொடர்ந்து 22 ஆண்டுகளாக மதுரை, திருமால்புரம் ரோட்டரி சமூகப் பாதுகாப்பு படையினர் (RCC), மாநில அரசு நடத்திவரும் பொது சர்வீஸ் கமிஷன் தேர்வில் கிராமப்புற மாணவர்கள் வெற்றிபெற சிறப்புப் பயிற்சி அளித்து வருகின்றனர். இங்கு பயிற்சி பெற்றவர்களில் இதுவரை 400 இளைஞர்கள் அரசு வேலையில் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர். ஊட்டி மற்றும் திருப்பூர் என பல இடங்களிலிருந்து மாணவர்கள் இந்த பயிற்சி வகுப்பில் பங்கேற் கின்றனர் என்கிறார் RCC தலைவர் ஆறுமுகம். தொடக்கத்தில் மதுரை மெட்ரோ ரோட்டரி சங்கத்தின் (RID 3000) ஆதரவில் செயல்பட்டு வந்த RCC இப்போது மதுரை மெட்ரோ ஹெரிடேஜ் ரோட்டரி சங்கத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. இதில் 85 தன்னார்வலர்கள் உள்ளனர்.

ஆரம்ப நாட்களில், ரோட்டரி சங்கம் ஒதுக்கிய கட்டடத்தில் RCC மதுரையைச் சுற்றியுள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகளை நடத்தி வந்தது. இந்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள் முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நகர்ப்புற பள்ளிகளில் பாடம் நடத்தி வந்த ஆசிரியர்கள் வழிகாட்டியாக இருந்தனர். “ஒரு மாணவர் கூட பள்ளியை விட்டு வெளியேறவில்லை. அவர்களுக்கு ஆர்வமுடன் கல்வி கற்பித்து வந்த ஆசிரியர்களுக்கு நன்றி” என்று ஆறுமுகம் நினைவு கூர்ந்தார்.

எனினும் கோவிட் தொற்று காலத்தில் எதிர்பாராத சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. சாலையை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் பயிற்சி மைய கட்டடம் மதுரை மாநகராட்சியால் இடிக்கப்பட்டது. ஆனால், ரோட்டரி சங்கம், RCC இயக்கம் நடத்தி வரும் பயிற்சி மையம் தடையில்லாமல் செயல்பட ரூ.40 லட்சம் செலவில் இரண்டடுக்கு கட்டடத்தை புதிதாக கட்டியது. “இளைஞர்கள் கல்வி அறிவு பெற்று திறன்மிக்கவர்களாக உருவாக வேண்டும் என்பதில் RCC தன்னார்வலர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வந்தனர்” என்கிறார் மதுரை




*மதுரை யானைமலை அடிவாரத்தில் மாணவர்கள்.*



RCC *திருமால்புரம் கல்வி மையம்.*

மெட்ரோ ஹெரிடேஜ் ரோட்டரி சங்கத்தின் தலைவர் அருண்குமார் அமர்நாத். வங்கித் தேர்வு, ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி, பரதநாட்டியம், கராத்தே வகுப்பு என இந்த பயிற்சி மையத்தை RCC விரிவுபடுத்தியுள்ளது. ஒவ்வொரு வகுப்பிலும் சராசரியாக 25 மாணவர்கள் பெயரைப் பதிவு செய்து பயிற்சி பெற்று வருகின்றனர். அவ்வப்போது மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.

RCCக்கு மதுரை மெட்ரோ ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம் டிஜிட்டல் கருவிகளை வழங்கி ஆதரித்து வருகிறது. இந்த மையத்தில் ஆன்லைன் வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆர்வமுள்ளவர்கள் இதில் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர். கிராமப்புற பெண்களுக்காக தையற் கலை மற்றும் அழகுக் கலை பயிற்சி வகுப்புகளும் தொடங்கப்பட்டுள்ளன. RC மதுரை மெட்ரோ ஹெரிடேஜ் பயிற்சியாளர்களுக்கான ஊதியத்தை வழங்குகிறது. மேலும் “மெட்ரோ ஊட்டச்சத்து” திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஸ்பான்சர்கள் ஆதரவில், தன்னார்வலர்கள் வீட்டில் உணவு சமைக்கப்பட்டு மதிய உணவு வழங்கப்படுகிறது என்கிறார் அமர்நாத்.

சமீபத்தில், மதுரை மெட்ரோ ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம், அதன் ஐந்து இன்டராக்ட் சங்க உறுப்பினர்களுக்காக ஒருநாள் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது. “நாங்கள் அவர்களை நகரில் உள்ள புராதன இடங்களுக்கு அழைத்துச் சென்று சுற்றுலா வழிகாட்டி மூலம் அதன் முக்கியத்துவத்தை விளக்கினோம். புகழ்பெற்ற மீனாட்சி திருக்கோயிலைத் தவிர, மதுரையில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் உள்ளன. ஆனால், உள்ளூர் மக்களுக்கே அவை பற்றிய போதிய அறிவு இல்லை என்பது வேதனையானது என்கிறார் அமர்நாத். சுவாரஸ்யமான தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளைக் கொண்ட கீழடி அருங்காட்சியகம், யானைமலை, மற்றும் சமணர் குகை (இரண்டும் ஜெயின் மற்றும் ஹிந்துக்களின் நினைவுச் சின்னங்கள்.) ஆகிய இடங்களுக்கு 400 இன்டராக்டர்களை அழைத்துச் சென்றோம்.



இன்டராக்டர்களை உள்ளடக்கிய போக்குவரத்து விழிப்புணர்வு பிரசாரம் நடத்த சங்கம் திட்டமிட்டுள்ளது. மாணவர்கள் தங்கள் பள்ளிக்கு அருகில் உள்ள போக்குவரத்து சிக்னல்களில் சாலை போக்குவரத்து விதிகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை பதாகைகள் மற்றும் கோஷங்கள் மூலம் பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகளிடம் பிரசாரம் செய்வார்கள். தங்கள் சமூகத்தின் காவலர்களாக இளைஞர்கள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதே இதன் நோக்கம் என்கிறார் அமர்நாத். அவரது கருத்தில் உண்மை இருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது. ■



*சென்னை மாநாட்டில் DG மகாவீர் போத்ரா மற்றும் அவரது மனைவி ஜெயஸ்ரீ மற்றும் DGE D தேவேந்திரன், PDG-க்கள் ISAK நாசர், S முத்துபழனியப்பன், G சந்திரமோகன் மற்றும் முன்னாள் தலைவர்கள். ஆகியோருடன்.*

# வளர்ச்சிப் பணிகளில் முன்னாள் தலைவர்களை ஈடுபடுத்தும் RID 3233

ரோட்டரி செய்திக்குழு

ரோட்டரியின் தொடர் வளர்ச்சியில் முன்னாள் தலைமைக்கு முக்கியப் பங்களிக்கும் வகையில் புதுமை முயற்சியாக ரோட்டரி மாவட்டம் 3233, சமீபத்தில், “கலங்கரை விளக்கு” என்னும் மாநாட்டை சென்னையில் நடத்தியது. சுமார் 450-க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வு பெரும் வரவேற்பை பெற்றது. மாவட்ட சங்கங்களின் முன்னாள் தலைவர்களின் அனுபவங்களை மற்றவர்கள் தெரிந்து கொள்வது மற்றும் சங்கத்தின் மேம்பாட்டு பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவது ஆகியவையே இதன் முக்கிய நோக்கமாகும்.

RI முன்னாள் இயக்குநர் A S வெங்கடேஷ், தனது சிறப் புரையில் புத்திசாலித்தனமாகவும் நகைச்சுவையாகவும் பேசி பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தார். அதுமட்டுமல்ல, ரோட்டரி மாவட்டத்தைச் சேர்ந்த, பயிற்சியும், திறமையும், முதிர்ந்த அனுபவமும், விவேகமும் நிறைந்த முன்னாள் தலைவர்கள் ரோட்டரியின் வளர்ச்சிக்கு எப்படி முக்கியப் பங்காற்றமுடியும் என்றும் குறிப்பிட்டார். அவர்கள் முழு மனதுடன் ஈடுபடுவதன் மூலம் தாங்கள் சார்ந்திருந்த சங்கம் மட்டு மல்லாமல் மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் பங்களிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் உரையாற்றிய RID 3233-ன் மாவட்ட ஆலோசகர் PDG ISAK நாசர் கூறுகையில், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டத்தின் வளர்ச்சிப் பாதையில், கடந்த கால தலைவர்களை

ஈடுபடுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மாவட்ட ஆளுநர் மஹாவீர் போத்ரா, இந்தியாவில் ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிப்பதில் கடந்த காலத் தலைவர்கள் முக்கியப் பங்காற்றியதையும் அவர்களின் வழிகாட்டுதல்களையும் ரோட்டரி சமூகத்தினர் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். உறுப்பினர் எண்ணிக்கையில் மாவட்டம் சர்வதேச அளவில் இரண்டாவது இடத்தைப் பிடித்து சாதனை புரிந்ததை பகிர்ந்துகொண்ட அவர், ஆண்டு இறுதிக்குள் மாவட்ட உறுப்பினர் எண்ணிக்கையை 6,000 என்ற எண்ணிக்கைக்கு உயர்த்துவது என்ற தனது கண்ணோட்டத்தை அவர் குறிப்பிட்டார்.

### கணினி வழியிலான உரையாடல் மற்றும் அங்கீகாரம்

"Down Memory Lane'' என்னும் தலைப்பில் DGE D தேவேந்திரன் மற்றும் DGN ஸ்ரீராம் துவ்வுரி இருவரும் ஆன்லைன் மூலம் அளித்த விளக்கக் காட்சிகள் மாநாட்டின் சிறப்பு அம்சமாகும். ரோட்டரியின் நன்மதிப்பு மற்றும் நெறிமுறைகள் பற்றி பார்வையாளர்களுடன் நடைபெற்ற வினாடி-வினா, மற்றும் கலந்துரையாடல்கள் மொபைல் தொழில்நுட்பம் மூலம் ரோட்டரி கூட்டங்களை எப்படி மேம்படுத்தலாம் என்பதை விளக்கியது.

இந்த நிகழ்வில் 30 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றிய, கடந்தகாலத் தலைவர்களுக்கு சிறப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டது. சங்கங்கள் மற்றும் மாவட்ட சங்கங்கள் முன்னாள் தலைவர்களிடம் எதிர்பார்ப்பது என்ன என்பது குறித்து PDG-க்கள் A P கன்னா, R ஸ்ரீனிவாசன், Dr நந்தகுமார் மற்றும் J வேணுகோபால் உள்ளிட்டோர் கலந்துகொண்ட உரையாடல், விவாத நிகழ்ச்சி சுவராஸ்யமாக இருந்தது.

மாவட்ட கற்றல் வசதி ஒருங்கிணைப்பாளர் PDG S முத்துபழனியப்பன், உலகளாவிய மானியங்கள், கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப் புணர்வு நிதி திட்டங்கள் (CSR) பற்றிய மதிப்புமிக்க நுண்ணறிவை வழங்கினார். சமூகசேவை முன்முயற்சிகளை மேம்படுத்த கடந்தகாலத் தலைவர்கள் இந்த வாய்ப்புகளை எப்படி பயன் படுத்தலாம் என்றும் தெரிவித்தார்.

### புதிய தரநிலைகளை அமைத்தல்

கலங்கரை விளக்கின் வெற்றி, இந்நிகழ்வில் பெருமளவில் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள் என்பதைத் தவிர, கடந்தகால தலைமையை எப்படி ஈடுபாட்டுடன் பயன்படுத்தி, எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருந்ததாக DG போத்ரா குறிப்பிட்டார். 2010 முதல் இன்றுவரையிலான ரோட்டரியின் குறிக்கோள், லட்சியம், சின்னம் இவற்றை எடுத்துக்காட்டும் வகையில் சிறப்பான புகைப்பட கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பார்வையாளர்களை இது வெகுவாக கவர்ந்தது. மேலும் முன்னாள் தலைவர்களின் ஆண்டுக்காலத்தை நினைவுபடுத்தும் வகையிலும் அவர்கள் மீண்டும் இணைவதற்கான உருவாக்கும் விதத்திலும் அமைந்திருந்தது. தற்போதைய தலைவர்கள் சிறப்பு பார்வையாளர்களாக மேடையில் அமர்ந்திருந்தது மாநாட்டு கூட்டத்துக்கு புதிய பரிமாணத்தை ஏற்படுத்துவதுபோல் இருந்தது.

கடந்தகால பங்களிப்புகளை அங்கீகரிப்பதுடன், எதிர்காலத்தில் தொடர் வளர்ச்சி மற்றும் சேவைக்கான வாய்ப்புகளை உருவாக்கும் விதத்திலும் இருந்தது நிகழ்ச்சிக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்த தேசிகா சோழன் தலைமையிலான குழுவினர் மற்றும் செயலர் லெட்சுமணன், கூடுதல் தலைவர் Dr S வெற்றிவேல் மற்றும் ஆரியோ பாபு குழுவினருக்கு DG போத்ரா நன்றி தெரிவித்தார்.■

**இடமிருந்து:** PRID A S *வெங்கடேஷ்,* DG *போத்ரா,* PDG-*க்கள் நாசர், முத்துபழனியப்பன் மற்றும்* DGE *தேவேந்திரன்.*



# ஊரக கர்நாடக பகுதி மக்களுக்கு கண்ணொளி மற்றும் குடிநீர்

ஜெய்ஸ்ரீ

இந்த ஆண்டு ஜூலை மாதம், பெங்களூர் சௌத் பரேட் ரோட்டரி சங்கம் (RID 3191), கண் கண்ணாடி தயாரிப்பு நிறுவனமான கார்ல் ஜெய்ஸ் நிறுவனத்துடன் இணைந்து கண்புரைநோய் சிகிச்சைபெற்ற 15,000 பேருக்கு கண் கண்ணாடிகளையும், 1,440 பேருக்கு IOL (கண்ணுக்குள் லென்ஸ் பொருத்தும் முறை) கண்ணாடிகளையும் வழங்கும் திட்டத்தை (கண்பார்வை வழங்கும்) செயல்படுத்தியது. இத்திட்டம் இனி ஒவ்வொரு ஆண்டும், பெங்களூருவிலிருந்து 60 கி.மீ. தொலைவில், சிக்கபல்லாபூரில் உள்ள முத்தெனஹள்ளியில், ஸ்ரீ சத்ய சாய் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சத்யா சாய் சரளா நினைவு மருத்துவமனையில் செயல்படுத்தப்படும்.

இந்த மருத்துவமனையில் பணம் செலுத்தும் கவுன்டர் கிடையாது. இங்கு அனைவருக்கும் இலவசமாக மருத்துவச் சேவை வழங்கப்படுகிறது என்கிறார் சங்கத்தின் தலைவர் ரவி சக்கரவர்த்தி.

கண் பரிசோதனை முகாம்களில் சிகிச்சை தேவைப்படுவோரின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவ மனை சங்கத்துடன் தொடர்பு கொள்ளும். அதைத் தொடர்ந்து கார்ல் ஜெய்ஸ் நிறுவனம் கண்கண்ணாடி களையும், IOL-களையும் குறித்த நேரத்தில் வழங்கப்படுவதை உறுதிசெய்யும். இது தவிர ரோட்டரி நடத்தும் கண் பரிசோதனை முகாம்களில் பங்கேற்பவர்களில் ரோட்டரி பரிந்துரைக்கும் நபர்களுக்கும் மருத்துவமனை சிகிச்சை அளிக்கும்.

## தேவனஹள்ளி மக்களுக்கு குடிநீர்

பெங்களூரு விமானநிலையம் அருகில் அமைந்துள்ள கிராமப்புற நகரமான தேவனஹள்ளியில் மக்க ளுக்கு தரமான குடிநீர் வழங்கும் திட்டத்தையும் ரோட்டரி சங்கம் செயல்படுத்தி வருகிறது. கார்ல் ஜெய்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் ரோட்டேரியன்கள் சமீபத்தில் “ஆனந்த சிந்து” திட்டத்தின் கீழ் நகராட்சி அலுவலகத்தில் ரூ.65 லட்சம் செலவில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தையும் நிறுவியுள்ளனர். நகரில் வசிக்கும் சுமார் 38,000 மக்களுக்கு நாளொன்றுக்கு தேவைப்படும் 12 லட்சம் லிட்டர் சுத்தமான நல்ல குடிநீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டது இந்த திட்டமாகும் என்கிறார் சக்கரவர்த்தி.



**இடமிருந்து:** PDG *ஜீதேந்திர அனேஜா, கார்ல் ஜெய்ஸ் இந்தியா* MD *மிகுவல் கோன்சலஸ் டயஸ் மற்றும் ஆன்மீகத் தலைவர் மதுசூதன் சாய், தனது புதிய மூக்குக் கண்ணாடியால் உற்சாகமாக இருக்கும் ஒரு குழந்தையுடன்.*

தேவனஹள்ளி, ஆழ்துளைக் கிணறுகளையே நம்பியுள்ளது. ஆனால், இங்கு கிடைக்கும் தண்ணீர் உப்புத்தன்மையுடன் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. இதனால் உள்ளூர் மக்கள், தண்ணீர் தேவைகளுக்கு நகராட்சி அமைத்துள்ள தண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்களையே நம்பியிருக்க வேண்டியுள்ள சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர். கடந்த ஆண்டு அப்போதிருந்த தலைவர் ஆனந்த் ராமச்சந்திராவின் தலைமையின் கீழ் சங்கம் புதுமையான தீர்வை செயல்படுத்தியது. அவர்கள் சிரிநீரு கெரே ஏரிக்கு அருகில் ஒருங்கிணைந்த தண்ணீர் சுத்திகரிப்பு அமைப்பை உருவாக்கினர். இரண்டு ஆழமற்ற கிணறுகள் தோண்டப் பட்டு அதன் மூலம் தினமும் ஒரு லட்சம் லிட்டர் தண்ணீர் கிடைக்க வழிசெய்தது. இந்திய அறிவியல் கழகத்தைச் (IISC) சேர்ந்த விஞ்ஞானிகளின் யோசனையுடன் தண்ணீரில் கலந்திருக்கும் திடப் பொருள்கள், பாக்டீரியா மற்றும் துர்நாற்றத்தை அகற்ற சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இதன் மூலம் 10,000 குடியிருப்புகளுக்கு தினமும் இரண்டு லட்சம் லிட்டர் குடிநீர் கிடைக்க வழியேற்பட்டது.

புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் நகருக்கு கூடுதலாக 6.4 லட்சம் லிட்டர் கிடைக்கிறது. இந்த இரண்டின் மூலமும் இப்போது தேவனஹள்ளி மக்களின் பாதிக்கும் மேலான குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய முடிகிறது என்கிறார் சக்கரவர்த்தி. மத்திய அரசு இந்த திட்டத்தை கவனத்தில் கொண்டுள்ளது. மேலும் பெங்களூரு உள்ளிட்ட 10 நகரங்களில் 25 ஏரிகளை அடையாளம் கண்டு அவற்றின் மூலம் இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.■




**இடமிருந்து:** *மாவட்டச் செயலாளர் ராகவேந்திரா இனாம்தார், DG சதீஷ் மாதவன், கார்ல் ஜெய்ஸ் இந்தியா செயல்பாட்டுத் தலைவர் ஹரி பிரசாத் படகி, RC பெங்களூர் சௌத் பரேட் தலைவர் ரவி சக்கரவர்த்தி, தேவனஹள்ளி நகரில் ஆனந்த சிந்து திட்ட தொடக்க விழாவில்.*

---

## சிறப்புக் குழந்தைகளுக்குப் பல் பராமரிப்பு

RC தில்லி சஃப்தர்ஜங், RID 3011 மற்றும் ஸ்மைல் இந்தியா என்ற NGO இணைந்து, தில்லியிலுள்ள விஷன் சிறப்புப் பள்ளியில், சிறப்புத் தேவைகளைக் கொண்ட 100 குழந்தைகளுக்குப் பல் பரிசோதனை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார்கள். பல் தூய்மை பற்றிக் கற்றுத்தரப்பட்டது, குழந்தைகளுக்குச் சொத்தைப் பல் ஆபத்து வராமல் தடுப்பதற்கென அவர்களுடைய பற்களில் ஃப்ளூரைடும் சேர்க்கப்பட்டது. ஃப்ளூரைடானது பல்லின் எனாமலை உறுதியாக்க உதவுகிறது, வாயிலுள்ள பிளேக் பாக்டீரியா, சர்க்கரையால் உண்டாகும் அமிலத் தாக்குதல்களை நன்கு எதிர்ப்பதற்குப் பல்லுக்கு உதவுகிறது என்கிறார் சங்கத் தலைவர், பல் மருத்துவர் ப்ரியா ஓபராய்.




*சங்கத் தலைவர் Dr ப்ரியா ஓபராய் (இடதுபுறம் அமர்ந்திருப்பவர்) பல் மருத்துவ முகாமில் குழந்தைகளுடன்.*

இந்தக் குடும்பங்களின் நிதித் தட்டுப்பாட்டை உணர்ந்த இந்தச் சங்கம், இந்த NGO உடன் இணைந்து, பல் குறைபாடு கண்டறியப்பட்டுள்ள குழந்தைகளுடைய சிகிச்சையை ஆதரிக்கிறது.■

# ரோட்டரி ஆளுநர்



**சுரேஷ் சாபூ**
கதிரியக்க நிபுணர், RC ஜல்னா ரெயின்போ, RID 3132



**ஷரத் பாய்**
வால்வு உற்பத்தியாளர், RC பெல்காம், RID 3170

## ஜல்னா மாணவர்களை தயார்படுத்துதல்

ரோட்டேரியர் டாக்டர் விஜய் ஆராதியே வழிகாட்டுதலின் பேரில் 1985-ம் ஆண்டு ரோட்டரியில் சேர்ந்த பிறகு, “அதன் போலியோவை ஒழிப்பதற்கான உலகளாவிய முயற்சிகள் மற்றும் ஏழை மக்களுக்கான பல்வேறு பணிகளால் நான் ஈர்க்கப்பட்டேன்'' என்கிறார் டாக்டர் சுரேஷ் சாபூ.

97 சங்கங்களில் 3,800 உறுப்பினர்கள் இருக்க, “ஜூன் இறுதிக்குள் 600-க்கும் மேற்பட்ட நிகர உறுப்பினர் வளர்ச்சியை எட்டுவதே எனது இலக்கு. நான் குறைந்தது 12 புதிய சங்கங்களை பட்டயப்படுத்த விரும்புகிறேன்.'' தற்போது 14.6 சதவீதமாக உள்ள பெண் உறுப்பினர்களை 20 சதவீதமாக அதிகரிக்க அவர் விரும்புகிறார்.

பதோ ஜல்னா திட்டம் (GG: 47,000) அரசுப் பள்ளிகளில் 5 முதல் 10-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு “அடிப்படை எழுத்தறிவு' கற்பிக்கும். “எங்கள் திட்டம் கிராமப்புற மாணவர்களிடையே காணப்படும் கல்வி இடைவெளியைக் குறைக்கும்'' என்று அவர் கூறுகிறார். ஒரு தொண்டு அறக்கட்டளை மற்றும் சங்கம் மூலம் நிதியளிக்கப்படும் நீரிழிவு நோய் கண்டறிதல் முகாம்களில் (ரூ.12 லட்சம்) சுமார் ஒரு லட்சம் சோதனைகள் செய்யப்படும்.

இரத்த சோகையைக் கண்டறிதல் மற்றும் சிகிச்சைக்கான 100 சிறப்பு முகாம்கள் மூலம் சுமார் 50,000 சிறுமிகள் ப்ராஜெக்ட் அனீமியா சாலே ஜாவோவின் கீழ் பயனடைவார்கள். ஐந்து ஹாப்பி பள்ளிகள் (ரூ.20 லட்சம்) முன்னேற்றத்தின் வெவ்வேறு நிலைகளில் உள்ளன. அவரது TRF இலக்கு $500,000 ஆகும்.

## மீன் வளர்ப்பில் கவனம் செலுத்துதல்

மனிதகுலத்திற்கு தன்னலமற்ற சேவை என்ற தத்துவம் 1991-ல் ஷரத் பாயை ரோட்டரிக்கு ஈர்த்தது, அதன் பின்னர் அவர் வட கர்நாடக மாவட்டங்களில் பல தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு தலைமை தாங்கியுள்ளார்.

“இந்த ஆண்டு எட்டு புதிய சங்கங்களுடன் 400 உறுப்பினர்களின் நிகர வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளேன். தற்போது, 145 சங்கங்களில் 6,800 ரோட்டேரியர்கள் உள்ளனர்.

டிசம்பரில், இரண்டு GG திட்டங்கள் ($200,000) உவர் நீரில் கூண்டு மீன் வளர்ப்பில் 60 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும். ''நாங்கள் அவர்களுக்கு கூண்டு, தீவனம் மற்றும் விதை மீன்களை வழங்குவோம்'' என்று அவர் கூறுகிறார்.

நீரிழிவு ரெட்டினோபதியை (GG: $400,000) ஸ்கிரீனிங் செய்வதற்கான மொபைல் கிளினிக் பிப்ரவரி 2025இல் தொடங்கப்படும். ''ஜூன் இறுதி வரை 2,000 நோயாளிகளை பரிசோதிக்க நாங்கள் இலக்கு வைத்துள்ளோம்.

ப்ராஜெக்ட் வாட்டர் ப்யூர் (CSR நிதி: $1 மில்லியன்) கழிவுநீரை வெள்ளை நீராக மாற்றும், இது தோட்டக்கலை மற்றும் பிற நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும். ''இதன் மூலம் குறைந்தபட்சம் 1 MLD குடிநீரை சேமிக்க முடியும்.''

ப்ராஜெக்ட் ப்ரிங்கிங் பேக் ஸ்மைல்ஸ் நான்கு நடமாடும் பல் மருத்துவமனைகளை (GG: $400,000) தொடங்கும், அவை கிராமப்புறங்களில் உள்ள 1,000 நோயாளிகளுக்கு பல்வகைகளை வழங்கும். TRF-க்காக $2 மில்லியன் வசூலிக்க அவர் இலக்கு வைத்துள்ளார்.

# களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்



**N S மகாதேவ் பிரசாத்**
முன்னாள் அரசு ஊழியர், RC மால்குடி, RID 3192

## தெற்காசிய அமைதி மாநாடு

புதிதாக பிரிக்கப்பட்ட RID 3192-ல் ரோட்டரி, அடுத்த மூன்று ஆண்டுகளில் ரோட்டேரியர்கள், ரோட்டராக்டர்கள் மற்றும் இன்டராக்டர்களின் எண்ணிக்கையில் மிகப்பெரிய வளர்ச்சிக்கு தயாராக உள்ளது என்கிறார் DG மகாதேவ் பிரசாத். அவர் தற்போது 3,750 இருக்கும் உறுப்பினர்த்துவத்தை 4,500-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களாக மாற்றவும், 30 புதிய சங்கங்களை பட்டயப்படுத்தவும் விரும்புகிறார்.

இரண்டு நாள் தெற்காசிய அமைதி மாநாடு மார்ச் மாதம் நடைபெறும், மேலும் “மூன்று முறை கிராமி விருது பெற்ற ரிக்கி கேஜ் அவர்களின் இசை மாநாட்டின் சிறப்பம்சமாக இருக்கும்.”

ப்ராஜெக்ட் ஆசாரே (தங்குமிடம் கொடுப்பது) பெங்களூரு முழுவதும் உள்ள வயதான நோயாளிகளுக்கு ஆம்புலன்ஸ் சேவையை ஹெல்ப்லைன் எண் மூலம் வழங்கும்.

ரோட்டரி சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் ஆதரவுடன், சித்ரதுர்கா மாவட்டத்தில் உள்ள நாயக்கனஹட்டியில் 1,500 ஏக்கரில் காடு வளர்ப்பு திட்டம் ஆடவி செயல்படுத்தப்படுகிறது. “இந்த ஆண்டு எங்கள் இலக்கு 700 ஏக்கர் ஆகும், DGN ரவிசங்கர் டகோஜு தலைமையில் இந்தப் பணி நடக்கிறது” என்று அவர் கூறுகிறார்.

சுகாதாரத்துறையில், சிக்கபல்லாப்பூரில் உள்ள ஸ்ரீ சத்யசாய் மருத்துவமனையில் இதய வால்வு வங்கி அமைக்கப்படும், அதற்காக அவர்கள் $220,000 GGக்கு விண்ணப்பித்துள்ளனர். DG பிரசாத் TRFக்காக $2 மில்லியன் வசூலிக்க இலக்கு வைத்துள்ளார்.



**S பாஸ்கரன்**
CADD பொறியாளர், RC நாகப்பட்டினம், RID 2981

## மாணவர்களை வடிவமைக்க RYLAகள்

2001 டிசம்பரில் ரோட்டரியில் சேர்ந்ததில் இருந்து சுறுசுறுப்பான ரோட்டரியராக இருக்கும் பாஸ்கரன் 20 RYLAகளை நடத்தியுள்ளார். இப்போது மாவட்டத் தலைவராக, அவர் ஏற்கனவே ஒரு மாவட்ட RYLA நிகழ்ச்சியை நடத்தி முடித்துள்ளார், மேலும் சங்கங்கள் மாணவர்களை தலைமைத்துவத் திறன்களுடன் பயிற்றுவிக்க 100 நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.

அவர் 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, ஐந்து புதிய சங்கங்களைத் தொடங்கி, அவர்களின் எண்ணிக்கையை முறையே 7,050 மற்றும் 145-ஆக உயர்த்துவதில் தன்னம்பிக்கையாக உள்ளார். புதுச்சேரியில் உள்ள ஒரு கிராமத்தில் 1.5 ஏக்கர் குளம் (GG: $120,000) உருவாக்கப்படுகிறது.

பிற திட்டங்களைப் பட்டியலிடுகையில், PDG S பாலாஜியால் தொடங்கப்பட்ட புற்றுநோயைக் கண்டறியும் பேருந்து (GG: ரூ.3 கோடி) ஜனவரியில் கொடியசைத்துத் தொடங்கப்படும் என்று கூறுகிறார்; ஜூன் மாத இறுதிக்குள் ரூ.1.5 கோடி மதிப்பில் GG மூலம் மின்சார தகனக்கூடம் கட்டப்படும்.

TRFக்கு வழங்குவதற்கான அவரது இலக்கு $500,000 ஆகும். ஒரு மாபெரும் முயற்சியில், பாஸ்கரன் அரசு நிறுவனங்களின் ஆதரவுடன் பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே சைபர் கிரைம் மற்றும் போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரங்களை துவக்கியுள்ளார். ஒரு லட்சம் மாணவர்களை அடைவதே அவரது இலக்கு. நான்கு வேலை வாய்ப்பு கண்காட்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன, ஒவ்வொன்றும் 1,000 இளைஞர்களை ஈர்க்கும்.

# மருத்துவ முகாம்கள் முதல் கைவினைப் பொருள்கள் வரை

கிரண் ஜெஹரா

நாசிக்கிலிருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ள பழங்குடியினர் குக்கிராமமான ஜாரியில், 50 வயதான குமுத் என்ற பெண், ஒரு காலத்தில் எளிதில் செய்ய முடியாத காரியமாக இருந்த ஊசியில் நூல் கோர்க்கிறார். “என் கணவரிடம் இரண்டு சட்டைகள் மட்டுமே உள்ளன. சட்டை பொத்தான்கள் அவ்வப்போது அறுந்துவிடும். அதை தைப்பதற்கு ஊசியில் நூல் கோர்க்க பலமுறை முயன்றும் என்னால் முடியவில்லை. எனவே இதற்காக எனது மகள் அல்லது பக்கத்துவீட்டுக்காரரின் உதவியை நாடவேண்டியிருந்தது” என்கிறார் குமுத். கிராமத்தில் நடந்த மருத்துவ முகாமில் கண் பரிசோதனை செய்து, கண் கண்ணாடியை போட்டுக் கொண்ட பிறகு இப்போது அவரால் எளிதாக ஊசியில் நூல் கோர்க்க முடிகிறது.

RID 3131-க்கு உட்பட்ட நாசிக் ரோட்டரி சங்கம், சனய் அறக் கட்டளை அமைப்புடன் இணைந்து புனேயில் இந்த மருத்துவ முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தது. ஜாரி மக்களின் மருத்துவ சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் முகாம் நடத்தப்பட்டது. பல் மருத்துவம், கண் மருத்துவம், மகப்பேறு மருத்துவம் மற்றும் பொது மருத்துவம் என பல்வேறு பிரிவு களைச் சேர்ந்த சிறப்பு மருந்துவர்கள் கிராம மக்கள் 250 பேருக்கு இலவச மருத்துவ ஆலோசனை வழங்கினர். பார்வைக் குறைபாடு இருந்த குமுத் மற்றும் 50 பேருக்கு கண் பரிசோதனை நடத்தப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்பட்டன. கண்புரை நோய் கண்டறியப்பட்ட 40 பேருக்கு அறுவைச் சிகிச்சைக்கு ஆகும் செலவை ரோட்டரி சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

“முகாமில் மேஜை, நாற்காலிகள் போடுவது, திரைபோட்டு சிகிச்சை அறை ஏற்படுத்துவது எளிதாகவே இருந்தது. ஆனால், எங்களது முக்கிய நோக்கம் மக்கள் சமூகத்திற்குத் தேவையான மருத்துவ வசதியை ஏற்படுத்தித் தருவதுதான்” என்கிறார் சங்கத்தின் உறுப்பினர்களில்



*RC நாசிக் ஏற்பாடு செய்திருந்த மருத்துவ முகாமில் ஒரு பழங்குடியின பெண் மருத்துவ ஆலோசனை பெறுகிறார்.*



*சங்கம் ஏற்பாடு செய்த கண்காட்சி.*

ஒருவரான விநாயக் தேவ்தர். சங்கத்தின் தலைவர் ஓம் பிரகாஷ் ரவாத் வழிகாட்டுதலில், உறுப்பினர் மகரண்ட் சிந்தாடே முகாமை ஒருங்கிணைத்தார். கிராமத் தலைவர் கேட்டுக் கொண்டதை அடுத்து இந்த முகாம் நடத்தப்பட்டது. “மருத்துவ ஆரம்ப சுகாதார நிலையம் கிராமத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் இருந்ததால் கிராம மக்கள் மருத்துவ வசதி பெறுவது போராட்டமாகவே இருந்தது. குறிப்பாக பெண்களுக்கு மாதவிடாய் சுகாதார விழிப்புணர்வு தேவையாக இருந்தது” என்று விளக்கினார் ரவாத்.

ஜாரி குக்கிராம மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சங்கத்தின் தொடர் முயற்சியின் ஒரு பகுதிதான் இந்த மருத்துவ முகாம். கடந்த காலங்களில் ரோட்டேரியன்கள் புகையில்லா அடுப்புகள், சூரியசக்தி தெருவிளக்கு, குடிநீர் சேமிப்பு, கழிப்பறைகள் என பல மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளனர். 2019-ம் ஆண்டிலிருந்து சங்கம், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் உழவர் சந்தையை நடத்தி வருகிறது. கடந்த அக்டோபர் மாதம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் பழங்குடியின தொழில்முனை வோருக்கு என சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மகாராஷ்டிர மாநில அரசின் பழங்குடியினர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் 50-க்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர் “சபரி” என்ற பிராண்ட் பெயரில் வீட்டில் தயாரிக்கப்பட்ட சட்னிகள், அப்பளம், எம்பிராய்டரி செய்யப்பட்ட துணிகள், மணிகள் கோர்க்கப்பட்ட நகைகளை விற்பனைக்காக காட்சிப்படுத்தி யிருந்தனர். இதில் 1,000-த்துக்கும் மேலான பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். ரூ.2 லட்சம் மதிப்புக்கு பொருள்கள் விற்பனையானது.

“இதே போன்ற விற்பனைச் சந்தையை காலாண்டுக்கு ஒரு முறை ஏற்பாடு செய்ய நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் பெண் தொழில்முனைவோர் தங்கள் தயாரிப்புகளை சந்தைப் படுத்தி விற்பனை செய்ய முடியும். மேலும் அவர்கள் தங்கள் வாழ் வாதாரத்தை உயர்த்திக் கொள்ள முடியும்” என்கிறார் ரவாத். சங்கத்தின் உறுப்பினர் ராஜேஸ்வரி பாலாஜிவாலே, இந்த திட்டத்துக்கு தலைமை வகித்தார்.■

---


## ROTARY NEWS PLUS

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை ஒவ்வொரு Rotary News சந்தாதாரர்க்கும் e-mail மூலம் அனுப்புகிறோம்.

உங்கள் பெயர்,
ரோட்டரி சங்கம், மாவட்டம் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு rotarynews@rosaonline.org என்ற முகவரிக்கு பகிரவும்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.

# பசுமையான ஒடிசாவுக்காக பாடுபடுவோம்

V முத்துகுமரன்

புவனேஸ்வர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் காடழிப்பு மற்றும் நகர்ப்புற குடியிருப்புகளுக்கான தேவை அதிகரித்து வருவதால், நகர ரோட்டராக் டர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக குழுக்களாக விதை பந்துகளை விநியோகித்து வருகின்றனர். “எங்கள் நோக்கம் பசுமையான, நிலையான சூழலை உருவாக்குவது மட்டுமல்லாமல், மரங்களை வளர்ப்பது மற்றும் நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றி பொதுமக்களுக்குக் கற்பிப்பதும் ஆகும்'' என்று RID 3262 இன் RAC புவனேஸ்வர் ராயல் சங்க ஆலோசகர் முகேஷ் சமல் கூறுகிறார்.

இந்த ஆண்டு (2024–25), சங்கம் உள்ளூர் நிறுவனமான ஐஜி ட்ரோன்ஸ் உடன் ஒரு கூட்டாண்மைக்குள் நுழைந்தது, அந்த நிறுவனம் விதை பந்துகளை வான்வழியாக பரப்ப இரண்டு ட்ரோன்களை வழங்கியது. ‘‘கடந்த இரண்டு ஆண்டுகளில் நாங்கள் 10,000 விதைப் பந்துகளை மனித வளம் மூலம் பரப்பியது போலல்லாமல், இந்த முறை ஏற்கனவே 20,000 விதைப் பந்துகளை தூவியுள்ளோம், மேலும் 50,000 தூவல்களை எட்ட இலக்கு வைத்துள்ளோம். எங்கள் பசுமையாக்கும் முயற்சிகளில் இவ்வளவு பெரிய தாக்கம் ட்ரோன்கள் மூலம் மட்டுமே சாத்தியமாகும்'' என்று சமல் விளக்குகிறார். 35 ரோட் டராக்டர்களைத் தவிர, பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 20–25 தன்னார்வலர்கள் ஆற்றுப்படுகைகள், வறண்ட குளங்கள், நகர்ப்புறங்கள், கிராமங்கள், தரிசு நிலங்கள் மற்றும் வனப்பகுதிகளில் விதைப்பந்து தூவுதலில் ஈடுபட்டுள்ளனர்.

வரும் மாதங்களில், சமுதாயக் கூடத்தில் விதைப்பந்துகள் தயாரிப்பதற்காக, நகரப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களை சங்கம் ஈடுபடுத்தும். ''அவர்களின் ட்ரோன்களை இலவசமாக குத்தகைக்கு கொடுத்ததற்காக எங்கள் கூட்டாளர் நிறுவனத்திற்கு எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம், இது தொலைதூர பகுதிகளை நல்ல ஊடுருவலுடன் அடைய எங்களுக்கு உதவியது'' என்று அவர் கூறுகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபரில், தான் உத்சவ் திட்டம் கொடுப்பதன் மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறது.







இது ஒரு வார கால திட்டமாகும், இது அக்டோபர் 2-ம் தேதி தொடங்கி வெவ்வேறு கருப் பொருள்களுடன் வெவ்வேறு இடங்களில் நடைபெறும். ''இந்த ஆண்டு காதுகேளாதோர் பள்ளியின் ஒடிசா சங்கத்தைச் சேர்ந்த சுமார் 50 மாணவர்களுக்கு விரிவான இரவு உணவு வழங்கப்பட்டது. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நகரம் முழுவதும் மூன்று இடங்களில் சிறிய பேரணிகளை நடத்தினோம்.





26 ரோட்டராக்டர்கள் கொண்ட குழு, புற்று நோய்க்கு எதிராக இளம் பெண்களுக்கு தடுப்பூசி போடும் செய்தியை எடுத்துரைக்கும் பலகைகள் மற்றும் பதாகை களை ஏந்தியிருந்தனர். இந்தச் செய்திகளைப் பரப்புவதற்காக இந்த இடங்களில் பொதுமக்களையும் ஈடுபடுத்தினோம்'' என்று சமல் விளக்குகிறார்.

**இடது:** *விதை பந்துகளை உருவாக்கும் ரோட்டராக்டர்கள்.*

**கீழே:** RAC *புவனேஸ்வர் ராயல் திட்டக் குழு.*

தான் உத்சவின் மூன்றாவது கட்டத்தில், புவனேஸ்வரில் உள்ள ஒரு பரபரப்பான பகுதியில் மனநலப் பிரச்சி னைகள் குறித்து ரோட்டராக்டர்கள் ஒன்று கூடிப் பொதுமக்களிடம் பேசினார்கள். “நாங்கள் பொதுமக்களுக்கு 200 துண்டு பிரசுரங்களை விநியோகித்தோம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் அவர்களின் மன ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுமாறு வலியுறுத்தினோம்.'' ஜனவரியில் கல்லூரி மாணவர்களுக்கான வினாடி வினா போட்டியை நடத்த சங்கம் திட்டமிட்டுள்ளது, ''ஆனால் இந்த திட்டம் இன்னும் திட்டமிடல் கட்டத்தில் உள்ளது'' என்று சங்கத்தலைவர் சோம் சாஸ்திரி கூறுகிறார்.

அவர்களின் பெற்றோர் ரோட்டரி சங்கமான RC புவனேஸ்வர் ராயல், அதன் தலைவர் பிபூதி கர் தலைமையில், ரோட்டராக்டர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை மேற் கொள்ள ஆதரவை வழங்கி வருகிறது. மாநில வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறையில் ஒரு நிர்வாகியான முகேஷ் சமல் 12 ஆண்டுகளாக ரோட்டராக்டராக உள்ளார். “ரோட்டராக்ட் எனக்கு ஒரு குடும்பம் போன்றது, மேலும் சமூகப் பணிகளைச் செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்,'' என்று அவர் கூறுகிறார், மேலும் ''அடுத்த இரண்டு ஆண்டுகளில் நான் ரோட்டரியில் சேர்வேன்'' என்றார்.■






# நம் பூமியை மேம்படுத்தும் பழக்கங்கள்

ப்ரீதி மேஹரா

*எளிதாக செய்யலாம். நீங்கள் சூழல் நட்புடன் இருக்கலாம்*

பசுமைப் பழக்கங்களை மக்கள் மீது திணிக்கக்கூடாது, மெதுவாக, இதமாகத்தான் அறிமுகப்படுத்தவேண்டும் என்று சுற்றுச்சூழலியலாளரான நண்பர் ஒருவர் சரியாகச் சொல்லியிருக்கிறார். மனிதர்கள் விதிமுறைகளை உடைக்க விரும்புகிறவர்கள், பிறர் தங்களுக்குக் கட்டளையிடுவதை விரும்பாதவர்கள் என்பது அவருடைய கருத்து. அதனால், இதைச் செய், இதைச் செய்யாதே என்று கடுமையான பட்டியல் ஒன்றை உருவாக்கினால், அது விரைவில் தூக்கியெறியப்படும் அல்லது மறக்கப்படும்.

அதனால், பசுமைப் பழக்கங்களை முதலில் நம் குடும்பத்தின் வழக்கமான வேலைகளில் சேர்க்கலாம். பின்னர், மெதுவாக, நாம் அவற்றைத் தொடர்ச்சியான செயல்பாடுகளாக மாற்றலாம். நல்ல வேளையாக, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கொண்ட நடவடிக் கைகளைப் பொறுத்தவரை, எளிய செயல்கள்கூட நம் வழக்கமான எதிர்வினையின் பகுதியாகிவிட்டால் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும். நாமும் நம்மைச் சுற்றியுள்ளவர்களும் சுற்றுச்சூழலுக்கு இதமான குடிமக்களாக மாற உதவுகின்ற சில மென்மைப் பழக்கங்கள், இதோ.

நாம் உடனடியாகத் தொடங்கக்கூடிய ஒரு பழக்கம், மின்சாரத்தை வீணடிக்கக் கூடாது என்று நமக்கு நாமே நினைவுபடுத்திக் கொள்ளுதல். ஓர் அறையிலிருந்து வெளியேறும் போது விளக்குகளை அணைக்கலாம், பயன்பாட்டில் இல்லாத தொலைக்காட்சியை அணைக்கலாம். நீங்கள் மின்சாரத்தை வீணடிக்கும் போதெல்லாம், தேவையில்லாமல், உங்களையும் அறியாமல், சுற்றுச் சூழலில் வெளிவிடப்படும் உமிழ்வுகளைக் கூட்டுகிறீர்கள். வீட்டில், அல்லது அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள், இயந்திரங்கள், குளிரூட்டிகளுக்கும் இது பொருந்தும்.

சிந்தித்து, விழிப்புணர்வுடன் செயல்பட்டால் மின்சாரத்தைச் சேமிக்கலாம். எடுத்துக்காட்டாக, குளிர்விக்கும் பெட்டியைத் திறந்து அதன்முன் நிற்பது தவறு. நீங்கள் அதன் கதவைத்திறக்கும் போதெல்லாம், உள்ளிருக்கும் குளிர் விக்கப்பட்ட காற்றில் மூன்றில் ஒரு பங்குவரை வெளியேறிவிடுகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. அதனால், குளிர்விக்கும் பெட்டியின் கதவைத் திறந்துவிட்டு அதிலிருந்து என்ன எடுக்கலாம் என்று சிந்திப்பதைவிட, அதை முன்கூட்டியே தீர்மானித்து விட்டுக் கதவைத் திறப்பது நல்ல பழக்கம்.

மின்சாரச் செயல்திறன் கொண்ட குளிர்விக்கும் கருவிகள், குளிர்விக்கும் பெட்டிகள், மின்விசிறிகளை வாங்கினால் பூமிக்கும் நல்லது, உங்கள் பணப்பைக்கும் நல்லது. அதேபோல், நீங்கள் வழக்கமான விளக்குகளிலிருந்து, குறைந்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் LED விளக்குகளுக்கு மாறலாம்.

வீட்டிலுள்ள எல்லாரும் மின்சாரத்தைச் சேமிக்கவேண்டும் என்று ஊக்குவிப்பதற்காக, மின்சாரக் கட்டணம் குறையும்போது நீங்கள் அவர்களுக்கு ஒரு கொண்டாட்ட விருந்து வழங்கலாம், அல்லது, திரைப்படத்துக்கு அழைத்துச் செல்லலாம்.

நீர் என்கின்ற மதிப்பு மிக்க இயற்கை வளத்தை நாம் உரிய அளவு மதிப்பதில்லை. குழாய் இணைப்புகளில் உள்ள கசிவுகளை அடைப்பது, குழாய்களைப் பயன் படுத்திய பின் ஒழுங்காக மூடுவது போன்றவற்றின்மூலம் நாம் நம்முடைய நீர்ப் பயன்பாட்டைக் குறிப்பிடக்கூடிய அளவு குறைக்கலாம். பல் தேய்க்கும்போது குழாயை மூடுவதும் ஒரு நல்ல பழக்கம். தாகம் எடுத்தால், உங்கள் குவளையில் வேண்டிய அளவுமட்டும் தண்ணீரைப் பிடித்துக் குடியுங்கள், முழுக் குவளையிலும் நீரைப் பிடித்து விட்டு, அதில் பாதியைமட்டும் குடித்துவிட்டு மீதியைக் கீழே ஊற்றுவது வீண்.

பாதுகாக்கப்பட்ட வளாகங்கள், அடுக்ககத் தொகுதிகளில் வாழ்கிறவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, கழிவு நீரை மறுசுழற்சி செய்யும் அமைப்பு ஒன்றை RWA மூலம் உருவாக்கலாம், அந்த நீரைத் தோட்டத்துக்கு, கார்களைக் கழுவுவது போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம்.





பெரும்பாலான வீட்டுவசதி அமைப்புகளில் மழை நீர் திரட்டல் வசதி இருக்கிறது. ஒருவேளை, உங்கள் வீட்டுவசதி அமைப்பில் அது இல்லாவிட்டால், எல்லாரும் சேர்ந்து அந்தப் பழக்கத்தைத் தொடங்குங்கள்.

வீட்டுக் குப்பைகளை மொத்தமாக எறியாமல் வகைப்படுத்தி நீக்குகிற பழக்கம் எல்லாருக்கும் வரவேண்டும். நகர்ப்புற இந்தியாவில் நாள் தோறும் 1.15 லட்சம் டன் நகராட்சிக் குப்பைகள் உருவாக்கப்படுகின்றன என்று அலுவல் மதிப்பீடுகள் சொல்கின்றன. இவ்வாறு திரட்டப் படும் குப்பைகளில் 50% பதப் படுத்தப்படுகின்றன, 18% தூக்கி எறியப்படுகின்றன. ஆனால், 31.17% குப்பைகளுக்கு என்ன ஆகிறது என்று நமக்குத் தெரியவில்லை.

பொறுப்புள்ள குடிமக்களாகிய நாம், நம் வீட்டில் உண்டாகும் குப்பையை ஒழுங்காக வகைப்படுத்து வதன்மூலம் இந்நிலையை மாற்றுவதற்கு உதவலாம். குப்பைகளை வேறுவிதமாக மீண்டும் பயன்படுத்தவும், மறுசுழற்சி செய்யவும், அறிவியல் முறைப்படி அகற்றவும் இது உதவும். குப்பைகளை வகைப்படுத்தும்போது நீங்கள் இரண்டு பெரும் பிரிவுகளை நினைவில் கொள்ள வேண்டும்: உலர்குப்பை, ஈரக்குப்பை. காலிப்புட்டிகள், குவளைகள், துணிகள், மரம், உலோகங்கள், தாள் போன்றவை உலர் குப்பைகளாகும். உணவுப் பொருட்கள், விதைகள், காய்கறி, பழத் தோல்கள் போன்ற இயற்கைக் குப்பைகள் ஈரக் குப்பைகளாகும். தூய்மை, மருத்துவக் குப்பைகளைத் தனியாக அகற்றவேண்டும். ஆபத்தான, அரிக்கக்கூடிய வீட்டுப் பொருட்களையும் தனியாக அகற்ற வேண்டும். மின் குப்பையைத் தனியாகக் கையாளவேண்டும், அதை மற்ற வகைகளுடன் சேர்க்கக்கூடாது.

குப்பையை ஒழுங்காகப் பிரித்தால், அதை ஒழுங்காகக் கையாளலாம். இந்த முயற்சியில் குடிமக்கள் பங்கேற்பதன் முதன்மைத்துவத்தை அரசாங்கம் பல முறை வலியுறுத்தியுள்ளது. நம் நகரங்களை இன்னும் தூய்மையாக, இன்னும் பசுமையாக ஆக்க நம்முடைய பங்களிப்பைச் செய்வோம்.

வீணடிக்கப்படுகிற ஒரு வளம், உணவு. இந்தியாவில் சமைக்கப்படுகிற, அல்லது, சேமிக்கப்பட்டுள்ள உணவில் 40% வீணாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஏதாவது ஒரு திருமணம் அல்லது சமூக நிகழ்வுக்குப்பிறகு என்ன நடக்கிறது என்று பாருங்கள், நிறைய உணவு குப்பைத் தொட்டியில் கொட்டப்படுவதைக் காண்பீர்கள். நாம் உணவகங்களில் வாங்குகிற, வீட்டில் சமைக்கிற உணவின் அளவை நாம் கவனித்துச் செயல்பட வேண்டும்.

உணவைப் பொறுத்தவரை, உள்ளூர்க் காய்கறிகள், பழங்களை மட்டும் வாங்குகிற பழக்கம் மிக நல்லது. இதன்மூலம் உள்ளூர் விவசாயிகளும் ஊக்குவிக்கப்படுவார்கள், தொலைவிலிருந்து காய்கறிகள், பழங்களைக் கொண்டு வருவதால் உண்டாகும் கார்பன் அடித்தடமும் குறையும்.

பசுமைப் பழக்கங் களைப்பற்றிப் பேசும் போது பிளாஸ்டிக்கைப்பற்றிச் சொல்லாமல் இருக்கமுடியுமா? திரும்பப் பயன்படுத்தக் கூடிய துணி, தாள் பைகளை எப்போதும் கையில் வைத்திருப்பதுபற்றி நாம் நிறையக் கேட்டுள்ளோம். பிளாஸ்டிக் பைகள் நம் ஆறுகளில், ஏரிகளில் சென்று சேர்ந்து நிலத்தை மாசுபடுத்து கின்றன, விலங்குகள், பறவைகள், நீருயிர்களைத் துன்புறுத்துகின்றன என்பதால், அவற்றை நாம் எந்த அளவு குறைவாகப் பயன்படுத்து கிறோமோ, அந்த அளவு நல்லது. ஒரு முறை பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிகிற பிளாஸ்டிக் பொருட்களை இயன்றவரை தவிர்க்கவேண்டும். ஒரு முறைமட்டும் பயன்படுத்துகிற பிளாஸ்டிக் புட்டிகள், கோப்பைகள், தட்டுகள், கரண்டிகள் குப்பைகளாகக் குவிந்துவிடுகின்றன. அதனால், கண்ணாடி அல்லது உலோகப் புட்டிகள், திரும்பப் பயன்படுத்தக் கூடிய கோப்பைகள் அல்லது, மட்கக்கூடிய மாற்றுகளைப் பயன்படுத்துங்கள்.

இவை சில பரிந்துரைகள் மட்டும் தான்; இந்தத் துறை சார்ந்த வல்லுனர்களிடமிருந்து இன்னும் பல உதவிக் குறிப்புகளை நீங்கள் எளிதில் பெறலாம். இதைமட்டும் நன்கு மனத்தில் வையுங்கள்: 2025-ம் ஆண்டு பசுமைக் குடிமக்களுடைய ஆண்டாகட்டும், பழக்கங்களிலும் சரி, வடிவமைப்பிலும் சரி.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.



# யாழ்ப்பாணப் பார்வை... யாழ்ப்பாணக் கண்கள் மூலம்



சந்தியா ராவ்

அது 1980களின் ஆரம்ப காலம். சஷி, சஷிகலாவின் சுருக்கப் பெயர், 16 வயது. அவள் ஒரு மருத்துவராக ஆகும் கனவுடன் இருக்கிறாள். சஷிக்கு மூன்று மூத்த சகோதரர்கள் மற்றும் ஒரு இளைய சகோதரர் உள்ளனர். அவர்கள் இலங்கையின் வடக்கு முனையில் உள்ள யாழ்ப்பாணத்தில் ஒரு மகிழ்ச்சியான வீட்டில் தங்கள் பெற்றோருடன் வாழ்கின்றனர். இவர்களது நெருங்கிய நண்பரான ‘K’ அருகில் வசிக்கிறார். சசியை விட ஒரு வயது மூத்த அவரும் மருத்துவம் படிக்க திட்ட மிட்டுள்ளார். பின்னர் உள்நாட்டுப் போர் வெடிக்கிறது.

V V கணேசனந்தனின் நாவலான பிரதர்லெஸ் நைட், 2024-ம் ஆண்டு புனைகதைக்கான வுமன் பரிசை வென்றது. நடுவர்களில் ஒருவரான நைஜீரிய எழுத்தாளர் அயோபாமி அடேபாயோ கூறுகிறார்: “இது ஒரு ஆழ்ந்த சக்திவாய்ந்த நூல், நினைவுகுறிப்பின் நெருக்கத்தையும், மகா காவியத்தின் பரப்பையும் கொண்டுள்ளது. இலங்கையின் உள்நாட்டு போரைப் பற்றி மறக்க முடியாத கதையை சொல்லுகிறது.” இந்தப் படைப்பின் கதாநாயகி சஷி, 16 ஆண்டுகள் நடந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் உருவான இந்தப் படைப்பு, சாதாரண மக்களின் வீடுகளையும் இதயங்களையும் அழித்த யுத்தத்தின் வெரியை காட்டுகிறது. வாசுகி கணேசனந்தன், சஷியின் கண்களால் இந்தப் போர் எப்படி சில தொலைதூரப் போர்முனைகளில் நடத்தப்படவில்லை, தெருக் களிலும், வீடுகளிலும், பல்கலைக் கழகங்களிலும், நூலகங்களிலும், சந்தைகளிலும், காடுகளிலும் நடந்ததைக் காட்டுகிறார். ஒளிந்திருக்க எங்கும் இடமில்லை. வேலை செய்வதற்கும் படிப்பதற்கும் சம வாய்ப்புகள் வேண்டும், தமிழையும் தமிழர்களையும் அங்கீகரிக்க வேண்டும், தங்கள் மாகாணத்திற்கு சுயாட்சி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையாக ஆரம்பித்தது, இறுதியில் ஒரு லட்சம் உடல்கள் மற்றும் எட்டு லட்சத்துக்கும் அதிகமான இடப்பெயர்வுகளில் முடிந்தது.

பிரதர்லெஸ் நைட் 2009 ஆம் ஆண்டு நியூயார்க் நகரத்தில் தொடங்குகிறது, இதன் முதல் வரி: “நான் அறிந்திருந்த ஒரு பயங்கரவாதிக்கு சமீபத்தில் ஒரு கடிதம் அனுப்பினேன்.” கதை யாசிரியர் தொடர்ந்து: “நாங்கள் முதலில் பொதுமக்கள். நீங்கள் அதை புரிந்து கொள்ள வேண்டும்: பயங்கரவாதி என்ற வார்த்தை நாங்கள் வாழ்ந்த வரலாற்றுக்கு மிகவும் எளிமையான ஒரு சொல். நாம் இந்த வார்த்தையிலிருந்து தொடங்குகிறோம். ஆனால் இது வரை நடந்த அனைத்தையும் அது விவரிக்க முடியாது என்பதை நீங்கள் உணருவீர்கள் என்று நான் உறுதியாக கூறுகிறேன். நான் தினமும் பயங்கர வாதிகளை சந்தித்த அந்த பெண்ணாக இப்போது இல்லா விட்டாலும், நான் அந்த பெண்ணாக இருந்த போது, எனது உலகில் இரு பயங்கரவாதிகள் சந்திக்கும் நேரத்தில் அவர்கள் முதலில் சொல்வது வெறும் ஒரு வணக்கம் தான். நீங்கள் அறிந்த அல்லது நேசித்த இரு மனிதர்கள் போல.”




இந்த வார்த்தைகளின் முக்கியத்துவம், புத்தகத்தை முழுமையாகப் படித்தபின் மட்டுமே தெளிவாகப் பதிவு செய்யப்படுகிறது; சில காட்சிகளும் தெளிவடைந்தன: துப்பாக்கி ஏந்திய தற்கொலைத் தீவிரவாதிகள் தங்கள் குடும்பங்களின் பாதுகாப்பான வீடுகளின் பின்னணியில் வருகின்றனர், LTTE போராளிகள் இராணுவ உடையில் நிற்கும் வரிசைகள் பள்ளி, இசை, பல்கலைக்கழக நூலகங்களை நினைவூட்டுகின்றன, மண்டபம் மற்றும் தனுஷ்கோடிக்கு முடிவில்லா வரிசைகளில் வந்து சேரும் அகதிகள் சொந்த வாழ்க்கையும் காதல்களும் கொண்ட மனிதர்களாக மாறுகின்றனர். எழுத்தாளர் தனது சிறந்த கதை யாடலின் மூலம், மனக்காயங்களின் மற்றும் மனசிதைவின் உண்மையை வாசகருக்கு தெளிவாக காட்டுகிறார்.

சஷி யாழ்ப்பாணத்தில் ஒரு பள்ளி மற்றும் மருத்துவ மாணவியாக தனது வாழ்நாளில் நம்மை அழைத்துச் செல்லும்போது, அவளுடைய நம்பிக்கைகளும் கனவுகளும் போராளிகளின் கோரிக் கைகளுக்கு அடிபணிவதை நாம் காண்கிறோம். அவள் மருத்துவப் பட்டப்படிப்பை முடிப்பதற்கு முன்பே, காயம்பட்ட “புலிகளுக்கு” மற்றும் பொதுமக்களுக்கு சிகிச்சையளிக்க அழைக்கப்படுகிறாள். புரட்சியின் “மகள்” என்ற முறையிலும், இரண்டு சகோதரர்கள் இயக்கத்தில் இருப்பதாலும், அவளுக்கு வேறு வழியில்லை. தவிர, நோய்வாய்ப்பட்ட வர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு சி

கிச்சை அளிப்பதற்காக வருங்கால மருத்துவப் பயிற்சியாளராக தார்மீகப் பொறுப்பால் அவள் தூண்டப் படுகிறாள். காலப்போக்கில், அவள் போராளிகளின் செயல்களையும், அரசு படையினர் மற்றும் IPKF வீரர்களின் நடவடிக்கைகளையும் நேரடியாகக் காண்கிறாள். எல்லாத் தரப்பினரின் செய்கைகளிலும் அநியாயமும் கொடூரமும் வெளிப்படுகிறது. இதற்கிடையில், கொழும்பில் தமிழருக்கு எதிரான கலவரத்தில் தனது அன்பு மிக்க மூத்த சகோதரனை இழந்த துக்கத்தை அனுசரிக்க கூடநேரம் இல்லை. அதேசமயம், தான் நேசிக்கும் நபர் மெதுவாக இயக்கத்தில் இணை வதையும், இறுதியில் IPKF-க்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தில் தனது உயிரை துறப்பதையும் அவள் காண்கிறாள். அவர் K என்று மட்டுமே குறிப் பிடப்படுகிறார். இதற்கிடையில், அவர் தனது உடற்கூறியல் பேராசிரியரான டாக்டர் அஞ்சலி பிரேமச்சந்திரனிடம் சரியான வழிகாட்டியைக் காண்கிறார், அவர் ஆரம்பத்தில் இயக்கத்தை ஆதரித்து, பின்னர் அதன் அட்டூழியங் களால் ஏமாற்றமடைந்து, தன் இன வீரர்களுக்கு எதிராக தைரியமாக நின்று, அச்சமற்ற விமர்சகராக மாறுகிறார்.

யாழ்ப்பாண மக்களின் குரல்களை இதில் நீங்கள் கேட்பீர்கள். தனிமனிதக் குரல்கள், தனிமனிதப் பயங்கரங்கள், தனிப்பட்ட சோகங்கள் மற்றும் துயரங்கள், இளைஞர்களிடையே குழப்பம், குடும்பங்களைப் பிரித்தல், உறவுகளின் இழப்பு, வீடு மற்றும் தோட்டம் மற்றும் செல்லப் பிராணிகள் மற்றும் நண்பர்களின் பாதுகாப்பிற்கான ஏக்கம், நம்பிக்கையின் சிதைவு, வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மை, மகிழ்ச்சிகள், கனவுகள் மற்றும் சிரிப்புகள் என.. பிரதர்லெஸ் நைட் அனைத்தையும் நமக்கு காண்பிக் கிறது. சாதாரண மக்கள், பெண்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தாய்மார்கள், கடைக்காரர்கள் என அனைவரின் கதையையும் கருணை யுடன் சொல்கிறது.

சென்னையில் ஒரு வீடியோ வாடகை கடைக்கு நாங்கள் அடிக்கடி செல்வோம். இது ஒரு இலங்கைத் தமிழரால் நடத்தப்பட்டது, இந்த புத்தகத்தில் ‘‘யாழ்ப்பாணக் கண்கள்’’ என்ற குறிப்பைப் படித்தபோது, அவருடைய யாழ்ப்பாணக் கண்கள் என் நினைவுக்கு வந்தது. அங்கு, நான் ஒருமுறை மிகவும் பரிச்சயமான ஆனால் எனக்குத் தெரியாத ஒரு மனிதரை சந்தித்தேன். அது புலிகளின் சித்தாந்தவாதியான அன்டன் பாலசிங்கம். நாம் அந்த உள்நாட்டுப் போருக்கு எவ்வளவு அருகில் இருந்திருக்கிறோம்.



பிரதர்லெஸ் நைட்டில் நீங்கள் அவரையும் பல பழக்கமான நபர்களையும் சந்திப்பீர்கள். அவர்களுக்கு வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன, ஆனால் நீங்கள் அவர்களை அடையாளம் காண்பீர்கள். உதாரணமாக, K எனும் பாத்திரம், இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற அரசியல்சார்ந்த கோரிக்கைகளுக்கு ஆதரவாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழந்த LTTE தளபதி திலீபன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளார். அஞ்சலி பிரேமச்சந்திரன் என்ற பாத்திரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனாட்டமி பேராசிரியராகவும், மனித உரிமை இயக்கவாதியாகவும் இருந்த ரஜனி திரானகமா (பிறப்பு பெயர் ராஜசிங்கம்) அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளார். LTTEயின் கொடூரங் களை வெளிப் படையாக விமர்சித்ததற்காக, அவர் 35 வயதிலேயே LTTEயால் படுகொலை செய்யப்பட்டார்.

வுமன் பரிசு இணைய தளத்தில் அளித்த பேட்டியில், கணேசனந்தனிடம் இந்த நாவலை எழுதத் தூண்டியது எது என்று கேட்கப்பட்டது. ‘‘யாழ்ப்பாணத்தில் அந்தக் காலத்தில் வாழ்ந்த நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரின் கதை களைக் கேட்டு வளர்ந்தவள் நான். கொடூரமான சூழ்நிலையில் தங்கள் குடும்பத்தைப் பாது காப்பாக வைத்திருக்க உழைத்த பெண்களின் கதைகள் என்னை மிகவும் கவர்ந்தன’’ என்கிறார்.

எழுதுவதின் சவால்களைப் பற்றிப் பேசுகையில், ஆசிரியர் கூறுகிறார், ‘‘... புத்தகத்தின் பெரும் பாலான மூலப்பொருள் வன்முறையானது, அந்த வன்முறையின் உணர்ச்சி கரமான விளைவுகளைப் பற்றி நான் எழுதினேன். இந்தப் புத்தகத்தை எழுதுவதில் இருந்த மிகப் பெரிய சவால், அந்த வன்முறையை, பரபரப்பாக்காமல், குறைக்காமல் நேர்மையாகச் சித்தரிப்பதுதான். நான் அதை போராளிகளின் கதை களைக் கொண்டு சமப்படுத்த வேண்டியிருந்தது. இன் கான்வர் சேஷன் (ஜூன் 21, 2024) கட்டுரையில், பேராசிரியர் அங்கி முகர்ஜி, குழந்தை சிப்பாய் ஷோபாசக்தியின் ட்ரைடர், அனுக் அருட்பிரகாசத்தின் தி ஸ்டோரி அஃப் எ பிரீப் மேரேஜ் மற்றும் ஷெஹான் கருணாதிலகவின் தி செவென் மூன்ஸ் அஃப் மாலி அல்மேடா போன்ற நாவல்கள் அந்த காலகட்டத்தை பற்றிய விவரங்களை சமர்ப்பித்தாலும், அவை கணேசனந்தன் துக்கத்தின் நாடு என்று அழைக்கும் இடத்திற்கு போகவில்லை, அங்கே பெண்கள் எப்படி துன்பப்படுகிறார்கள் மற்றும் எப்படி உயிர்பிராயம் செய்து தங்களை காப்பாற்றிக்கொள்கிறார்கள் என்பதையும் காட்டவில்லை. காணாமல் போன தந்தைகள், மூளைச் சலவை செய்யப்பட்ட சகோதரர்கள் மற்றும் நண்பர்களால் உருவாக்கப்பட்ட வெற்றிடத்திற்கு சஷியின் ‘‘அபாரமான மற்றும் அதிகாரமிக்க’’ பதிலை அவர்கள் தொடவில்லை.

பிரதர்லெஸ் நைட் அதன் நேரடியான மற்றும் சிக்கலான உண்மையைச் சரியாக விளக்குவதன் மூலம் வாசகரை நகர்த்துகிறது.

கட்டுரையாளர் குழந்தைகள்
எழுத்தாளர் மற்றும் மூத்த
பத்திரிகையாளர்.

# கால்களை வலுவாக்கும் பயிற்சிகள்

பரத் - ஷலன் சவூர்



வரலாற்றில் இருந்து பாடம் கற்காதவர்கள் தங்கள் தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்வார்கள். பெரும்பாலான நேரங்களில் நாம் வெற்றியை விட தவறுகளில் இருந்து அதிகம் கற்றுக் கொள்கிறோம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆனால் இங்கே லார்சன் அண்ட் டூப்ரோ (L&T) மூலம் வழங்கப்படும் ஒரு தனித்துவமான பாடம் வழங்கப்பட்டுள்ளது, இது ஒருவர் கொடுக்கப்பட்ட பணிக்கு மிகவும் திறமைசாலியாக இருக்கலாம் என்பதைக் காட்டுகிறது.

1950களில், புகழ்பெற்ற ஹாலிவுட் இயக்குனர் டேவிட் லீன் தனது போர் திரைப்படமான பிரிட்ஜ் ஆன் தி ரிவர் குவாய் (1957) க்கு ஒரு பாலம் கட்ட L&T நிறுவனத்தை நியமித்தார். ஏன் L&T என்று நீங்கள் கேட்கலாம். அதற்கான பதில் நமக்கு ஒருபோதும் கிடைக்காது. அது படப்பிடிப்பு தளத்திற்கு (இலங்கை, அப்போது சிலோன் என்று அழைக்கப்பட்டது) அருகில் இருந்ததாலோ அல்லது கட்டணம் இந்திய ரூபாயில் இருந்ததால் மலிவாக இருந்ததாலோ இருக்கலாம். அல்லது எப்படியாயினும், க்ளைமாக்ஸ் காட்சியில் பாலம் தகர்க்கப்பட வேண்டியதுதானே என்பதாலா?

ஆனால் க்ளைமாக்ஸே ஆண்டி-க்ளைமாக்ஸாக மாறியது. குண்டுகள் வெடித்தன, ஆனால் பாலம் தகர்ந்துவிடவில்லை. எனவே முதல் டேக் கைவிடப் பட்டது. தளத்தில் இருந்த L&T குழு மீண்டும் பாலத்தில் வேலை செய்ய ஆரம்பித்தது. பாலத்தை தகர்க்க சுத்தியல்களும் டாங்களும் பயன்படுத்தப் பட்டன. இரண்டாவது டேக் வெற்றிகரமாக முடிந்தது. இதிலிருந்து L&T ஒரு கொள்கையை நிறுவியது: “L&T கட்டுவது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்.” அது போலவே நீங்கள் உங்கள் உள் உடலமைப்பை கவனித்துக் கொள்ள வேண்டும்.

### உங்கள் அடித்தளத்தை பலப்படுத்துங்கள்

பல ஆண்டுகளாக, ஒரு கார்ப்பரேட் நிறுவனமாக L&T மாபெரும் முன்னேற்றங்களைச் செய்து, மிகவும் வெற்றிகரமான நிறுவனமாக மாறியது, மேலும் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெரிய மற்றும் நீண்ட ஒப்பந்தங்களைத் தொடர்ந்து பெற்றது. புதிய மற்றும் மாறுபட்ட முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்து, காலப்போக்கில் அனைத்து வகையான சூழ்ச்சிகளுக்கும் மற்றும் கையகப்படுத்தும் முயற்சி களுக்கும் இலக்காக மாறியது. நிறுவனம் கையகப்படுத்தப்படும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியபோது, L&T நிர்வாகம் தனது புதுமையான திறன்களுடன் உள்நோக்கத்தையும் சேர்க்க விரைவாகச் செயல்பட்டது. நிறுவனம் தனது ஊழியர்களுக்கு பங்குகளை வழங்கியது. ஊழியர்களின் பங்குகள் மற்றும் எண்கள் அவர்களுக்கு ஆதரவாக இருந்ததால், நிறுவனர் குழு தங்கள் நலன்களைப் பாதுகாத்து, L&T -யை விரோதமான கையகப் படுத்துதலிலிருந்து பாது காத்தனர். L&T பாடம் எண் இரண்டு: உங்கள் உடலை வலுப்படுத்த உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப் படுத்துங்கள். சிகிச்சையை விட தடுப்பு, பாதுகாப்பு மற்றும் முன் எச்சரிக்கையே சிறந்தது.

### வலுவான அடித்தளம்

உங்கள் கால்கள் தான் உங்கள் உடலின் நீளமான மற்றும் வலிமையான பாகம். ஆனால் அவற்றின் உடல் வடிவம் மற்றும் பயன்பாட்டிற்கு உங்கள் கவனம் தேவை. நாம் வாழ்க்கையின்



பயணத்தில் நம் கால்களின் மீது முழுமையான ஆதாரம் வைத் திருக்கிறோம், ஆனால் வயதுடன் சேர்ந்து, நம் கால்கள் மற்றும் அதன் தசைகள் பலவீனமாகி விடுகின்றன. இப்போதே தொடங்குவது தான் உங்கள் கால்களை இயக்கத்தில் வைத்திருப் பதற்கான சிறந்த வாய்ப்பு. சைக்கிள் ஓட்டுதல் மற்றும் நடை பயிற்சி போன்ற ஏரோபிக் உடற்பயிற்சிகளுடன், கூடுதல் பயிற்சிகளின் மூலம் எங்கள் கால்களை உறுதி யானதும் நெகிழ்வானதாகவும் வைத்துள்ளோம். அதேபோல, உங்கள் கால்களை முடிந்தவரை வலிமையாக வைத்திருங்கள். உடற்பயிற்சியின் போது மூச்சை உள்ளிழுத்து, முடித்த பிறகு வெளிவிடுவதற்கு மறக்காதீர்கள். இந்த சுழற்சியை தொடருங்கள்:

உங்கள் இடது பக்கத்தில் படுத்து, உள்ளங்கைகளை தரையில் வைக்கவும். கால்களை தரைக்கு இணையாக வைக்கவும். உங்கள் வலது காலை உயர்த்தவும். உங்கள் இடது காலை தொடாமல் கீழே இறக்கவும். 20 முறை செய்யவும். விரல்களை வெளியே நோக்கி வைத்துப் பயிற்சியைச் செய்யுங்கள். பின்னர், விரல்களை உள்ளே மூடி வைத்து அதேபோல் பயிற்சி செய்யுங்கள்.

தொடக்க நிலைக்கு திரும்பவும். உங்கள் வலது முழங்காலை உங்கள் உடலை நோக்கி வளைக்கவும். வலது காலை நேராக மீண்டும் இடது காலுக்கு இணையாக நீட்டவும். உங்கள் வலது காலை நேராக மேலே உயர்த்தவும். தொடக்க நிலைக்கு திரும்பவும். 20 முறை செய்யவும்.

வலது கையால் உங்கள் வலது காலைப் பிடித்து, கீழே உங்கள் குதிகாலை தொடவும். ஒரு நிமிடம் இந்நிலையை வைத்திருங்கள்.

இன்னும் உங்கள் இடது பக்கத்தில், தரையில் உங்கள் இடது உள்ளங்கையால் ஆதரிக்கப்பட்டு, வலது கையால் வலது பாதத்தைப் பிடித்து, உங்கள் இடது காலின் முன் வைக்கவும். கால்விரல்கள் வெளியே நோக்கிய  நிலையில் இடது காலை தரையில் இருந்து ஒரு அங்குலம் உயர்த்தவும். பின்னர், விரல்களை உள்ளே மூடி வைத்து உடற்பயிற்சி செய்யவும். இடது காலின் உள் தொடை கூரையை எதிர்கொள்ளும் வகையில் இருப்பதை உறுதி செய்யவும். 20 முறை செய்யவும்.

இப்போது, இந்த உடற்பயிற்சி களை உங்கள் வலது பக்கத்தை தரையில் வைத்து மீண்டும் செய்யவும்.

நடனமும் டிசம்பரும் சிறந்த நண்பர்கள். ஆனால் ஒரு நொடி காத்திருங்கள் - சிறிய நடனத் தளத்தில், மக்கள் “குங் ஃபூ பைட்டிங் பாடலின் தாளத்திற்கு அசைந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் நடன அசைவுகள் ஒரு திரைப்பட சண்டைக் காட்சியிலிருந்து எடுத்ததா? அல்லது இது ஒரு புதிய நடனமுறையா?

இதற்கிடையில், நடன தளத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட குழப்பம் நடந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் டிஸ்கோ ஜான் டிராவோல்டாவின் “சாட்டர்டே நைட் பிவேர் படத்துடன் முடிவடைந்தது. அதன் தீம் பாடல் 'ஸ்டேயிங் அலைவ்” தற்போது அவசர CPR செய்யும் மருத்துவர்களுக்கான அமைதியான இசையாக பரிந்துரைக் கப்படுகிறது, ஏனெனில் அதில் நிமிடத்திற்கு 103 துடிப்புகள் உள்ளன, இது தேவைப்படும் இதயத் துடிப்புடன் பொருந்துகிறது. இசை குணமாக்கும் என்பதை நாம் அறிவோம். அது தாளங்களுக்கும் பொருந்தும்.

தொழில்முறை பாலே நடனக் கலைஞர்கள் மிகவும் சிறியவயதில் பயிற்சியைத் தொடங்குகிறார்கள். ஜிம்னாஸ்ட்டுகள் போலவே, 20 வயதுக்கு முன்பே ஓய்வு பெறுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் “பாலே-ஃபுட் சிண்ட்ரோம்” எனப்படும் பிரச்சனை. அவர்கள் முனைவில் நடக்கும் நிலைப் பாட்டினால் இது தவிர்க்க முடியாத உடல்நல பாதிப்பாகும். ஜேன் ஃபாண்டா இதை அனுபவத்திலே கற்றுக்கொண்டார். தன்னுடைய காதலனை ஈர்க்க பாலே கற்றார். ஆனால் பிறகு, பாலே மீது காதலில் விழுந்தார். நடனத்திற்கும் தனது நடிப்பு வாழ்க்கைக்கும் இடையில் தன்னுடைய கலைவழிப்பயணத்தை தொடர்ந்தார். ஆனால் அந்த விபத்து ஏற்பட காத்திருந்தது. ஹை ஹீல்ஸ் செருப்புகள் அணிந்து, ஒரு திரைப்பட காட்சிக்காக ஓடிக் கொண்டிருந்தார். அக்காட்சியில் ஹெலிகாப்டரைப் பிடிக்க முயன்றபோது கீழே விழுந்து, கால் முறிந்தது. அதனால் தான் நாங்கள் எங்கள் தளவியல் பயிற்சி களை கிடைமட்டமாகப்  வைத் திருக்கிறோம். இந்த வழியில், அவை காயத்தை ஏற்படுத்தாது. மேலும் பயனுள்ளதாக இருக்கும்.

நடிகையிடமிருந்து ஒரு பாடம்: நவீன “வேகமான” நடனம் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் செயலாகும். இது இடுப்பு, கால் மற்றும் கால் மூட்டுகளை காயப்படுத்தலாம். எனவே, ஹை ஹீல்ஸை மறந்து விடுங்கள். சிறந்த சஸ்பென்ஷனுக்காக ஸ்னீக்கர்களை அணியவும். மேலும், இத்தகைய நடனங்களுக்கு வழக்கமான உடற்பயிற்சி போன்ற வார்ம்-அப்கள் தேவைப்படுகின்றன.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.



## RID 3142

**RC தானே வெஸ்ட்**

பேச்சு மற்றும் கேட்டல் குறைபாடுள்ள சிறப்புக் குழந்தைகளுக்கான ஜவேரி தானாவாலா பள்ளியில், 60 மாணவர்கள், பெற்றோருக்குப் போதை மருந்து அடிமையாதலை விலக்குவது பற்றிய விழிப்புணர்வை உண்டாக்கும் உரை ஒன்றை ரோட்டரியன் டாக்டர் லக்கி கசாட் வழங்கினார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3170

**RC கோகக்**

கோகக் வட்டாட்சியாளர் மோகன் பாஸ்மெ முன்னிலையில், மாற்றுத் திறனாளி மாணவர்களுக்குச் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன. கர்நாடகத்தின் பெலகாவி மாவட்டத்திலுள்ள இந்த வட்டத் தலைமையகத்தில் இந்தச் சங்கத்தின் பொதுத் தோற்றத்தை இது மேம்படுத்தியது.

## RID 3191

**RC ராமநகரம்**

ராம்நகர வட்டத்தைச் சேர்ந்த 25 அரசுப் பள்ளிகள், கர்நாடகத்தின் மைசூரு மாவட்டத்திலுள்ள பைலகுப்பெ-யில் உள்ள ஒரு திபெத்தியப் பள்ளி மாணவர்களுக்கு 5,000க்கும் மேற்பட்ட குறிப்பேடுகள், அகரமுதலிகள், காலணிகள் வழங்கப்பட்டன.






## RID 3201

**RC கோயம்பத்தூர் ஜெனித்**
கஞ்சப்பள்ளி கிராமத்தில் மாவட்டப் பொதுச் செயலாளர் சுப்ரமணியம், AG ராஜன் ஆறுமுகம் ஒரு நூலகத்தைத் (ரூ.1.26 லட்சம்) தொடங்கிவைத்தார்கள். இது இங்கு வசிக்கும் 4,500க்கும் மேற்பட்டோருக்குப் பயன்படும்.

## RID 3150

**RC பஞ்சரா ஹில்ஸ் ஹைதராபாத்**
அரசுப் பள்ளிகள், அறக்கட்டளைகளைச் சேர்ந்த 1,500 குழந்தைகளும், HIV பாதிப்பு கொண்டவர்களும் மழையின்போதும் வகுப்புகளுக்குச் செல்வதற்கெனக் குடைகள் வழங்கப்பட்டன.



## RID 3234

**RC மெட்ராஸ் டிரெடிஷனல்**
திருமதி K சுக்னிபாய் சனாதன தர்மா பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கணேஷ்பாய் கலாடா பெண்கள் உயர்நிலைப் பள்ளி, TTV உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 72 மாணவர்களுக்கு ரூ.2.31 லட்சம் மதிப்புள்ள கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.



## RID 3261

**RC ராய்கர்ஹ் ராயல்**
அக்ரோஹா தாமில், நவராத்திரியின் ஒன்பதாவது நாளன்று நடத்தப்பட்ட கர்பா-வைப் பாலிவுட் பாடகி சுமேதா கர்மகெ தொகுத்து வழங்கினார். நடனப் போட்டியில் வென்றோருக்கு மாநில அமைச்சர் O P சௌத்ரி பரிசுகளை வழங்கினார். ஓர் அதிர்ஷ்டக் குலுக்கலும் நடைபெற்றது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# District Wise TRF Contribution

Source: RI South Asia Office

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation.

As on October, 2024

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| 2981 | 40,403 | 5,481 | 0 | 38 | 45,921 |
| 2982 | 25,755 | 4,033 | 10,421 | 13,031 | 53,240 |
| 3000 | 16,410 | 2,671 | 1,000 | 243,107 | 263,188 |
| 3011 | 34,433 | 4,980 | 26,238 | 382,487 | 448,139 |
| 3012 | 1,017 | 151 | 1,500 | 97,500 | 100,168 |
| 3020 | 44,768 | 8,862 | 21,000 | 4,857 | 79,487 |
| 3030 | 8,972 | 350 | 2,000 | 23,000 | 34,322 |
| 3040 | 1,899 | 90 | 0 | 15,717 | 17,707 |
| 3053 | 21,211 | 300 | 0 | 0 | 21,511 |
| 3055 | 17,806 | 1,515 | 2,071 | 60,050 | 81,442 |
| 3056 | 3,592 | 93 | 60 | 133 | 3,877 |
| 3060 | 96,418 | 5,683 | 1,299 | 67,783 | 171,182 |
| 3070 | 9,514 | 582 | 0 | 0 | 10,096 |
| 3080 | 10,059 | 4,792 | 17,384 | 9,561 | 41,796 |
| 3090 | 7,563 | 56 | 0 | 0 | 7,619 |
| 3100 | 15,819 | 2,614 | 0 | 11,902 | 30,335 |
| 3110 | 7,307 | 623 | 0 | 91,659 | 99,589 |
| 3120 | 18,869 | 100 | 8,337 | 0 | 27,307 |
| 3131 | 253,060 | 4,769 | 13,000 | 63,463 | 334,292 |
| 3132 | 25,018 | 1,716 | 0 | 4,569 | 31,303 |
| 3141 | 260,632 | 21,098 | 77,000 | 974,093 | 1,332,822 |
| 3142 | 248,753 | 14,495 | 7,560 | 135,946 | 406,755 |
| 3150 | 55,226 | 10,018 | 7,250 | 295,119 | 367,613 |
| 3160 | 1,968 | 1,113 | 0 | 5,787 | 8,868 |
| 3170 | 27,613 | 17,720 | 2,000 | 58,566 | 105,898 |
| 3181 | 28,333 | 5,158 | 0 | 0 | 33,492 |
| 3182 | 14,571 | 1,574 | 0 | 0 | 16,145 |
| 3191 | 20,182 | 2,283 | 0 | 1,323 | 23,788 |
| 3192 | 47,911 | 1,511 | 1,000 | 22,976 | 73,398 |
| 3201 | 46,868 | 18,555 | 3,190 | 79,150 | 147,764 |
| 3203 | 21,912 | 5,400 | 15,000 | 4,690 | 47,003 |
| 3204 | 6,769 | 2,361 | 0 | 0 | 9,131 |
| 3211 | 11,886 | 3,081 | 0 | 9,398 | 24,364 |
| 3212 | 123,274 | 11,254 | 1,000 | 105,483 | 241,011 |
| 3231 | 11,695 | 3,857 | 31,238 | 10,000 | 56,790 |
| 3233 | 7,845 | 7,701 | 0 | 160,983 | 176,528 |
| 3234 | 48,311 | 21,235 | 21,459 | 467,063 | 558,068 |
| 3240 | 92,793 | 18,843 | 36,000 | 13,870 | 161,507 |
| 3250 | 114,181 | 3,351 | 1,000 | 20,115 | 138,646 |
| 3261 | 1,068 | 258 | 0 | 5,205 | 6,531 |
| 3262 | 7,674 | 668 | 0 | 0 | 8,342 |
| 3291 | 65,432 | 5,937 | 17,500 | 6,514 | 95,383 |
| 3220 **Sri Lanka** | 32,009 | 2,619 | 4,052 | 3,975 | 42,656 |
| 3271 **Pakistan** | 7,814 | 20,036 | 0 | 6,300 | 34,150 |
| 3292 **Nepal** | 40,494 | 18,869 | 30,001 | 47,833 | 137,198 |
| 63 **(former 3272)** | 250 | 328 | 0 | 0 | 578 |
| 64 **(former 3281)** | 1,875 | 1,715 | 1,000 | 1,050 | 5,640 |
| 65 **(former 3282)** | 371 | 723 | 0 | 0 | 1,094 |

*** Undistricted**

# வெளிப்படைத்தன்மையே நம்பிக்கையை வளர்த்தெடுக்கும்.

## இது உறவுகளை வலுப்படுத்தி, **ஆரோக்கியமான சங்கங்கள் மற்றும் மாவட்டங்களை உருவாக்குகிறது.**

ரோட்டரி அல்லது பொது நிகழ்வுகளுக்கு
நிதி திரட்டும் போது
**பொறுப்புணர்வுடன் நடந்து**
வங்கி கணக்கு விவரங்கள்
மற்றும் பில்களை
**வெளிப்படையாக பகிருங்கள்.**

## நேர்மையே

ஒரு ரோட்டேரியனின்
குணநலத்தின்
அடிக்கல்.



உங்கள் சேவையில்,
**Rtn.AKS. Dr.K. ஸ்ரீநிவாசன்,**
ரோட்டரி திருச்சிராப்பள்ளி,
RID 3000, மண்டலம் 5.

ADVT.



# பழைய தில்லியின் நினைவுகள்

LBW



**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

1958 முதல் தில்லியில் வாழ்ந்துவரும் எனக்கு, இந்நகரம் பற்றிப் பல இனிய நினைவுகள் உள்ளன. இவை சுமார் 40 ஆண்டுகளுக்குமுன் இந்நகரத்தில் மாசு நிரம்பத் தொடங்குவதற்கு முந்தையவை. 1982 ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு முந்தைய தில்லி இப்போது மிகச் சிலருக்குதான் நினைவிருக்கும். அந்த விளையாட்டுப் போட்டிகள் பழைய, நாட்டுப்புற, அதிகாரத்துவத் தில்லியை வளரும் நகரமாக்கின. அதன்பிறகு, அது தொடர்ந்து வளர்ந்துகொண்டுதான் இருக்கிறது. இன்றைக்குத் தில்லியின் நிலையான மக்கள்தொகை சுமார் மூன்றரைக் கோடி. இதற்குமேல் சுமார் ஒரு கோடிப் பேர் ஆண்டுதோறும் இங்கு வந்து செல்கிறார்கள். 1980ல், பெரும்பாலும் கிராமப்புறங்களைக் கொண்டிருந்த தில்லியின் மக்கள்தொகை வெறும் 70 மில்லியன். இந்த மக்கள் தில்லியைச் சுற்றியிருந்த குர்காவ்ன், நோய்டா போன்ற ஹரியானா, உத்தரப் பிரதேசப் பகுதிகளில் வசித்துவந்தார்கள். இந்திரா காந்தியின் பண்ணை வீடு தில்லியின் தென்மேற்குப் புறநகர்ப் பகுதியில் இருந்தது. இப்போது அது தெற்கு மையத்தில் உள்ளது. அந்தக் கிராமப்புறப் பகுதிகளெல்லாம் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு ஒற்றை நச்சுப் பகுதியாகிவிட்டது. தேசியத் தலைநகரப் பகுதி (NCR) என்னும் பெயரைக் கொண்ட அந்தப் பகுதி இப்போது முற்றிலும் நகர்ப்புறமாகிவிட்டது. NCR பகுதி எவ்வளவு பெரியது என்றால், நீங்கள் தில்லிக்கு விமானத்தில் வரும்போது, இந்தப் பகுதி உண்டாக்கும் மாசு 15,000 அடிவரை உயர்ந்து எல்லாத் திசைகளிலும் 200 மைல்களுக்கு நீள்வதைக் காணலாம். இதற்கு முதன்மைக் காரணம், 1980ல் இங்கு வெறும் ஒரு லட்சம் மோட்டார் வண்டிகள்தான் இருந்தன. இன்று இந்த எண்ணிக்கை சுமார் முப்பது லட்சமாகி விட்டது.

நேற்றைய தில்லியில், அதாவது, 1980களின் தொடக்கம் வரையிலான தில்லியில் இரண்டு சிறந்த அம்சங்கள் இருந்தன: தெளிவான நீல வானம், தூய காற்று. இவை இரண்டும் இலவசம். ஆனால், அங்கிருந்த சிறந்த உணவகங்கள் இலவசமில்லை. அந்த வானம் இப்போதும் உள்ளது. ஆனால், அது நீலமாக இல்லை, சாம்பல் கலந்த மஞ்சளாக உள்ளது. சில பழைய உணவகங்களும் இப்போது உள்ளன. ஆனால், அவை பழைய தரத்துடன் இல்லை. அந்த உணவகங்களைப்பற்றிய தங்களுடைய தனிப்பட்ட நினைவுகளை அவ்வப்போது பேசுகிற பழைய வாடிக் கையாளர்கள்கூட இவற்றுக்கு அடிக்கடி வருவதில்லை.

என் தோழிகளில் ஒருவர், தில்லியின் பழைய உணவகங்களின் ஓவியங்கள் சிலவற்றின் புகைப்படங்களை எனக்கு அனுப்பினார். அவற்றைப் பார்க்கும்போது தோன்றிய நினைவுகளால் எனக்கு நாவில் எச்சில் ஊறியது. பேஸ்ட்ரீஸுக்கு வென்ஜெர்ஸ். நிருலா-வின் பிஸ்ஸா. டெ பால்-இன் குளிர்ந்த, நறுமணமூட்டப்பட்ட பால். கரீமின் கெபாப்கள். தந்தூரி உணவுக்கு, மோதி மகால். இப்படி இன்னும் பல.

அப்போதெல்லாம் பெரும்பாலான உணவகங்களைப் பாகிஸ்தான் பிரிவினைக்குப்பின் இங்கு வந்த பஞ்சாபிகள்தான் நடத்திவந்திருந்தார்கள். முகலாய உணவு என்று இப்போது அழைக்கப்படும் உணவை இவர்கள் கண்டறிந்தார்கள். அதன் முதன்மை அம்சம், நிறைய எண்ணெய், வெண்ணிற வெண்ணெய், பாலேடு. அது மிகவும் சுவையாக இருந்தது, கொலஸ்ட்ரால், LDL போன்றவற்றைப்பற்றி யாரும் கவலைப்படாததால் அதன் சுவை இன்னும் கூடியது. அப்போது எங்கள் மனங்களில் உணவும் மருந்தும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தன. நாங்கள் சாப்பிட்ட ஒவ்வொரு கவள உணவும் மோசமான குற்றவுணர்ச்சி யை உண்டாக்கவில்லை. இது எங்கள் பெற்றோர், தாத்தா, பாட்டிக்கும் பொருந்தும். அவர்கள் மன நிறைவோடு உண்டார்கள், மகிழ்ச்சியாக இறந்தார்கள்.

இந்த உணவகங்களில் தூய்மையான கழிப்பறைகளும் இருந்தன. அப்போதெல்லாம் பொதுக் கழிப்பறைகள் இல்லை. ஆண்கள் ஏதாவது ஒரு மரத்துக்குப் பின்னால் அல்லது சுவருக்கு முன்னால் அல்லது நிறுத்தப் பட்டிருக்கும் பல பேருந்துகளில் ஒன்றின்மீது சிறுநீர் கழிப்பார்கள். ஆனால், பெண்களால் அப்படிச் செய்ய இயலாது. அவர்களுக்கு இந்த உணவகங்கள் மிகவும் உதவின. அவர்கள் உள்ளே செல்வார்கள், இரண்டு ரூபாய்க்குக் கோக்கும் வறுவலும் வாங்குவார்கள், கழிப்பறையைப் பயன்படுத்திக்கொள்வார்கள். அவற்றில் சில குளிர்விக்கப்பட்டும் இருந்தன.

பழைய உணவகங்களின் மிகப் பெரிய நன்மைகளில் ஒன்று, அவற்றில் STD எனப்படும் தொலைதூர அழைப்பு வசதி பூட்டப்படாத தொலைபேசிகள் இருந்தன. இவை 1980களில் அறிமுகமாகின. இந்த உணவகங்களில் நீங்கள் இரண்டு ரூபாய் என்கிற பெரிய தொகையைக் கொடுத்து யாரையும் அழைக்கலாம். அவர்கள் அதை உள்ளூர் அழைப்பு என்று நினைத்துக்கொள்வார்கள். ஆனால், நீங்கள் இந்தியாவில் யாரையும் அழைக்கலாம். நீங்கள் யாரை அழைக்கிறீர்கள் என்று அவர்களால் பார்க்க இயலாது. அத்துடன், நீங்கள் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். நான் இந்த ஏமாற்றில் சிறந்து விளங்கினேன். ஆனால், நான் எப்போதும் நிறைய டிப்ஸ் வைப்பேன். அதுதான் எனக்கு நியாயமாகத் தோன்றியது.■

THE MAGIC OF ROTARY





Rotary District 3212



# ROTARY KARMAVEERAR KAMARAJAR HEART CARE BUS



**Heart care bus is a Clinic on wheels. It goes to multiple locations throughout the Rotary International District 3212.**

Rotary International District 3212 shares the vision of 'Karmaveerar Bharat Ratna K.Kamarajar' in uplifting the quality of life in rural Tamilnadu. Rotary Heart Care bus takes the privilege to serve the underprivileged villages and towns to take Heart Check-ups and save their lives by availing due medical treatment for heart problems. **Thanks to Kauvery Hospital, Tirunelveli.**

## HEART CARE BUS FEATURES

- Digitalized BMI Vital Screening
- Electro Cardiogram (ECG)
- Echo Cardiogram
- Defibrillator
- Physician Consultation
- Telemedicine Consultation

## HEART CAMP DETAILS as on 11.11.2024

| No.of Beneficiaries | | 3,052 |
|---|---|---|
| No.of ECG Done | No.of ECHO Done | No.of Patients Referred to Hospital |
| 1445 | 753 | 183 |



**GG- 2341081**

**International Partners: Rotary Club of LAS VEGAS WON**

**RID District 5300**

Primary Contact :
Rtn.A.S.P.Arumugaa Selvan

International Partner
PDG.Rtn.Chehab El Awar



LEKHA ads/ Dec 24/ Rotary

Clubs to Contact for Heart Care Camp **Rtn. T. SUDALAIVEL** - +91 97509 55445 Rotary club of Virudhunagar Idhayam

ADVT.

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.




ADVT.